


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI Volume- 3 Issue:220 24-02-2026 செவ்வாய்க்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

24.02.2026 மாசி 12
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.31

திதி:
இன்று காலை 7.49 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

நட்சத்திரம்:
இன்று மாலை 3.47 வரை கார்த்திகை பின்பு ரோகிணி.

யோகம் :
இன்று காலை 8.07 வரை ஐந்திரம் பின்பு வைதிருதி.

கரணம் :
இன்று காலை 7.49 வரை வணிசை பின்பு மாலை 5.59 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.30 வரை யோகம் சரியில்லை பின்பு மாலை 3.47 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 3.47 வரை சித்திரை பின்பு சுவாதி

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

எமகண்டம்
காலை 9.00 – 10.30

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று அஷ்டமி நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

# தமிழ்நாட்டில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள்!

## அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு




**சென்னை, பிப்.24:**

தமிழகத்தில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள் இருப்பதாக, மாநில தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2025-ல் தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 6.41 கோடியாக இருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 5.67 கோடியாக குறைந்துள்ளதால், சமீபத்திய எஸ்ஐஆர் நடவடிக்கை மூலம் தமிழகத்தில் நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை 74 லட்சமாக உள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு "27.10.2025 தேதியின் நிலவரப்படி, 6,41,14,587 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தனர். சிறப்பு தீவிர திருத்தம் 2026-இன் கீழ் கணக்கெடுப்பு கட்டம் முடிந்த பிறகு, மொத்தம் 5,43,76,756 வாக்காளர்களின் பெயர்களைக் கொண்ட வரைவு பட்டியல் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 19.12.2025 முதல் 30.01.2026 வரையிலான ஏற்புரைகள் மற்றும் மறுரைப்புரைகளுக்கான காலத்தில், 27.53 லட்சம் தகுதியுள்ள வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மேலும் 4.23 லட்சம் தகுதிபெறாத நபர்கள் நீக்கப்பட்டனர். அதன்படி, தகுதியுள்ள வாக்காளர்களைக் கொண்ட 2026-ன் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

மேலும், இறுதி வாக்காளர் பட்டியலின்படி, செங்கல்பட்டு மாவட்டத்திற்குட்பட்ட 27-சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 5,36,991 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 2,62,621; பெண்கள் 2,74,254 ; மூன்றாம் பாலினத்தவர் 116).

இதற்கு அடுத்தப்படியாக இரண்டாமிடத்தில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16-எழும்பூர் சட்டமன்ற தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,34,879 ஆவர் (ஆண்கள் 65,677, பெண்கள் 69,149: மூன்றாம் பாலினத்தவர் 53).

வாக்காளர் பட்டியலினை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான https://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம். அதில் வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சரிபார்த்துக் கொள்ளலாம். வாக்காளர் பதிவு அலுவலரின் முடிவுக்கு எதிரான மேல்முறையீட்டை மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 பிரிவு 24(a) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960-இன் விதி 27 இன் கீழ் 15 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

முதல் மேல்முறையீட்டு தீர்ப்பில் அதிருப்தி அடைந்தால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம். 1950 பிரிவு 24(b) மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960-இன் விதி 27-ன்படி மாவட்ட ஆட்சியரின் உத்தரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தலைமை தேர்தல் அதிகாரியிடம் இரண்டாவது மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

வாக்காளர்கள் தங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை சரிபார்த்து, தேவையானால் பெயர் சேர்க்க (படிவம்-6), திருத்தம் (படிவம்-8) அல்லது நீக்கம் (படிவம்-7) செய்வதற்கான விண்ணப்பங்களை இணையம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

18-19 வயதுக்குட்பட்ட முதல் முறையாக வாக்காளர்களாக பதிவு செய்தவர்களுக்கும், திருத்தங்களுக்கு விண்ணப்பித்த அல்லது தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்த ஏற்கனவே உள்ள வாக்காளர்களுக்கும், அவர்களின் பதிவு செய்யப்பட்ட குடியிருப்பு முகவரிக்கு விரைவு அஞ்சல் மூலம் வாக்காளர் அடையாள அட்டை (EPIC) வழங்கப்படும்.

தொடர் திருத்தக் காலம், 23.02.2026 முதல் நடைமுறையில் உள்ளது. 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்த, ஆனால் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயர்கள் இல்லாத அனைத்து தகுதியுள்ள குடிமக்களும் பின்வரும் வழிகளில் விண்ணப்பிக்கலாம்:

1. வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6-ஐ சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.


2. இணையம் மூலமாக https://voters.eci.gov.in/ என்ற வலைதளத்திலும் விண்ணப்பிக்கலாம்.

3. கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து 'Voter Helpline App' செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலம் விண்ணப்பிக்கலாம் அல்லது வாக்குச்சாவடி நிலை அலுவலர் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

4. பொதுமக்கள் மாவட்ட தொடர்பு மையங்களை '1950' என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம்.

தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் 1800-4252-1950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணுடன் மாநிலத் தொடர்பு மையம் இயங்கி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவட்டவாரியாக வாக்காளர்கள் எண்ணிக்கை!




தமிழ்நாட்டின் மொத்த வாக்காளர்கள்: 5,67,07,380.

ஆண்கள்: 2,77,38,925,
பெண்கள்: 2,89,60,838,
மூன்றாம் பாலினத்தவர்: 7,617.
வாக்காளர்கள் நீக்கம்: 74,07,207
வாக்காளர்கள் சேர்ப்பு: 27,53,796

**இதைத் தொடர்ந்து மாவட்டவாரியாக வாக்காளர் எண்ணிக்கையையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டத்தில் 31,57,413 பேர், அதைத் தொடர்ந்து சென்னையில் 28,30,936 பேர், சேலம் மாவட்டத்தில் 27,55,830 பேர் உள்ளனர்.**

| | | |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 31,57,413 |
| 2. | சென்னை | 28,30,936 |
| 3. | காஞ்சிபுரம் | 11,92,194 |
| 4. | வேலூர் | 11,33,587 |
| 5. | கிருஷ்ணகிரி | 15,54,040 |
| 6. | தருமபுரி | 12,40,108 |
| 7. | திருவண்ணாமலை | 19,19,159 |
| 8. | விழுப்புரம் | 15,86,653 |
| 9. | சேலம் | 27,55,830 |
| 10. | நாமக்கல் | 13,10,951 |
| 11. | ஈரோடு | 17,40,222 |
| 12. | நீலகிரி | 5,47,133 |
| 13. | கோவை | 26,96,813 |
| 14. | திண்டுக்கல் | 16,72,075 |
| 15. | கரூர் | 8,45,164 |
| 16. | திருச்சி | 21,26,303 |
| 17. | பெரம்பலூர் | 5,55,131 |
| 18. | கடலூர் | 20,15,796 |
| 19. | நாகப்பட்டினம் | 5,27,947 |
| 20. | திருவாரூர் | 9,79,652 |
| 21. | தஞ்சாவூர் | 19,51,445 |
| 22. | புதுக்கோட்டை | 12,98,907 |
| 23. | சிவகங்கை | 11,10,599 |
| 24. | மதுரை | 24,66,954 |
| 25. | தேனி | 10,33,373 |
| 26. | விருதுநகர் | 14,97,417 |
| 27. | ராமநாதபுரம் | 11,23,029 |
| 28. | தூத்துக்குடி | 13,76,624 |
| 29. | திருநெல்வேலி | 12,53,264 |
| 30. | கன்னியாகுமரி | 15,10,550 |
| 31. | அரியலூர் | 5,22,954 |
| 32. | திருப்பூர் | 19,55,283 |
| 33. | கள்ளக்குறிச்சி | 11,09,911 |
| 34. | தென்காசி | 12,64,411 |
| 35. | செங்கல்பட்டு | 22,60,036 |
| 36. | திருப்பத்தூர் | 9,11,599 |
| 37. | ராணிப்பேட்டை | 9,44,701 |
| 38. | மயிலாடுதுறை | 7,29,216 |

## நல்லகண்ணு உடல் நிலையில் பின்னடைவு; மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

**சென்னை, பிப்.24:**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு (வயது 101). வயதுமூப்பின் காரணமாக வீட்டில் ஓய்வு எடுத்து வந்தார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி தீடிரென வீட்டில் தவறி விழுந்ததில் காயமடைந்தார்.

இதையடுத்து அவர் சென்னை சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் அவர் வீடு திரும்பினார்.

இந்த நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதி மீண்டும் அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் பின்னர் சிகிச்சை முடிந்து கடந்த மாதம் (ஜனவரி) 8 ஆம் தேதி குணமடைந்து வீடு திரும்பினார். தொடர்ந்து வீட்டில் ஓய்வு எடுத்து வந்த நல்லகண்ணுக்கு மீண்டும் கடந்த 1 ஆம் தேதி மூச்சுத் திணறல் ஏற்பட்டது. பின்னர் உடனடியாக அவர் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்து வந்த நல்லகண்ணுவின் உடல்நிலை பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக வெளியாகி உள்ளன. இதையடுத்து மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருவதாகவும் கூறப்படுகிறது. கடந்த 20 நாட்களுக்கும் மேலாக அவர் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரது உடல்நிலை குறித்த தகவல் பலரையும் அதிர்ச்சியடைய செய்துள்ளது.

# விஜய் கொடுத்த வாக்குறுதி; எனக்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர்

## விஜய் பேச்சு

**வேலூர், பிப்.24:**

வருகிற சட்டப்பேரவைத் தேர்தல், தனக்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர் என வேலூரில் நடைபெற்ற கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் பேசியுள்ளார்.

வேலூர் மாவட்டம் அகரம்சேரியில் தமிழக வெற்றிக் கழகத்தின் மக்கள் சந்திப்பு மற்றும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தவெக தலைவர் விஜய் பேசியதாவது,

"மக்களை நேசிக்கும் ஒரு நல்ல தலைமை இல்லாததால் இத்தனை ஆண்டுகளாக வேறு வலியில்லாமல் ஸ்டாலின் சார் கொடுத்த பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றம் அடைந்த மக்களுக்கு சரியான நேரத்தில் ஒரு வெகுஜன மக்கள் இயக்கமாக வந்ததுதான் நம்முடைய தவெக.

நாம் ஒவ்வொரு வீட்டில் உயிராக உணர்வாக இருக்கிறோம். ஒவ்வொரு ஊராகச் சென்று உங்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்றுதான் எனக்கு ஆசை. ஆனால் எதிர்க்கட்சியாக இருக்கும் நமக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சிகள் பற்றி உங்கள் எல்லாருக்கும் தெரியும். அதனால் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன்.

நம்முடைய ஆட்சி அமைந்ததும் நான் ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரடியாக வந்து என்னுடைய சொந்தங்களை எல்லாம் சந்திப்பேன்.

வரும் தேர்தல் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான தேர்தல். தமிழ்நாட்டுக்கும் தில்லிக்கும்தான் தேர்தல் என்றும் தமிழ்நாட்டுக்கும் என்டிஏ-க்கும்தான் தேர்தல் என்றும் முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். இதென்ன நாடாளுமன்றத் தேர்தலா? பிரதமர் பதவிக்கு போட்டியிடுகிறாரா?



தமிழ்நாட்டு மக்களுக்கு எந்த தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று தெரியும். தமிழ்நாட்டு மக்கள் மிகத் தெளிவான சூப்பர் மக்கள்.

உண்மையில் இந்த தேர்தல் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழலுக்கும் நடக்கிற போர். தமிழ்நாட்டு மக்களுக்கும் லஞ்சத்துக்கும் நடக்கிற போர். சரியான நிர்வாகம் செய்யாத திமுக அரசுக்கும் தவெகவுக்கும் இடையே நடக்கிற போர். தமிழ்நாட்டு மக்களுக்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர். விஜய்க்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர். தமிழ்நாடு தான் விஜய், விஜய் தான் தமிழ்நாடு '

தூயசக்தி தவெகவுக்கும் தீயசக்தி திமுகவுக்கும் இடையே நடக்கிற போர்.

ஸ்டாலின் சார் ஆட்சியில்தான் திமுக சூப்பர்ஸ்டார் மாநிலமாக இருக்கிறது என்று சொல்கிறார். காமராஜர், அண்ணா, எம்ஜிஆர் ஆட்சியில் தமிழ்நாடு சூப்பர் மாநிலமாக இருந்தது. ஆனால் இப்போது சூப்பர் ஸ்டாண்ட்அப் காமெடி செய்பவரின் மாநிலமாக மாறியுள்ளது. மக்களே, உங்களுக்காக தடைகள், சூழ்ச்சிகள் அனைத்தையும் கடந்து 2026 தேர்தலில் தவெக தில்லாக நிற்கும்.

ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் நடக்கிற தேர்தல் அல்ல. 50 ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் தேர்தல் மாதிரி. இது அதிசய தேர்தல். ஒவ்வொரு தேர்தலிலும் கட்சிகள் அவர்களுடைய எதிரிகளைத்தான் எதிர்ப்பார்கள். ஆனால், இந்த தேர்தலில் ஒட்டுமொத்தமாக அனைவரும் சேர்ந்து என்னை எதிர்க்கிறார்கள். ஏனென்றால் விஜய், லஞ்சம், ஊழலை எதிர்க்கிறான், மக்களோடு மக்களாக நிற்கிறான். மக்கள் விஜய்யுடன் இருக்கிறார்கள். அந்த வெறுப்பில்தான் என்னை எதிர்க்கிறார்கள். ஆனால் வரும் தேர்தலில் திமுகவும் தவெகவுக்கும்தான் போட்டியே.

வழக்கமாக தேர்தலில் நீங்கள் சென்று ஓட்டு போடுவீர்கள். அவ்வளவுதான். ஆனால் இந்த தேர்தலில் நீங்கள் பங்கெடுத்துக்கொள்ள போகிறீர்கள். உங்கள் வீட்டில் ஒருவர்தான் வேட்பாளர்" என்று பேசினார்.








# திருக்குறள் குறள்-540

**உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்**



ஒருவன் எண்ணியதை விடாமல் எண்ணி (சோர்வில்லாமல்) இருக்கப் பெற்றால், அவன் கருதியதை அடைதல் எளிதாகும்.

## சிந்திக்க ஒரு நொடி




பூட்டைப் போல் விசுவாசமாக இரு..

அது உடைந்தாலும் தன் சாவியை மாற்றாது.

**உஷாமுத்துராமன்.**

## முனுக்கப்பட்டு பச்சையம்மன் ஆலய கும்பாபிஷேக விழா



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே உள்ள முனுக்கப்பட்டு பச்சையம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது கும்பாபிஷேகவிழாவினைக் கான உள்ளூர் வெளியூர் மாவட்டங்களில் இருந்தும் மற்றும் சென்னையில் இருந்து திரைத்துறையினர் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## அங்காளபரமேஸ்வரி அம்மன் பிரம்மோற்சவ 7 ஆம் நாள் ரத உற்சவம்



ஆற்காடு வட்டம் காவனூர் கிராமத்தில் அருள்மிகு அங்காளபரமேஸ்வரி அம்மன் பிரம்மோற்சவ 7 ஆம் நாள் ரத உற்சவம் மற்றும் மூலவர் அலங்காரம் . ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருகைதந்து பரவசம் . விழா ஏற்பாடுகளை நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர் .

## தவனபங்களா புறப்பாடு




ஸ்ரீ பார்த்தசாரதி தவனோத்ஸவம்-1 தவனபங்களா புறப்பாடு

# மீண்டும் அத்திவரதர்...

**தஞ்சாவூர், பிப்.24:** தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் பிரம்மன் கோயில் தெருவில் வரதராஜப் பெருமாள் கோயில் உள்ளது. இந்த மூலவர் சந்நிதிக்கு கிழக்கில் உள்ள பாதாள அறையில் அத்தி மரத்தாலான, சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

இந்த அத்திவரதர் சிலை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியில் எடுக்கப்பட்டு, பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டு, மீண்டும் பாதாள அறைக்கு கொண்டு செல்லப்படும்.

அதன்படி, 12 ஆண்டுகளுக்கு பிறகு பாதாள அறையில் இருந்து எடுக்கப்பட்டு, மார்ச் 1-ந் தேதி முதல் 10 நாட்களுக்கு பக்தர்கள் தரிசனம் செய்யவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.



1915-ஆம் ஆண்டுக்குப் பின் பல்வேறு காரணங்களால் இந்த சிலை வெளியே எடுத்து வைக்கப்படவில்லை. சுமார் 98 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த 2013-ஆம் ஆண்டு இந்த சிலை வெளியே எடுக்கப்பட்டு, பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் பாதாள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

இந்த நிலையில், 12 ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்ரீதேவி, பூதேவி உடனாய அத்திவரதர் சிலை மார்ச் 01-மந் தேதி வெளியில் எடுக்கப்படவுள்ளது. சிறப்பு பூஜைகளுக்குப்பிறகு பக்தர்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டு, மார்ச் 10-ந் தேதி வரை இந்த சிலையை பக்தர்கள் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகம விதிகளின்படி காலை 08 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, மாலை 05 மணி முதல் இரவு 08.30 மணி வரை தைலக்காப்பு, புஷ்ப சேவை, ஊஞ்சல் சேவைகளை பக்தர்களே செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**ஓம் நமோ நாராயணா**

## அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாமில் பணி நியமன ஆணையை இளைஞர்களுக்கு வழங்கும் விழா

**திருவண்ணாமலை,பிப்.24:** திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் வட்டம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம்,ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் மாண்புமிகு சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் பணி நியமன ஆணைகளை இளைஞர்களுக்கு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப அவர்கள், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் உயர்திரு. எம்.எஸ். தரணிவேந்தன் அவர்கள், செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஒ. ஜோதி அவர்கள் மற்றும் துறையை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தூத்துக்குடி மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல்



தூத்துக்குடி மாவட்டத்தில் 6 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இறுதி வாக்காளர் பட்டியலை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் கலெக்டர் இளம்பகவத் நேற்று வெளியிட்டார்.

## நீர்மோர் வழங்கல்



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவில் மாசிப் பெருவிழாவினை முன்னிட்டு பதினான்காம் ஆண்டு கடலிபத்தியப் பேட்டை பருவதராஜகுல மீனவர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் சார்பில் நீர்மோர் வழங்கப்பட்டது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## இறுதி வாக்காளர் பட்டியல் 2026 வெளியீடு



திருவண்ணாமலைமாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் சிறப்பு தீவிர திருத்தம் 2026 இறுதி வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர் முன்னிலையில் வெளியிட்டார். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பெண்கள் பள்ளி புதிய வகுப்பறை கட்டிட திறப்பு விழா, விலையில்லா மிதி வண்டி வழங்கும் விழா



**திருவண்ணாமலை, பிப்.24:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா, அரசினர் பெண்கள் மேல்நிலை பள்ளி வகுப்பறை கட்டிட திறப்பு விழா,மிதிவண்டி வழங்கும் விழா மாண்புமிகு சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்தார். விலையில்லா மிதிவண்டிகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். உடன் கீழ்பென்னாத்தூர் ஒன்றிய செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி தலைவர் சரவணன் அவர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வாடிப்பட்டியில் சிலம்பம் பட்டயத்தேர்வு



**வாடிப்பட்டி, பிப்.24:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி கணே சா விளையாட்டு அகாடமி மற்றும் உலக சிலம்பம் விளையாட்டு சங்கம் சார்பாக மாணவ - மாணவிகளுக்கான சிலம்பம் பட்டய தேர்வு சென்சாய் கணேசன் தலைமையில் நடந்தது. இதில் தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு வாடிப் பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேசன் தலைமை தாங்கி சான்றிதழ் வழங்கினார். இளவரசன் முன்னிலை வகித்தார்.

செயலாளர் ராஜேஸ்வரி வரவேற்றார். இதில் மாணவ மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் கீர்த்திகா தேவி நன்றி கூறினார்.

## உலக அமைதி புத்த கோபுரம் ஓராண்டு நிறைவு விழா

**சங்கரன்கோவில், பிப்.24:** சங்கரன்கோவில் அருகே உலக அமைதிக்காக புத்த கோபுரம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த புத்த பிக்குவால் கடந்த 25 ஆண்டுகளாக கட்டப்பட்டு ஓராண்டு நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது .120 அடி உயரம் உடையது இந்த கோபுரம். நிகழ்ச்சியில் சர்வதேச புத்த துறவிகள் பலர் கலந்து கொண்டு உலக அமைதிக்கான பிரார்த்தனை செய்தனர். முன்னதாக காந்திஜியின் புகைப்பட கண்காட்சியை சுதந்திரப் போராட்ட தியாகியும் மேனாள் மாவட்ட ஆட்சித் தலைவரும் மண்ணின் மைந்தருமான



லட்சுமி காந்தன் பாரதி. இ. ஆ. ப.அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார்கள். மேனாள் வட்டார வளர்ச்சி அலுவலர் அமரர் முத்தையா அவர்கள் ஐந்து ஏக்கர் நிலத்தை புத்தர் கோவில் அமைக்க தானமாக வழங்கி உள்ளார்கள். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் பரதநாட்டியம் கும்மி பாட்டு முதலான நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. புத்தபிக்குனி லீலாவதி ஏற்பாடுகளை செய்திருந்தார். மேனாள் திட்ட அலுவலர் சுப்பா ராஜு உட்பட சுற்று வட்டார பகுதியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். மன அமைதிக்கான சிறந்த ஸ்தலம் என்றால் மிகையல்ல.

## வாக்காளர் விழிப்புணர்வு பேரணி




கோவில்பட்டியில் நேற்று , வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை கடம்பூர் ராஜு எம்.எல்.ஏ. தலைமையில், டிஎஸ்பி ஜெகநாதன் தொடங்கி வைத்தார்.

## குடியிருப்போர் சங்க விழா



ஆவடி மாநகராட்சி மாடர்ன்சிட்டி குடியிருப்போர் சங்க விழாவில் அமைச்சர் நாசர் உரைஆற்றினார்.

## பிளஸ் 2 தனித் தேர்வர்களுக்கான அனுமதிச் சீட்டு வெளியீடு

**சென்னை, பிப்.24:**

தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத் தேர்வெழுதும் தனித் தேர்வாளர்களுக்கான அனுமதிச் சீட்டு பிப்ரவரி 23 அன்று வெளியிடப்பட்டதாக தேர்வுத் துறை இயக்குநர் கே. சசிகலா அறிவித்துள்ளார். பிளஸ் 2 பொதுத் தேர்வு மார்ச் 2 முதல் 26 வரையும், பிளஸ் 1 (அரியர்) தேர்வு மார்ச் 2 முதல் 27 வரையும் நடைபெற வுள்ளன. பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 இரு தேர்வுகளுக்கும் ஒரே அனுமதிச் சீட்டு மட்டுமே வழங்கப்படும். தனித் தேர்வர் கள் WWW.DGE.TN.GOV.IN என்ற வலைதளத்தில் அனு மதிச் சீட்டை பதிவிறக்கிக் கொள்ளலாம். பள்ளி மாணவர் களுக்கான தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு அடுத்த வாரம் அவரவர் பள்ளிகள் மூலம் வழங்கப்படும்.

## 10 ஆம் வகுப்பு செய்முறை தேர்வு தொடக்கம்

**சென்னை, பிப்.24:**

தமிழகத்தில் நடப்பு கல்வியாண் டிற்கான எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகள் மார்ச் 11 முதல் தொடங்கவுள்ள நிலையில், 10 ஆம் வகுப்பு அறிவியல் செய்முறை தேர்வுகள் பிப்ரவரி 23 முதல் 28 வரை நடைபெறும் என அரசு தேர்வுகள் இயக்குநர் அறிவித்துள்ளார். காலை 9 மணி முதல் 11 மணி வரையும், பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையும் இரு வேளைகளில் தேர்வு நடைபெறும். மாற்றுத்திறனாளி மாணவர்கள் விரும்பி னால் தலைமையாசிரியரிடம் கடிதம் அளித்து தேர்வில் இருந்து விலக்கு பெறலாம். தேர்வு முடிந்த பின் மதிப்பெண் பட்டியல்களை மார்ச் 2-க்குள் சம்பந்தப்பட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வேளாண் கல்லூரி மாணவிகளின் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

**தஞ்சாவூர், பிப்.23:**

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அருகே உள்ள கீழபுனல்வாசல் கணேசா மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில், மழைநீர் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. உசிலம்பட்டி ஆர்.வி.எஸ். வேளாண்மைக் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகள், தங்களது கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக இப்பேரணியை ஒருங்கிணைத்தனர். "மழைநீரைச் சேமிப்போம், பூமியைப் பாதுகாப்போம்" என்ற முழக்கங்களுடன் நடைபெற்ற இந்நிகழ்வு, கல்லூரி இயக்குநர் பாண்டியராஜன், வேளாண் திட்டப் பொறுப்பாளர்கள் சுந்தரவடிவு, உதவிப் பேராசிரியர் அருண்குமார், இணை பேராசிரியர் கற்பகவல்லி, உதவி பேராசிரியர் ராமலிங்கம் வழிகாட்டுதலின்படி அமைந்தது. இதில், கல்லூரி மாணவிகள் குழுவினர், மழைநீர் சேமிப்பு முறைகள் குறித்துப் பள்ளி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## வேளாண் கல்லூரி மாணவர்களின் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

**தஞ்சாவூர், பிப்.24:**

தஞ்சையை அடுத்த செங்கிப்பட்டி கிராமத்தில் உள்ள ஆர்.வி.எஸ் வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமங்களில் தங்கி கள ஆய்வு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனொரு பகுதியாக, திருக்காட்டுப்பள்ளி அருகே மைக்கேல்பட்டி, தூய இருதய மேல்நிலைப் பள்ளியில் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, கல்லூரி இயக்குநர் பாண்டியராஜன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி ஒருங்கிணைப்பில் போதை ஒழிப்புப் பேரணி நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் கேத்தரின் மற்றும் உதவித் தலைமை ஆசிரியர் ஸ்டெல்லா ராணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண், பள்ளி மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி பேரணியில் பங்கேற்றனர்.

## தஞ்சையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**தஞ்சாவூர், பிப்.24:**

தஞ்சை கோட்டத்திற்குட்பட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் பிப்.24 ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் தஞ்சை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. எனவே, தஞ்சை கோட்டத்திற்குட்பட்ட தஞ்சாவூர், திருவையாறு, பூதலூர் மற்றும் ஒரத்தநாடு வட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில், விவசாயம் தொடர்பான தங்களது கருத்துக்களை தெரிவித்து பயன்பெறும்படி தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் நித்யா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கடந்த 5 ஆண்டுகளில் அறநிலையத் துறைக்கு ரூ.1,190 கோடி நிதி: 4,332 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தியதாக அரசு பெருமிதம்






**சென்னை, பிப்.24:**

வரலாற்றில் இல்லாத அளவுக்கு கடந்த 5 ஆண்டு காலத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ.1,190 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 2021 மே 7-ம் தேதி தமிழக முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்றது தொடங்கி 2026 பிப்.22 (நேற்று) வரை, 20 முதல் 400 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடைபெறாத 4,332 கோயில் களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 12,931 கோயில்களில் ரூ.8,101 கோடி மதிப்பீட்டில் 29,479 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ரூ.4,346 கோடி மதிப்பிலான 16,756 பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும், நன்கொடையாளர் நிதி மூலம் ரூ.2,001 கோடி மதிப்பீட்டில் 12,220 பணிகள் நடந்து வருகின்றன. அதேபோல, 1,055 கோயில்களுக்குச் சொந்தமான ரூ.8,436 கோடி மதிப்பிலான 8,107 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களுக்கான திருப்பணி நிதியுதவி ரூ.1 லட்சத்தில் இருந்து ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டு, 5,000 கோயில்களுக்கு ரூ.106 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

1,000 ஆண்டுகள் பழமையான கோயில்களை புனரமைத்து பாதுகாக்கும் சிறப்பு திட்டத்தின்கீழ், அரசு நிதி ரூ.425 கோடி, கோயில் நிதி, நன்கொடையாளர் நிதி, பொதுநல நிதி உட்பட மொத்தம் ரூ.560 கோடி மதிப்பீட்டில் 352 கோயில்கள் திருப்பணிக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 88 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில் உள்ளிட்ட 10 முக்கிய கோயில்களில் ரூ.1,770 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் பெருந்திட்ட வரைவின்கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

21 கோயில்களில் பயன்பாடு இல்லாத தங்க நகைகள் உள்ளிட்டவற்றை மத்திய அரசின் தங்க உருக்காலையில் உருக்கி 1,074 கிலோ 123 கிராம் சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி, வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் கோயில்களுக்கு ஆண்டுதோறும் ரூ.17.81 கோடி வருமானம் கிடைக்கிறது.

கோயில்கள் சார்பில் ரூ.70 ஆயிரம் மதிப்புள்ள சீர்வரிசைகளுடன் 2,800 இலவச திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒரு கால பூஜை திட்டத்தில் உள்ள 19,000 கோயில்களுக்கான வைப்பு நிதி ரூ.2.50 லட்சமாக உயர்த்தப்பட்டு, இதற்காக மட்டும் ரூ.335 கோடி அரசு நிதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில், முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான 5 ஆண்டுகால ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறைக்கு, வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ரூ.1,189.83 கோடி அரசு நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தனியார் இடத்தில் மின்வாகன சார்ஜிங் மையம்: நில உரிமையாளர், நிறுவனம் ஒருங்கிணைக்க இணையதளம்

**சென்னை, பிப்.24:**



தனியார் இடத்தில் சார்ஜிங் மையம் அமைக்க நில உரிமையாளர்கள், நிறுவனங்களை ஒருங்கிணைக்க இணையதளத்தை மின்வாரியம் ஏற்படுத்தவுள்ளது. நாடு முழுவதும் வாகனங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்க மின்சார வாகனங்களைப் பயன்படுத்த மத்திய, மாநில அரசுகள் அறிவுறுத்தின.

இதற்காக பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தற்போது மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்கள், கார், பேருந்து உள்ளிட்ட வாகனங்களின் பயன்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இந்த வாகனங்களுக்கு எளிதான சார்ஜிங் வசதி கிடைக்க மாநகரில் தலா 3 கி.மீ. தொலைவிலும், நெடுஞ்சாலைகளில் தலா 25 கி.மீ. தொலைவிலும் ஒரு சார்ஜிங் மையம் அமைக்கப்பட உள்ளது.

அரசுத் துறைகள் நேரடியாகவும், தனியார் நிறுவனங்கள் வாயிலாகவும் சார்ஜிங் மையங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் சார்ஜிங் மையம் அமைக்க இடம் கிடைப்பது சிரமமாக உள்ளது.

எனவே தனியார் இடத்தில் சார்ஜிங் மையம் அமைக்க, இடத்தின் உரிமையாளர் மற்றும் சார்ஜிங் மையம் அமைக்கும் நிறுவனத்தை ஒருங்கிணைக்க, தனி இணையதளத்தை உருவாக்கும் பணியில் தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: இந்த இணையதளம் வாயிலாக, சார்ஜிங் மையம் அமைக்க இடம் வழங்க விரும்பும் உரிமையாளர்கள் தகவல் தெரிவிக்கலாம். அந்த தளத்தில் நிறுவனங்களின் விவரங்களும் இருக்கும். இருதரப்பும் தங்களுக்குள் நேரடியாக பேசி சார்ஜிங் மையம் அமைக்கலாம்.

இடத்தின் உரிமையாளருக்கு வாடகை வருவாய் கிடைக்கும். நிறுவனங்களுக்கு விரைவாக இடம் கிடைக்கும் என்பதால், அதற்கு ஏற்ப சார்ஜிங் மையங்களும் துரிதமாக அமைக்கப்படும். எனவே மின்சார வாகனங்களுக்கு தடையின்றி சார்ஜிங் வசதி கிடைக்கும். இந்தப் பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்

## கிளாம்பாக்கம் ரயில் நிலைய பணிகள் நிறைவு: விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு திறக்க திட்டம்

**சென்னை, பிப்.24:**



போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் புதிய பேருந்து நிலையம் கடந்த 2023-ம் ஆண்டு டிசம்பரில் திறக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்தின் அருகில், தாம்பரம் - செங்கல்பட்டு ரயில் பாதை இருக்கிறது.

இருப்பினும், ரயில் நிலையம் இல்லை. இதனால் இங்கு மின்சார, விரைவு ரயில்களை நிறுத்த முடியாத நிலை இருக்கிறது. இங்கு ரயில் நிலையம் அமைக்க பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, ரூ.20 கோடி மதிப்பீட்டில் வண்டலூர் - ஊரப்பாக்கம் இடையே கிளாம்பாக்கத்தில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்படுவதற்கு தெற்கு ரயில்வே சென்னை ரயில்வே கோட்டம் கடந்த 2024-ம் ஆண்டு அக்டோபரில் ஒப்பந்தப்புள்ளி கோரியது. இதையடுத்து, ஒப்பந்தம் வழங்கப்பட்டு, ரயில் நிலைய கட்டுமானப் பணிகள் தொடங்கி, அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன.

3 கட்டங்களாக பணி: அதே நேரத்தில், புதிய ரயில் நிலையத்தையும் ஜிஎஸ்டி சாலையின் மறுபுறம் அமைந்துள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தையும் இணைக்கும் வகையில், பிரம்மாண்ட ஆகாய நடை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெறுகிறது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், 3 கட்டங்களாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த நடைப்பாலத்தில் பயணிகளின் வசதிக்காக, இருபுறமும் மின்தூக்கிகள் அமைக்கப்பட உள்ளன. ஒட்டுமொத்தப் பணிகளும் இந்த மாதத்துக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரி ஒருவர் கூறுகையில், "கிளாம்பாககம் ரயில் நிலைய பணிகள் நிறைவடைந்துள் ளன. அதாவது ரயில்வே தரப்பில் அனைத்து பணிகளும் நிறைவடைந்துவிட்டன. மாநில அரசு சார்பில் மேற்கொள்ளப்படும் பணி நடைபெறுகிறது. இந்நிலையம் விரைவில் திறக்கப்படும்" என்றார்.

இவ்விழாவில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத்தலைவர் பி.வி.பி.முத்துக்குமார், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில கூடுதல் திட்ட இயக்குநர் எஸ்.உமா, இணை இயக்குநர்கள் வை.குமார், ஆனந்தி, சென்னை முதன்மைக் கல்வி அலுவலர் கபிர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## காலையில 'பால் டீ'க்கு பதிலாக பூண்டு டீ

நம்மில் பலருக்கும் காலையில் எழுந்தவுடன் சூடாக பால் காய்ச்சி ஒரு கப் டீ அல்லது காபி குடிப்பது வழக்கம். ஆனால், பால், சர்க்கரை போட்ட டீக்கு பதிலாக, பூண்டு மட்டுமே பயன்படுத்தி டீ போட்டு குடிப்பதைப் பற்றி யோசித்திருக்கிறீர்களா?

பூண்டு டீயால் நம் உடலுக்குக் கிடைக்கும் நம்பமுடியாத நன்மைகள் மற்றும் அதைச் சரியான முறையில் எப்படித் தயாரிப்பது என்பது குறித்து மிகத் தெளிவாக இந்தப் பதிவில் பார்க்கலாம் வாங்க.

பூண்டு டீயின் மகத்தான நன்மைகள்!

1. பூண்டின் முழு மருத்துவ குணத்திற்கும் காரணம் அதில் உள்ள 'அல்லிசின்' என்ற வேதிப்பொருள் தான். பூண்டை நசுக்கும்போதுதான் இந்த அல்லிசின் உருவாகிறது. இது இயற்கையான ஆன்டி-பயாடிக் ஆகச் செயல்பட்டு, உடலில் உள்ள கெட்ட பாக்டீரியாக்கள் மற்றும் வைரஸ்களை அழிக்கிறது.

2. பூண்டு டீ தொடர்ந்து குடித்து வந்தால், இரத்தத்தில் உள்ள கெட்ட கொலஸ்ட்ரால் அளவு கணிசமாகக் குறையும். மேலும், இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்புகளை நீக்கி, இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது. இதனால் உயர் இரத்த அழுத்தம் கட்டுக்குள் வருவதுடன், மாரடைப்பு போன்ற இதய நோய்கள் வரும் அபாயமும் தடுக்கப்படுகிறது.

3. சளி, இருமல், காய்ச்சல் போன்ற தொந்தரவுகள் அடிக்கடி வருகிறதா? பூண்டு டீ ஒரு சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தியாகும். குறிப்பாக மழை மற்றும் குளிர்காலங்களில் இதைக் குடிப்பது தொண்டை கரகரப்பு மற்றும் நெஞ்சுச் சளியைக் கரைத்து வெளியேற்ற உதவும்.

4. உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களுக்குப் பூண்டு டீ ஒரு வரப்பிரசாதம். இது உடலின் மெட்டபாலிசத்தை அதிகரித்து, தேவையற்ற கொழுப்புகளை எரிக்க உதவுகிறது. மேலும், செரிமானக் கோளாறுகள், வாயுத் தொல்லை மற்றும் வயிறு உப்புசம் போன்ற பிரச்சனைகளையும் சரிசெய்கிறது.

பூண்டு டீ எப்படிச் சரியாகத் தயாரிப்பது?

பூண்டு டீ தயாரிக்க அதை அப்படியே முழுசாகப் போட்டுக் கொதிக்க வைத்தால் எந்தப் பலனும் இல்லை.

முதலில் 2 அல்லது 3 பல் பூண்டை எடுத்து, தோலுரித்து நன்றாக நசுக்கிக் கொள்ள வேண்டும். நசுக்கிய பூண்டை அப்படியே ஒரு 10 நிமிடம் காற்றில் விட்டுவிட வேண்டும். அப்போதுதான் அதில் உள்ள அல்லிசின் முழுமையாக வெளிப்படும்.

பின்னர், ஒரு டம்ளர் தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து, அதில் இந்த நசுக்கிய பூண்டைப் போட வேண்டும். அடுப்பை அணைத்துவிட்டு, ஒரு மூடி போட்டு 5 நிமிடம் மூடி வைக்கவும்.

பிறகு இதை வடிகட்டி, சுவைக்காகச் சிறிது எலுமிச்சைச் சாறு மற்றும் ஒரு ஸ்பூன் தேன் கலந்து மிதமான சூட்டில் குடிக்கலாம்.

யாரெல்லாம் குடிக்கக் கூடாது?

பூண்டு டீ நல்லதுதான், அதற்காகத் தினமும் லிட்டர் கணக்கில் குடிக்கக் கூடாது. ஒரு நாளைக்கு ஒரு கப் போதுமானது. அதிகமாகக் குடித்தால் நெஞ்செரிச்சல் அல்லது வயிற்றுப் புண் வரலாம்.

ஏற்கனவே தீவிரமான அல்சர் பிரச்னை உள்ளவர்கள், அறுவை சிகிச்சை செய்துகொள்ள இருப்பவர்கள், மற்றும் ரத்தம் மெலிதாவதற்கான மாத்திரைகள் சாப்பிடுபவர்கள் டாக்டரின் ஆலோசனை இல்லாமல் இதைக் குடிக்கக் கூடாது. கர்ப்பிணிப் பெண்களும் இதைக் கவனமாகக் கையாள வேண்டும்.

நமது சமையலறையே ஒரு பெரிய மருத்துவமனை தான். பல ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கும் மாத்திரைகளை விட, மிகக் குறைந்த செலவில் கிடைக்கும் பூண்டு நம் உடலுக்குச் செய்யும் நன்மைகள் அதிகம். காலை வேளையில் வெறும் வயிற்றில் இந்த ஆரோக்கியமான பூண்டு டீயைக் குடித்து உங்கள் நாளைத் தொடங்குங்கள். மாற்றத்தை நீங்களே உணர்வீர்கள்.

## இருசக்கர வாகனங்கள் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் பலி

**சென்னை, பிப்.24:**

செங்கல்பட்டுமாவட்டம்மதுராந்தகம் அடுத்த கொளத்தூர் மாலச்சேரி கிராமத்தைச் சேர்ந்தவர் சங்கர் மகன் பிரேம்குமார் (27). இவர் சனிக்கிழமை (பிப். 21) இரவு 7 மணியளவில், தனது நண்பரான பெரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த விக்னேஷ் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் முதுகரையில் இருந்து பவுஞ்சூர் நோக்கிச் சென்றார். மேலக்கண்டை சுடுகாடு அருகே சென்றபோது, எதிரே வந்த இருசக்கர வாகனத்துடன் இவர்களது வாகனம் நேருக்கு நேர் மோதியது. இந்த விபத்தில், எதிரே வந்த கீழக்கண்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமதாஸ் மகன் திவாகர் (22) மற்றும் பிரேம்குமார் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த விக்னேஷ் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அணைக்கட்டு காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துவிசாரணை நடத்திவருகின்றனர்.

## வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் கைது

**சென்னை, பிப். 24:**

சென்னை செம்பியம் பகுதியில் நள்ளிரவில் பைக்கில் டீ வியாபாரம் செய்து வந்த இளைஞர் மற்றும் வாடிக்கையாளர்களிடம் பணம், செல்போன்களைப் பறித்துச் சென்ற இருவரைப் போலீஸார் கைது செய்துள்ளனர். ஓட்டேரியைச் சேர்ந்த ஆகாஷ் (25) என்பவர் கடந்த பிப். 11 அன்று டீ விற்றுக்கொண்டிருந்தபோது, 5 பேர் கொண்ட கும்பல் அவரை மிரட்டிப் பணம் மற்றும் உடைமைகளைப் பறித்துச் சென்றது. இதுகுறித்த புகாரின் பேரில், பெரம்பூரைச் சேர்ந்த யோகேஷ் (எ) யுவராஜ் (21) மற்றும் ஜெகதீஷ் (22) ஆகியோரைச் செம்பியம் காவல்துறையினர் கைது செய்து, அவர்களிடமிருந்து வழிப்பறி பொருட்களை மீட்டனர்.

## சாராயம் கடத்தியவர் கைது

**விழுப்புரம், பிப். 24:**

விழுப்புரம் அருகே புதுச்சேரி சாராயம் கடத்தியவரைப் போலீசார் கைது செய்தனர். வானூர் வட்டம் பொம்பூர் ஏரிக்கரை சாலையில் மயிலம் போலீசார் வாகன சோதனையில் ஈடு பட்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் 50 சாராய பாக்கெட்டுகளைக் கடத்தி வந்த ரமேஷ் (43) என்பவரைப் பிடித்தனர். அவரிடமிருந்து சாராய பாக்கெட்டுகள் மற்றும் மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டது.

## போலி நகை விவகாரம்: மாயமான மதிப்பீட்டாளர் சடலமாக மீட்பு

**கிருஷ்ணகிரி, பிப். 24:**

கிருஷ்ணகிரியில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் 1.5 கோடி ரூபாய் மதிப்பிலான போலி நகை களை வைத்து முறைகேடு செய்த விவகாரத்தில், மாய மான நகை மதிப்பீட்டாளர் குணசேகரன் (40) ஆந்திர மாநிலம் குப்பம் அருகே சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். அவர் தற்கொலை செய்துகொண்டதாக முதற்கட்ட விசாரணை யில் தெரியவந்துள்ளது.

# மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயிலில் மாசி பெருவிழா தேரோட்டம்: லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



**விழுப்புரம், பிப்.24:**

விழுப்புரம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தளமாக உள்ள அங்காளம்மன் கோயிலில் ஆண்டு தோறும் மாசி பெருவிழா நடைபெற்று வருவது வழக்கம். இந்த ஆண்டு மாசி பெருவிழா 15ந் தேதி மகா சிவராத்திரி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. 7ம் நாள் திருவிழாவான திருத்தேர் வடம் பிடித்தல் நேற்று மாலை நடைபெற்றது. உற்சவர் அங்காளம் மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பல்வேறு மலர்களை கொண்டு அலங்காரம் செய்விக்கப் பெற்று, சரியாக பகல் 4.00மணிக்கு அம்மன் அலங்கரிக்கப்பட்ட புதிய திருத்தேரில் அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். பின்னர் அம்மனுக்கு மகா தீபாரதனை நடைபெற்றது. தொடர்ந்து தேர் சக்கரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்து தொடர்ந்து 4.25மணிக்கு தேர் வடம் பிடிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா, மயிலம் சிவக்குமார், விழுப்புரம் கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாய் பிரனீத், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் சிவலிங்கம், அறங்காவலர் குழு தலைவர் ஏழுமலை உள்ளிட்ட அறங்காவலர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள் மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி விஜயகுமார் மற்றும் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். அப்போது பக்தர்கள் தங்கள் விளை நிலங்களில் விளைந்த காய்கறிகள் தானிய வகைகள் நாணயங்கள் ஆகியவற்றை தேரின் மீது வீசி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்

விழுப்புரம் ஏடிஎஸ்பி தினகரன் தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்புபணியில் ஈடுபட்டிருந்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் மேல்மலையனூர் சக்திவேல் கோவில் அறங்காவல் குழு தலைவர் ஏழுமலை, அறங்காவலர்கள் சுரேஷ் மதியழகன், பச்சையப்பன், சரவணன், வடிவேல், சந்தானம் மேலாளர் சதீஷ், காசாளர் மணி, உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்தனர்.

தொடர்ந்து, மார்ச் 1- ம் தேதி வரை தினமும் பல்வேறு வாகனங்களில் பெருமாள் வீதியுலா புறப்பாடு நடைபெறும். வரும் மார்ச் 2-ம் தேதி சக்கரபாணி, ராஜகோபாலசாமி ஆதிவராக பெருமாள் ஆகிய 3 கோயில்களில் திருத்தேரோட்டம் நடைபெற உள்ளது.

இதே போல் சாரங்கபாணி சுவாமி கோயிலில் வரும் மார்ச் 2-ம் தேதி பொற்றாமரை குளத்தில் தெப்போற்சவமும், தீர்த்தவாரியும் நடைபெறுகிறது.

இதற்கான ஏற்பாடுகளைக் கோயில் அதிகாரிகள், அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

# இரவீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் கோலாகலம்: வியாசர்பாடியில் திரளான பக்தர்கள் தரிசனம்



**சென்னை, பிப்.24:**

வியாசர்பாடியில் சுமார் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரகதாம்பாள் உடனுறை இரவீஸ்வரர் கோயில் உள்ளது. சூரிய பகவான் இத்தலத்துக்கு வந்து சிவபெருமானை வழிபட்டதாக கருதப்படுவதால், மூலவர் 'இரவீஸ்வரர்' என்ற பெயரில் அழைக்கப் படுகிறார்.

தினமும் இக்கோயிலின் ராஜ கோபுரம் வழியாக நுழையும் சூரியக் கதிர்கள் நந்தி தேவர் மற்றும் மூலவர் சிவலிங்கத்தின் மீது நேரடியாக பட்டு வழிபடுவது சிறப்பம்சம் ஆகும்.

காலப்போக்கில், சுற்றியுள்ள சாலைகளின் உயரம் அதிகரித்ததால், கோயில் தரைமட்டத்தில் இருந்து சுமார் 5 அடி பள்ளத்துக்குச் சென்றது. இதனால் சூரிய ஒளி மூலவர்மீது விழுவதில் தடை ஏற்பட்டதுடன், மழைக் காலங்களில் கோயிலுக்குள் மழைநீர் புகுந்து பக்தர்கள் பெரும் சிரமமடைந்தனர்.

இந்த நிலையில், பக்தர்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 'ஜாக்கி' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒட்டு மொத்த கோயிலையும் தரைமட்டத்துக்கு மேல் உயர்த்தி பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இப்பணிகள் வெற்றிகரமாக முடிந்ததை அடுத்து, கும்பாபிஷேக ஏற்பாடுகள் நடைபெற்றன. நேற்று காலை 8.30 மணி அளவில் சிவ வாத்தியங்கள் முழங்க, தேவார, திருவாசகப் பண்ணிசைகள் ஒலிக்க, ராஜகோபுரம், மூலவர் சுவாமி - அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகளின் விமானங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோயிலைச் சுற்றிலும் திரளாக கூடியிருந்த பக்தர்கள் 'ஓம் நமச்சிவாய' என்ற பக்தி முழக்கத்துடன் தரிசனம் செய்தனர். பின்னர், பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது.

மதியம் 2 மணி அளவில் மகா அபிஷேகம் செய்யப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இரவு 7 மணிக்கு திருக்கல்யாண உற்சவம், பஞ்சமூர்த்திகள் வீதி உலா நடைபெற்றது. கோயில் நிர்வாகம் மற்றும் காவல் துறை சார்பில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால், பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் செய்தனர்.

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் குவிந்த பக்தர்கள்

**திருவண்ணாமலை, பிப்.24:**

திருவண்ணாமலையில் உலகப் பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த நிலையில், திருவண்ணாமலை கோவிலில் வழக்கத்தை விட மக்கள் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டது. குறிப்பாக ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, புதுச்சேரி உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்தனர். இதனால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கோவில் வளாகத்தில் குவிந்தனர். அதிகாலை முதல் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்கின்றனர்.

பொது தரிசன வழியில் சென்ற பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.

இதேபோல் பக்தர்கள் தொடர்ந்து கிரிவலம் சென்றவண்ணம் உள்ளனர். கிரிவலம் சென்ற பக்தர்கள் கிரிவலப் பாதையில் உள்ள அஷ்ட லிங்க கோலில்களில் சாமி தரிசனம் செய்தனர். இதனால் அஷ்டலிங்க கோவில்களிலும் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. அதேபோல் காஞ்சி சாலை கிரிவல பாதையில் உள்ள இடுக்கு பிள்ளையார் கோவிலிலும் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. பக்தர்களின் வருகை அதிகரித்ததால் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## குளறுபடி காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட டிஎன்பிஎஸ்சி குரூப்-2ஏ பதவிகளுக்கான தேர்வு நடந்தது

**சென்னை, பிப்.24:**

தமிழகத்தில் அரசுத்துறைகளில் காலியாக உள்ள பணியிடங் களுக்கு தேவையான ஊழியர்கள், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) மூலம் முதல்நிலைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதன்மைத்தேர்வு தமிழகம் முழுவதும் பிப்ரவரி 8-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழகம் முழுவதும் 38 மையங்களில் தேர்வு நடைபெற இருந்தது. சென்னையில் 7 தேர்வு மையங்களில் தேர்வு நடைபெறுவதாக இருந்தது. ஆனால், சென்னையில் தேர்வு மையம் ஒதுக்கீட்டில் குளறுபடி ஏற்பட்டது. தேர்வர்களுக்கான தேர்வு மைய விவரங்கள், ஹால் டிக்கெட்டில் தவறாக பதிவு செய்யப்பட்டிருந்தன. இதனால், சென்னை அரும்பாக்கத்தில் உள்ள மையத்திற்கு தேர்வு எழுத வந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். டி.என்.பி.எஸ்.சி. நிர்வாகத்தை கண்டித்து மறியல் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, தொழில்நுட்ப கோளாறால் குளறுபடி ஏற்பட்டதாக கூறி, தமிழகம் முழுவதும் குரூப்-2 தேர்வு ரத்து செய்யப்பட்டது. இந்தநிலையில் மாநிலம் முழுவதும் 47 மையங்களில் ஒத்திவைக்கப்பட்ட தேர்வு நேற்று முன்தினம் காலை தொடங்கியது. மின்னணு பொருட்கள் எதையும் எடுத்து செல்ல கூடாது என தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. காலையில் குரூப்-2ஏ பதவிகளுக்கான பாடத்தேர்வும், பிற்பகலில் குரூப்-2, 2ஏ பதவிகளுக்கான தமிழ்த் தகுதித்தாள் தேர்வும் நடைபெற்றது. தமிழகம் முழுவதும் ஏராளமானோர் தேர்வு எழுதினர்.

## மலைப் பகுதிகளில் நெகிழி கூடாது மாற்று வழி கண்டறிய ஆவினுக்கு உத்தரவு

**சென்னை, பிப்.24:**

உதகை, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப் பகுதிகளில் நெகிழி தடை உத்தரவை அமல்படுத்தக் கோரிய வழக்கு, இந்த அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது உயர் நீதிமன்றத்துக்கு உதவும் நபர்களாக நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள், உதகை உள்ளிட்ட மலைப் பகுதிகளில் நெகிழி குடிநீர் பாட்டில்களுக்கு தடை விதிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக டெட்ரோ பாக்கெட்டுகளில் குடிநீர் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், நீலகிரியில் ஆவின் பால் பாக்கெட்டுகள் மூலம் நாள் ஒன்றுக்கு 60 லட்சம் நெகிழி உறைகள் புழக்கத்துக்கு வருகின்றன. எனவே, பாலை கண்ணாடி பாட்டில்களில் விநியோகம் செய்ய உள்ளதாகவும், அதற்காக ஒப்பந்தப் புள்ளி கோரியிருப்பதாகவும், 2013 ஆம் ஆண்டு ஆவின் நிறுவனம் கூறியிருந்தது. ஆனால் இதுவரை அந்நிறுவனம் எதுவும் செய்யவில்லை என தெரிவித்தனர். இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், நெகிழி பாக்கெட்டுகளுக்குப் பதிலாக பாலை விநியோகிக்க மாற்று வழிகளை ஆவின் நிறுவனம் ஆய்வு செய்து, அது தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தனர்.

# பூமியைச் சுற்றி ஆயிரம் ஆபத்துகள்... நாசா வெளியிட்ட எச்சரிக்கை தகவல்!

நாம்தினமும் அண்ணாந்து பார்க்கும் வானத்தில் ஆயிரக்கணக்கான ஆபத்துகள் மறைந்து கிடக்கின்றன. விண்வெளி, அழகிய நட்சத்திரங்களின் இருப்பிடம் மட்டுமல்ல, அது பூமியை நோக்கிப் பாய்ந்து வரும் பிரம்மாண்டமான பாறைகளின் பாதையும் கூட. ஹாலிவுட் திரைப்படங்களில் காட்டுவதுபோல ஒரு விண்கல் பூமியைத் தாக்குவது கற்பனை என்று நாம் நினைக்கலாம்.

ஆனால், அது எப்போது வேண்டுமானாலும் நிகழக்கூடிய நிஜம் என்று நாசா விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். குறிப்பாக, நம் கண்களுக்கும், நவீன கருவிகளுக்கும் சிக்காத ஆயிரக்கணக்கான விண்கற்கள் விண்வெளியில் சுற்றி வருவது தற்போது தெரியவந்துள்ளது. இவை பூமியைத் தாக்கினால் ஏற்படும் விளைவுகள் மிக மோசமாக இருக்கும்.

### விண்கற்கள்!

பொதுவாகப் பூமியை அழிக்கக்கூடிய அளவுக்குப் பெரிய மலை போன்ற விண்கற்களை விஞ்ஞானிகள் எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். அதேபோல, மிகச்சிறிய கற்கள் பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழையும்போதே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிடும். ஆனால், இவை இரண்டுக்கும் இடைப்பட்ட 'நடுத்தர ரக' விண்கற்கள் தான் இப்போது பெரிய தலைவலியாக மாறியுள்ளன.

பீனிக்ஸ் நகரில் நடந்த அறிவியல் கருத்தரங்கில் பேசிய நாசாவின் கோள் பாதுகாப்புப் பிரிவுத் தலைவர் டாக்டர் கெல்லி ஃபாஸ்ட், சுமார் 140 மீட்டர் அகலம் கொண்ட 15,000 விண்கற்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படாமலேயே விண்வெளியில் சுற்றித் திரிவதாகத் தெரிவித்துள்ளார்.



### நகரங்களை அழிக்கும்!

இந்த நடுத்தர அளவு விண்கற்களைச் சாதாரண தொலைநோக்கிகளால் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இருட்டில் இருக்கும் ஒரு கறுப்புப் பூனையைத் தேடுவது போல இது சவாலானது. ஆனால் இவற்றின் தாக்கம் பயங்கரமானது. ஒருவேளை இவற்றில் ஒன்று மக்கள் வசிக்கும் ஒரு நகரத்தின் மீது விழுந்தால், அந்த நகரமே வரைபடத்திலிருந்து காணாமல் போய்விடும். ஒரு பெரியநகரத்தையே அழிக்கும் சக்தி இவற்றுக்கு உண்டு. இதுவரை 140 மீட்டருக்கு மேல் உள்ள விண்கற்களில் வெறும் 40 சதவீதம் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மையாக உள்ளது.

இதற்குச் சிறந்த உதாரணமாக 2024 ஆம் ஆண்டுகிறிஸ்துமஸ்தினத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம். அன்று கால்பந்து மைதானம் அளவுக்குப் பெரிய 'YR4' என்ற விண்கல் பூமிக்கு மிக அருகில் கடந்து சென்றது. அதிர்ச்சிகரமான விஷயம் என்னவென்றால், அது நம்மைக் கடந்து சென்ற பிறகுதான் விஞ்ஞானிகளுக்கே அது பற்றித் தெரியவந்தது. நமது தற்போதைய தொழில்நுட்பத்தில் உள்ள இடைவெளியை இது வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.




### பாதுகாப்பு?

விண்கற்களைத் திசை திருப்பும் 'டார்ட்' (DART) தொழில்நுட்பத்தை நாசா வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்திருந்தாலும், அது மட்டுமே போதுமானதாக இல்லை. திடீரென நாளை ஒரு விண்கல் பூமியை நோக்கி வந்தால், அதைத் தடுப்பதற்கான எந்த ஒரு விண்கலமும் இப்போது தயார் நிலையில் இல்லை. அதற்கான நிதியுதவியும் போதிய அளவில் ஒதுக்கப்படவில்லை. ஆபத்து வரும் முன் காப்பதே சிறந்தது.

இந்தக் குறைபாட்டைச் சரிசெய்ய நாசா தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. பூமியைச் சுற்றியுள்ள கண்ணுக்குத் தெரியாத விண்கற்களைத் துல்லியமாகக் கண்காணிப்பதற்காக, 'NEAR-EARTH OBJECT SURVEYOR' என்ற அதிநவீன விண்வெளித் தொலைநோக்கியை அடுத்த ஆண்டு விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது விண்ணில் மறைந்திருக்கும் ஆபத்துகளை முன்கூட்டியே கண்டறிந்து நமக்கு எச்சரிக்கை கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# "ஓசை கடந்த உலகில்"



காதில் ஹெட்போன். மனதை வருடும் மெல்லிய இசை. வாழ்க்கை சத்தங்களை மூடிக் கொள்ளும் அளவுக்கு இனிமையாய்.

ராதா சமையலறையில் இருந்தாள். ஒரு கையில் கரண்டி, மற்றொரு கையில் கைபேசி. காதுகளில் ஹெட்போன். பாடல் வரிகளோடு சேர்ந்து அவளும் மனதிற்குள் பாடிக் கொண்டிருந்தாள். முன் ஹாலிலிருந்து குழந்தையின் அலறல் வந்தது வித்தியாசமான தொணியில். "ஹீய்ய்ய்ய்ய்" எனும் ஹீனக்குரல். எதுவும் ராதாவின் காதுகளில் விழவில்லை.

ஹாலிம் தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை, சுவர் அருகே தொங்கிக் கொண்டிருந்த சார்ஜர் வயரைப் பார்த்தது. அதையும் ஒரு பொம்மையாய் நினைத்துக் கொண்டு இழுத்தது. வாயில் வைத்துக் கடித்தது. பற்கள் பதிந்தன. ஒரு நொடி. ஒரே ஒரு நொடி.

மின்சாரம் தாக்கிய உடல் துடித்து அடங்கியது. சமையலறையில் ஒரு பாடல் முடிந்ததும், அடுத்த பாடல் துவங்கும் முன் அவள் ஹெட்போனைக் கழற்றினாள். முன் ஹாலில் அதீத அமைதி. ஒரு நெருடலுடன் அங்கிருந்தா அழைத்தாள். 'கண்ணா...?"



பதில் இல்லை. ஹாலுக்கு ஓடினாள். குழந்தை தரையில் கிடந்தது. நல்லவேளையாய் சார்ஜர் வயர் அதன் கைகளில் இல்லை. கண்கள் திறந்திருந்தன. ஆனால் மார்புக்கூடு ஏறி இறங்கவில்லை. கத்தினாள். அழுதாள். அள்ளிக் கொண்டாள். பக்கத்து வீட்டார் உதவியோடு மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு ஓடினாள். "ஒரு பதினைந்து நிமிடம் முன்னாடியே... வந்திருந்தா..." அந்த வாக்கியம் அவளுக்குள் மின்சாரம் போல இறங்கியது. இப்போதெல்லாம் ராதா பாடல் கேட்பதில்லை. ஹெட்போனைத் தொடுவதில்லை.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# அவளாப்பா...!

பல வருடங்களுக்கு முன்பு நடந்த கசப்பான நிகழ்வுகள் அத்தனையையும் நினைவு குறிப்பில் சேகரித்து பாதுகாத்து வைத்திருந்தான் திலீபன். தனக்கான நேரம் வரும்போது "அவர்களுக்கு நல்லதே செய்ய வேண்டும்" என்று உள்மனது அடிக்கடி நினைவுறுத்தியது. உடல் நலம் சரி இல்லாமல் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்த திலீபனின் சித்தப்பா இயற்கை எய்தினார். ஆண் குழந்தை இல்லாமல் இறந்த சித்தப்பாவுக்கு, ஒன்னு விட்ட பங்காளிப் பிள்ளையின் மூத்த மகனான திலீபன் மீசை அடித்து, கொள்ளிச் சட்டி பிடித்து, இடுகாட்டில் கொள்ளிப் போட்டதிலிருந்து, அனைத்தையும் தனது சித்தப்பாவிற்காக நிறைந்த மனதோடு செய்து முடித்தான்.



சித்தப்பா ஒரு சிறந்த மனிதர் என்பது மட்டுமல்ல, சித்தப்பாவைப் பற்றி "அவன் என்னடாப் பண்ணான்." என்று திலீபனின் அப்பா அடிக்கடி சொன்ன சொற்களுக்காக, சித்தப்பாவைப் பற்றித் தனக்குள் வைத்திருந்த மாறுபட்ட கருத்தைப் புரிந்துகொண்டு, இதையெல்லாம் மனமுவந்து செய்து முடித்தான். பதினாறாவது நாள் காரியத்திற்கு முன்பாக, நடப்பு அன்று உறவெல்லாம் கூடி அழுது முடித்தது. மறுநாள் குளக்கரையில் காரியம் செய்யக் கூட்டம் கூடியது. புது துணிமணிகளோடு சித்தப்பாவின் மகள் "அண்ணா" என்று பாசம் மழை பொழிந்து, உரிமையோடு கூப்பிட்டதை எந்த விதத்திலும் தயக்கம் காட்டாமல் சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொண்டான் திலீபன். தலைமுழுகிக் குளத்தில் கல்லைப் போட்டுவிட்டு, உடுத்திய பழைய ஆடையை அப்படியே குளத்தில் விட்டுவிட்டு, புது ஆடை உடுத்தி வீடு நோக்கிக் கலசத்தோடு புறப்பட்டான். உறவுகள் புடைச்சூழ அனைத்தும் நன்றாகவே நடந்தது. அப்போதும் அவன் மனது "இன்னா செய்தாரை ஒருத்தர் அவர்நாண" என்ற மனநிலையோடு காலத்தைக் கழித்தான்.

ஒழுகும் கூரை வீட்டில் சித்தப்பா வாழ்ந்தபோது, பலமுறை அவரிடம் சொல்லி இருக்கிறான். "இங்க வந்துடு சித்தப்பா" என்று, ஏனோ அந்த ஆதிகால தூளம் வைத்த கூரை வீட்டிலேயே அவரது உயிர் பிரிந்தது. மண்சுவர் மழையால் இடிந்துவிழும் நிலைக்குத் தள்ளப்பட்டது. திலீபன், அப்பா கட்டிய வீட்டைச் சுத்தம்செய்து, வண்ணமடித்து வைத்திருந்த வீட்டை வாடகைக்கு கேட்டாள் சித்தி. மறுப்பு ஏதும் சொல்லாமல் சம்மதித்தான் திலீபன். இதனைக் கேள்விப்பட்ட பக்கத்து வீட்டு தனலட்சுமி "அவளாப்பா?" என விச்சாரித்து, தனலட்சுமி திலீபனைப் பார்த்துச் சொன்ன அந்தச் சொற்களை அவனுக்குள்ளே வைத்துக்கொண்டு, கடைசியாகச் சொன்ன சொல்லை மட்டும் அப்படியே "அப்பா.... அப்படியே துடிச்சுட்டாருப்பா.... எனக்கு மனசே சரியில்லை" என்று சொல்லுக்கு, அவன் திரும்பி எதையும் சொல்ல வார்த்தை இல்லாதவனாய், "கூனிக் குறுக வேண்டியது நான் இல்லை. அவங்கதான்" எனச் சொல்லிச் சற்று தள்ளிநின்று, "ஒருத்தவங்க நமக்கு ஆயிரம் தீமை செய்தாலும், நாம அவங்களுக்கு நல்லதே செய்யனும்னு, என் அப்பா சொன்னது. அதனால்தான், அவங்களுக்கு நான் நல்லதை செய்து இருக்கிறேன்." என்றவன் தன் அப்பா கட்டிய வீட்டில் குடியிருக்க சித்தியைச் சம்மதிச்சு, கதவைத்திறந்து உள்ளே நுழைந்தான். உள்ளே நுழைந்த சித்தி, திலீபன், சுவற்றில் வண்ணத்தில் எழுதி வைத்திருந்ததை "அவள்நாண நன்னையும் செயதவன்" என்று படித்து "அப்புடின்னா?" எனக் கேள்வியாக்கினாள். சுருக்கமாக "ஒருத்தவங்க நமக்குச் செய்த கெட்டத உடனே மறந்திடனும். கெட்டத செய்தவங்க உதவின்னு கேட்டா மறுக்காம செய்யனும்." என்று திலீபன் சொன்னதும் சித்தியின் முகம் தீயில்பட்ட பூவாய் சுருங்கியது.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# அகத்தியனின் பயணம் 11



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

## தேநீர் கடைக்கு வா..நீ

"இன்னைக்கு சாயந்திரம் வேலை முடிஞ்ச உடனே, உங்க கிட்ட அஞ்சு நிமிஷம் தனியா பேசணும். அதுக்கு வாய்ப்பு இருக்குமா சார்?" என்று கேட்டாள்.

"சொல்லுமா, அப்படி என்ன... எதுவா இந்தாலும் இப்பவே சொல்லலாமே. அலுவலகம் சம்பந்தமாக இருந்தாலும் இப்பவே இங்கவே பேசலாம். தப்பே இல்லையே. அதுக்கு எதுக்கு அஞ்சு மணிக்குச் சந்திக்கணும்" என்று அகத்தியன் கேட்டான்.

"இல்ல சார், தனிப்பட்ட விஷயமா உன்கிட்ட மனசுவிட்டு பேசணும் சார்" என்றதும்

அகத்தியன் அமைதியானான். ஆழ்ந்த யோசனையில் இருந்தான். ஏதோ பாதை மாறியிருக்கிறது என்றும், அதற்கு நாமும் இடம் தந்து விட்டோம் என்று உணர்ந்துகொண்டு "சரிம்மா பாக்கலாம்" என்றான்.

"நாங்க கம்பெனிக்கு வெளியில தேநீர்க் கடையில காத்துகிட்டு இருப்போம் சார். நீங்க பொறுமையா வாங்க. உங்களோட பேசணும் சார்" என்று எழிலழகி சொன்னவுடன், எந்தவித பதற்றமும் இல்லாமல் நிதானமாக "சரிமா போய்ச் சாப்பிட்டுவாங்க" என்று சொல்லிப் எழிலழகியை அனுப்பி வைத்தான்.

எழிலழகி மனதில் உள்ளதை படபடவென்று அகத்தியனிடம் சொல்லிவிட்டு, கையில் இருந்த டிபன் பாக்சை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். வெளியே வந்தவள் இசையழகியைப் பார்த்துச் "ஏண்டி... ஏண்டி... அவசரப்பட்டுட்ட" என்று இசையழகி பயத்தோடு கையைப் பிடித்து அழாத குறையாகக் கேட்டுக்கொண்டாள்."என்னடி அவசரம்" என்று தன் தோழியிடம் அழுவதுபோல முகத்தை மாற்றிக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள்.

"எது வந்தாலும் பாத்துக்கலாம்" என்று இருவரும் மரத்தின் கீழ் உட்கார்ந்து, ஒருவரை ஒருவர் பேசிக்கொண்டு, எழிலழகி இசையழகியை ஆறுதல் படுத்துவது போலவே சாப்பிட்டனர்.

இசையழகி டிபன்பாக்ஸில் கொண்டுவந்து சாப்பாடு அப்படியே இருந்தது. சாப்பிடுவதற்கு மனம் இல்லாதவளாய் பயத்தின் உச்சிக்குச் சென்றிருந்தாள்.

எழிலழகி அகத்தியனிடம் "இன்னைக்கு ஈவினிங் வேலை முடிஞ்ச உடனே சந்திக்கலாம்" என்று சொன்னவுடன் அவனுடைய மனநிலை மற்ற நாட்கள் இருந்த நிலையைவிட மாறியிருந்தது. அவனுடைய இருப்பிடத்திலேயே உட்கார்ந்து இருந்தான். வழக்கமாக அவன் ஒரு மணிக்கு ஒரு முறை வேலை செய்யும் இடத்தில் மேற்பார்வை இடுவது வழக்கமாகக் கொண்டிருந்தான். இன்று அதனை முழுமையாக நிறுத்திவிட்டான். அவனுடைய இடத்திலேயே உட்கார்ந்திருந்தான். கலகலப்பாக இருக்கும் இசையழகி அமைதியாகிவிட்டாள்.




மௌனமாகவே இருக்கின்ற இசையழகிவின் முகம் இருக்கமாக இருந்தது. இன்று வேலை செய்கின்ற இடமும், சூழலும் மாறி இருந்தது. சிரிப்பும் பேச்சும் இல்லாமல் அமைதியாக இருந்தது. இன்று அகத்தியனுக்கும் இசையழகிக்கும் எழிலழகிக்குமான நாட்கள் போலவே தோன்றியது.

மாலை. வேலை முடிந்தது, அலுவலகத்திலிருந்த அனைவரும் காலையில் கொண்டுவந்த பையை எடுத்துக்கொண்டு, முகத்தைக் கழுவிக்கொண்டு கூட்டமாகப் பேசிக்கொண்டே நடந்தார்கள்.

வழக்கத்திற்கு மாறாகப் எழிலழகியும் இசையழகியும் ஒருவித தயக்கத்தோடும், அச்சத்தோடும் அலுவலகத்திலிருந்து வெளியேறினார்கள்.

காலத்தை ஓட்டுவதற்காக இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு அமைதியாகப் பேசிக்கொள்ளாமல் நடந்தார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த அகத்தியன் மனதும் அச்சத்தோடுதான் இருந்தான். அவனுக்குள் இருந்தது அலுவலகம் சம்பந்தமாக எந்த ஒரு விஷயத்தையும் நேரடியாகப் பேசலாம் என்று சொல்லி இருந்தான், அதையும் மீறித் தனிப்பட்ட விஷயம் என்று சொல்லி அவர்கள் அழைத்திருப்பது ஏதோ ஒரு அச்சத்தை அவனுக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தும், அது என்ன என்பதை தெரிந்துகொள்வதற்காக, சரி பார்க்கலாம் என்று அவன் அனுமதி கொடுத்துவிட்டான். அவன் இருக்கின்ற இடத்தில் சுற்றிமுற்றி பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தது. எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டு அறையைப் பூட்டிக்கொண்டு வெளியேவந்தான். வெளியவந்தவன் நேராக அவன் தங்கியிருந்த அறைக்குச் சென்று, முகம் கழுவி, வேறொரு ஆடையை மாற்றிக்கொண்டு, ஆடை ஏற்றுமதி நிறுவனத்திற்கு வெளியே இருக்கக்கூடிய தேநீர் கடையை நோக்கி நடந்தான்.

கூட்டநெரிசல் மிகுந்த சாலை. வாகனங்கள் தொடர்ந்து பயணிக்கக்கூடிய சாலையின் இடது பக்கத்தில் சங்கீதா தேநீர் கடை ஒன்று இருந்தது. அநேகமாக அலுவலகத்திலிருந்து எவரும் இங்கே அதிகமாகச் சாப்பிடுவதில்லை. ஏனென்றால் ஒவ்வொரு பொருளின் விலையும் அதிகமாகவே இருக்கும். அந்த நம்பிக்கையில் ஆடை ஏற்றுமதி நிருவனத்திலிருந்து எவரும் இங்கு வரமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் அகத்தியன் அச்சத்தை வீட்டு நம்பிக்கையோடும், துணிவோடும் உள்ளே நுழைந்தான்

அகத்தியன் வருகையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்துக்கொண்டிருந்த எழிலழகி "சார் வாங்க" என்று அழைத்தாள்

அழைத்துக்கொண்டு முக்கிய விருந்தினர்கள் உட்கார்ந்து தேநீர் அருந்தக்கூடிய இடத்திற்கு அகத்தியனை அழைத்துசென்றாள்' அந்த அறையில் ஏற்கனவே இசையழகி வெட்கத்தோடு அகத்தியனை பார்க்காமல் கீழே குனிந்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

சொல்லிட்டண்டி"தேனீக்கடையில சந்திக்கச் சொல்லிட்டன்"

(தொடரும்)

# 1500 வருடங்களுக்கு முன்பு ஒரு பக்தனுக்காக நகர்ந்த கொடிமரம்!

நெல்லை மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற வைணவ தலமான இக்கோவில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. அழகிய நம்பிராயர் மூலவராகவும் குருங்குடி வள்ளி நாச்சியார் தாயாராகவும் அருள் பாலிக்கிறார்கள். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டது திருக்குறுங்குடி நம்பி கோவில். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் திருக்குறுங்குடி என்ற ஊரில் அமைந்துள்ளது.

இது திருமழிசை ஆழ்வார், நம்மாழ்வார், பெரிய ஆழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரால் பாடல் பெற்ற தலமாகும். இங்கு மகாவிஷ்ணு லட்சுமி உடன் வராக வடிவத்தில் தங்கி இருந்ததால் குறுங்குடி எனப்பட்டது.

நம்பாடுவான் என்ற பாணர் குலத்தை சார்ந்த விஷ்ணு பக்தர் மகேந்திர கிரி மலையில் வசித்து வந்தார். அவர் திருக்குறுங்குடியில் உள்ள நம்பியை தரிசிக்க கீழே இறங்கி வந்தார். அப்போது அந்த காட்டுப் பகுதியில் இருந்த பிரம்ம ராட்சசன் என்ற அரக்கன் நம்பாடுவானை பிடித்து வைத்து தன் பசியை போக்க அவரை உணவாக புசிக்க எண்ணினான்.





நம்பாடுவான் அந்த அரக்கனிடம் நான் நம்பிப் பெருமாளை தரிசித்துவிட்டு பிறகு உனக்கு இரையாகிறேன் என்றார். பின்னர் நம்பாடுவான் நம்பியை தரிசிக்க சென்றார்.. கோவில் முகப்பில் உள்ள கொடிமரம் அவரை உள்ளே விடாதபடி மறித்தது. உடனே நம்பாடுவான் பக்தி பாடல்களை பாடவும் கொடிமரம் நகர்ந்து நம்பிப் பெருமாளை தரிசிக்க உதவி செய்தது. மீண்டும் பிரம்ம ராட்சசன் அரக்கனை சந்திக்க நம்பாடுவான் சென்றார்.

போகும் வழியில் ஒரு பிராமணர் நம்பாடுவானிடம் ஒரு கனியை கொடுத்தார். அந்தக் கனியை அவர் அந்த அரக்கனிடம் கொடுத்தார். அரக்கன் அந்தக் கனியை சாப்பிட்டதும் அவனது பசி அடங்கி விட்டது. அரக்கன் நம்பாடுவானை விடுவித்தார். பிராமணர் வடிவில் வந்தது நம்பி என அறிந்து கொண்டார் அவர். இந்த கோவில் 1500 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. இந்த பெருமாளை வழிபட்டு வந்தால் நாம் நினைத்த காரியம் நடைபெறும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.



-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

## தினம் ஒரு தலைவர்கள் — செல்வி ஜெ.ஜெயலலிதா வரலாறு

ஆளுமையுள்ள வீர மங்கை செல்வி ஜெயலலிதா அவர்களின் சுவாரஸ்யமான வாழ்க்கை வரலாற்றை நினைவு கூரலாம்.

6 முறை முதல்வராக இருந்து, மக்களின் நன்மைக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்த இரும்பு பெண்மணியின் வாழ்க்கை பயணத்தை பார்ப்போம்.

'அம்மா', 'புரட்சி தலைவி' என்று அன்புடன் அழைக்கப்படும் செல்வி ஜெயலலிதாவின் குரல் இன்னும் ஒலித்துக் கொண்டே தான் இருக்கிறது. "ஜெ.ஜெயலலிதா எனும் நான்" இந்த வாசகத்தைக் கேட்டாலே மெய் சிலிர்க்கும். இவரின் கம்பீர குரலையும், ஆளுமையையும் அவ்வளவு எளிதில் யாராலும் மறந்து விட முடியாது.மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்ற அவரின் வாக்கியத்திற்கு ஏற்ப மக்களின் முதல்வராகவே வாழ்ந்து மறைந்தவர் செல்வி ஜெயலலிதா.

ஆரம்ப வாழ்க்கை

ஜெயலலிதா, பிப்ரவரி 24, 1948 அன்று கர்நாடகாவின் மாண்டியா மாவட்டத்தில் உள்ள மேல்கோட்டில், ஜெயராம் வேதவல்லி தம்பதியினருக்கு மகளாய் பிறந்தார். இவரின் இயற்பெயர் கோமளவல்லி. ஒரு வயதில் ஜெயலலிதா என்று பெயர் மாற்றப்பட்டது.1950-இல் இவர் தந்தை மறைவிற்கு பிறகு பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளார்.

கல்வி

சில வருடங்கள் பெங்களூரில் வாழ்ந்தபிறகு, 1958 இல், ஜெயலலிதா தனது தாயாருடன் சென்னைக்குச் சென்று, சர்ச் பார்க் கான்வென்ட்டில் தன் பள்ளி படிப்பைத் தொடர்ந்தார். பள்ளிப்படிப்புத் தேர்வுகளில் தனது மாநிலத்தில் முதலிடம் பிடித்தார். மேலும், கல்லூரிப் படிப்பிற்கான உதவித்தொகையைப் பெற்றார். இருப்பினும், அவரது குடும்பத்தின் நிதி நெருக்கடியைச் சமாளிக்க திரைப்படங்களில் நடிக்க வேண்டியதாயிற்று.

திரைப்பட வாழ்க்கை

தாயின் வற்புறுத்தலால் வழக்கறிஞராக வேண்டும் என்ற தனது கனவைத் தியாகம் செய்து நடிகையானார் செல்வி ஜெயலலிதா. 1961 ஆம் ஆண்டு 'ஸ்ரீ ஷைல மஹாத்மே' என்ற கன்னடப் படத்தில் குழந்தை நட்சத்திரமாகத் தனது திரைப்பட வாழ்க்கையைத் தொடங்கினார். 1965 ஆம் ஆண்டு 'வெண்ணிற ஆடை' என்ற திரைப்படம் மூலம் தமிழில் அறிமுகமானார். இதுவரை 140க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் நடித்துள்ளார். திரையுலகம் இதுவரை கண்டிராத மிகச் சிறந்த பல்துறை நடிகையாக இன்னும் கருதப்படுகிறார்.



அரசியல் வாழ்க்கை

நடிகரும், மறைந்த தமிழக முதல்வருமான எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் செல்வி ஜெயலலிதாவின் வழிகாட்டியாக இருந்து, அவரை அரசியலில் அறிமுகப்படுத்தினார். இவர் 1982-இல் அ.தி.மு.க வில் இணைந்தார். பின் 1984-இல் ராஜ்யசபா உறுப்பினரானார். 1991-இல், தனது 43-ஆவது வயதில் தமிழக முதல்வராகப் பதவியேற்றார். இவர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்த சமயத்தில் லாட்டரி சீட்டுகள், மதுவிலக்கு, புகையிலை பொருட்களுக்கு தடையெனப் பலவிதமான நல்ல திட்டங்களைச் செயல்படுத்தினார். பெண்களைக் காவல்துறையில் சேரவும் ஊக்குவித்தார்.

ஜெயலலிதாவுக்கு கிடைத்த விருதுகள் மற்றும் கவுரவங்கள்

1972-இல் தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கிக் கௌரவித்தது. 1991-இல் மெட்ராஸ் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கியத்தில் முனைவர் பட்டம் வழங்கியது. 1993-இல் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தால், டாக்டர் ஆஃப் லெட்டர்ஸ் பட்டம் வழங்கப்பட்டது. 2003-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இவருக்கு அறிவியலில் முனைவர் பட்டம் வழங்கியது. 2003-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகம் இவருக்கு முனைவர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இதைத் தவிர பல உலக நாடுகளும் இவருக்கு "தசாப்தத்தின் பெண் அரசியல்வாதி", "கோல்டன் ஸ்டார் ஆஃப் ஹானர்" போன்ற பல பட்டங்களையும், விருதுகளையும் வழங்கியுள்ளது.

ஜெயலலிதாவின் மக்கள் நல திட்டங்கள்

ஜெயலலிதா, தனது ஆட்சிக்காலத்தில் மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல நலத்திட்டங்களை செயல்படுத்தினார். இந்தியாவிலேயே, தனது மாநில மக்களின் நலனுக்காக சிறந்த இலவச திட்டங்கள் அறிவிப்பதில் முதன்மையானவர் செல்வி ஜெயலலிதா. பெண்களை மையப்படுத்திப் பல நலத்திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். இந்தத் திட்டங்கள் அனைத்தும் நல்ல வரவேற்பை பெற்றது. இன்றளவும் அவரின் திட்டங்கள் அனைத்தும் மக்களின் மனதில் நிலைத்து நிற்கின்றன. அதிகத் திட்டங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்ததும் இவர் தான்.

தொட்டில் குழந்தை திட்டம், தாலிக்கு தங்கம், அம்மா உணவகம், அம்மா லேப்டாப், அம்மா குடிநீர், அம்மா குழந்தை பராமரிப்புப் பொருட்கள், அம்மா கிரைன்டர், மிக்ஸி, டேபிள் ஃபேன், அம்மா காப்பீடு, அம்மா பார்மஸி, தாய்ப்பாலூட்டுவதற்கு தனி அறை போன்ற எண்ணற்ற நல திட்டங்களைச் செயல்படுத்தியவர். இன்றும் அவர் தொடங்கிய அம்மா உணவகத் திட்டம் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஜெயலலிதாவின் மரணம்

ஜெயலலிதா, செப்டம்பர் 22 2016 அன்று, சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு 75 நாட்கள் மருத்துவமனையில் இருந்ததை தொடர்ந்து, மாரடைப்பு காரணமாக டிசம்பர் 5 2016 அன்று காலமானார். மேலும் பதவியில் இருந்த போதே இறந்த இந்தியாவின் முதல் பெண் முதல்வரும் இவரே.

மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் பல சிறப்பான நலத்திட்டங்களைச் செயல்படுத்திய செல்வி ஜெயலலிதா, தற்போது உயிருடன் இல்லாவிட்டாலும், தமிழ்நாட்டு மக்களின் மனதில் நீங்காத இடம் பிடித்துச் சரித்திரம் படைத்துவிட்டார்.



நடிகை மஞ்சு வாரியருக்கு அறிமுகமே தேவையில்லை.
இவர் வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவான அசுரன் படத்தில் நடித்து தமிழ் சினிமாவில் அறிமுகமானார்.
முதல் படம் இவருக்கு நல்ல வரவேற்பை இங்கு எற்படுத்தி கொடுத்தது. இதை தொடர்ந்து அஜித்துடன் இணைந்து துணிவு, ரஜினியுடன் வேட்டையன் ஆகிய படங்களில் நடித்தார்.
அடுத்ததாக மிஸ்டர் எக்ஸ் (Mr. X) படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில், நடிகர் அஜித்தை ரேஸிங் இடத்திற்கே சென்று சந்தித்துள்ளார். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் மஞ்சு வாரியர் பதிவு செய்துள்ளார்.

# தி பேரடைஸ் படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் ப்ரோமோவை பகிர்ந்த நானி





நடிகர் நானி மற்றும் இயக்குநர் ஸ்ரீகாந்த் ஒடேலா மீண்டும் இணைந்துள்ள படம் “தி பாரடைஸ்”. ‘தசரா’ படத்திற்குப் பிறகு நானி-ஸ்ரீகாந்த் ஒடேலா இணையும் இரண்டாவது படம் இது. இந்தப் படத்திற்கு அனிருத் ரவிச்சந்தர் இசையமைக்கிறார். கயாடு லோஹர் கதாநாயகியாக நடிக்கிறார்.

மோகன் பாபு, ராகவ் ஜுயல், சோனாலி குல்கர்னி மற்றும் சம்பூர்ணேஷ் பாபு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாகும் இந்தப் படத்தை SLV சினிமாஸ் தயாரிக்கிறது. 1980-களில் செகந்திராபாத் பின்னணியில் நடக்கும் கதைக்களத்தை அடிப்படையாக கொண்டு இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்காகப் போராடும் தலைவராக நானி நடித்துள்ளார். இந்தப் படம் ஆகஸ்ட் 21ஆம் தேதி வெளியாகும் என்று பின்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் “ஆயாசீர்” ஃபர்ஸ்ட் சிங்கிளான AayaSher பாடல் வரும் 24ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், ஃபர்ஸ்ட் சிங்கிள் ஆயாசீர் படத்தின் ப்ரோமோ வீடியோவை நடிகர் நானி X தளத்தில் பகிர்ந்துள்ளார்.

# 2 ஃபிலிம்ஃபேர் விருதுகளை வென்ற கொட்டுக்காளி திரைப்படம்






70வது ஃபிலிம்ஃபேர் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று (பிப். 21) கேரளா மாநிலத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், தென்னிந்திய திரையுலகின் சிறந்த திரைப்படங்கள், இயக்குநர், நடிகர் உள்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு ஃபிலிம்ஃபேர் விருது வழங்கப்பட்டது.

அவ்வகையில் சிவகார்த்திகேயன் தயாரிப்பில் சூரி நடிப்பில் வெளியான கொட்டுக்காளி படத்திற்கு 2 ஃபிலிம்ஃபேர் விருது வழங்கப்பட்டது.

கொட்டுக்காளி படத்திற்காக சிறந்த இயக்குனருக்கான விருதை பி.எஸ். வினோத்ராஜ் வென்றார். அதே போல சிறந்த நடிகைக்கான விருதை அன்னா பென் வென்றார்.

இந்நிலையில், கொட்டுக்காளி படத்திற்காக விருது வென்ற பி.எஸ். வினோத்ராஜ் மற்றும் அன்னா பென் ஆகியோரை சிவகார்த்திகேயன் வாழ்த்தினார். இது தொடர்பான புகைப்படங்களை சிவகார்த்திகேயன் புரொடக்சன்ஸ் வெளியிட்டுள்ளது.

# ஜெய் ஹனுமான்’.. பூஜையுடன் படப்பிடிப்பு துவக்கம்





2022-ல் வெளியாகி நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்த கன்னட படம் ரிஷப் ஷெட்டி இயக்கி நடித்த ‘காந்தாரா’.

இதன் முன்கதையாக கடந்த ஆண்டு அக்டோபரில் வெளியான ‘காந்தாரா சாப்டர் 1’ உலக அளவில் சுமார் 855 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலித்து சாதனை படைத்தது.

இந்நிலையில் ரிஷப் ஷெட்டி நாயகனாக நடிக்க உள்ள புதிய படத்தின் பூஜை நடைபெற்றுள்ளது.

‘ஜெய் ஹனுமான்’ என்று பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த படத்தில் ரிஷப் ஷெட்டி ஹனுமானாக நடிக்க உள்ளார். ‘ஜெய் ஹனுமான்’ படத்தை, கடந்த 2024 இல் ‘ஹனுமான்’ என்ற படத்தை எடுத்து கவனம் பெற்ற தெலுங்கு இயக்குனர் பிரசாந்த் வர்மா இயக்க உள்ளார். உயர்தர கிராபிக்ஸ் தொழில்நுட்பத்தில் இப்படம் உருவாக உள்ளது.

கர்நாடக மாநிலம் ஹம்பி அருகே, அனுமன் பிறந்த இடமாகக் கருதப்படும் அஞ்சனாத்ரி பெட்டாவில் நேற்று ஜெய் ஹனுமான் படக்குழு சிறப்பு பூஜை செய்து படப்பிடிப்பை தொடங்கியது.

இதில் ரிஷப் ஷெட்டி தனது மனைவி பிரகதி ஷெட்டியுடன் கலந்து கொண்டார். இயக்குனர் பிரசாந்த் வர்மா மற்றும் தயாரிப்பாளர்கள் பங்கேற்றனர்.



நடிகை ரம்யா பாண்டியன் தமிழ் சினிமாவில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவர். இவருக்கு கடந்த 2024ஆம் ஆண்டு லோவல் தவான் என்பவருடன் திருமணம் நடைபெற்றது. இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கக்கூடிய பிரபலங்களில் ஒருவர் ரம்யா பாண்டியன். இவர் வெளியிட்ட மொட்டை மாடி போட்டோஷூட் எவ்வளவு பெரிய அளவில் வைரலானது என்பதை ரசிகர்கள் அறிவார்கள். இந்த நிலையில், தற்போது இவர் வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் இதோ பாருங்க:








**WANTED**

**MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED**

**Managers**: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer
Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt·Ltd


**International Courier Service**

**ஆண் / பெண் வேலைக்கு தேவை**

கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
**88866 56211**












**WANTED**

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling
Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling
Metal Roofing for
PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com









தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை

**ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்**

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




### கோழிகள் மாநாடு

கோழிக்கோடு மாநகரில்
கோழிகளின் மாநாடாம்!
வாழியென்று வாழ்த்திட
வாருங்களே தோழர்களே!

நாழிகைகள் கடந்ததுவே
நடக்கின்ற மாநாடாம்!
ஊழிக்காலம் வந்ததுபோல்
பண்டிகைகள் வந்ததுவே.!

குழம்பினிலே கொதிக்கின்ற
கொடுமைகளை கூறுவதா..
கொதிநீரில் வேகவைத்து..
சாகும்நிலை மாறியதா!

முட்டையிட்டு அடைகாத்து
மூச்சடங்கி போவதுவோ.!
தட்டுகின்ற உறவுவர
உயிர்கதவை மூடுவதா?

விருந்துவர விருந்தாக
விதிநெருப்பில் வீழுவதா..
இலைநடுவே உடல்வைத்து
ஏப்பம்விட்டு முழுங்குவதா.?

சாமிவந்து கோழிக்கறி
வேண்டுமென கூறியதா.!
நோம்பிருந்து கொன்றுஉடல்
படையலிட தூண்டியதா.!

கூறைமீது ஏறிநின்று
எழுப்பியதை மறப்பதா?
குக்கரிலே வேகவைத்து
குடல்வளர்க்க நினைப்பதா!

எவ்வுயிரும் தம்முயிராய்
நினைப்பாயோ மனிதனே..



சேவலுக்கு
புதியகாலம்
வேண்டாமா
மனிதனே!

**வே.கல்யாண்குமார்.**



### அன்புள்ள அக்கா.!

அக்கா.. அக்கா.. நரசக்கா
அன்பின்வடிவம் நீயக்கா
எக்காலமும் எல்லோருக்கும்
சேவையில் சிறந்தமனதக்கா!

ஊசியைப் போட்ட கரமக்கா
ஓடியேப் போனது சுரமக்கா.!
பேசியே மருந்தை தரும்
அக்கா.. பெரிய மனது
உனதக்கா!

வெள்ளை ஆடை
அணிந்தபடி.. வெளியே
உலவும் தெய்வமக்கா..
கொள்ளை நோய்க்கும்
அஞ்சாமல்.. கடமை
செய்தாய் தாயக்கா!

குண்டுகள் பொழியும்
போர்களத்தும்.. அன்பெனும்
தீபம் ஏற்றுகின்றாய்..
தன்னலமில்லா சேவையிலே..
அன்னைத் தெரசா
ஆகிவிட்டாய்!

காயமே இங்கு பொய்
என்றார்.. காயங்கள் ஆற்ற
நீயுழைத்தாய்.. மாயமே
பெண்கள் என்றுரைத்தார்..
மாற்றி அமைத்தாய்! நீயக்கா!

தன்பசித் தூக்கம்
தனைமறந்தே..
தன்பணியாற்றும்
செவிலியர்கள்.. ஒவ்வொரு
மனிதனும் உய்வதற்கே..
ஒருவன் அனுப்பிய
இறைவியக்கா!

**வே.கல்யாண்குமார்.**

1.ஒருவர் விட்டுக்
கொடுத்தால் அன்பு
இருவரும்
விட்டுக்கொடுத்தால்
அதன் பெயர் உறவு

2.செய்த பாவங்கள்
கேள்வி கேட்கும் செய்த
புண்ணியங்கள் பதில்
சொல்லும்

3.பேசிக்கொண்டே
இருந்தால் உன்னை பற்றி
மற்றவர்கள் அறிந்து
கொள்வார்கள் மௌனமாக
இருந்தால் மற்றவர்களை நீ
அறிந்து கொள்வாய்

4.ஜாதகம் ஒத்துப்போனது
மணமான பின் மனது ஒத்துப்
போகவில்லை

5.எந்த மெழுகுவர்த்தியும்
தனக்காக எறிவது இல்லை

6.இந்த உலகம் பணம்
இருந்தால் பொன்னாடை
போர்த்தி மரியாதை செய்யும்



பணம் இல்லை
என்றால்
பன்னாடை
என்று ஏளனம்
செய்யும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

### காதல் வண்டி.!

காத்துலேப் பறக்குதடி..
காதலனின் வண்டி.!
கட்டியணைத்தாளே... அவள்
வேகம் எடுக்குது வண்டி.!

முதுகிலே வைத்து அழுத்த..
மெய் மறக்கும் வண்டி!
வானத்துலேப் பறக்குதடி..
ரெண்டு சக்கர வண்டி.!

இதுவரை.. வாலிபனோ
ஒட்டி வந்தான் ஒன்டி..!
இவள் ஏறி அமர்ந்தபின்னே..
இரட்டை மாட்டு வண்டி!

காதலி பின்னே இருக்க
காத்தாய்ப் பறக்கும் வண்டி..
கல்யாணம் முடிஞ்ச பின்னே..
ஆகுதே.. கட்ட வண்டி..!

**வே.கல்யாண்குமார்.**

### நடிக்காதே

என் அலைப்பேசியின்
அழைப்பு மணிஒலிக்கும்
போதெல்லாம் அவசரமாய்
ஓடிவந்தெடுக்கிறேன்
நீதான் அழைப்பாயென்று,,,

மாற்றுயெண்கண்டு
மனம் துவண்டு துடிக்கிறது
நேற்றுவரை பேசியவள்
இன்று ஏனோ நடிக்கிறாள்,,,

எதிர்பார்ப்புக்கள்
ஏமாறுவதற்கு அல்ல
வளர்ச்சியின் பாதையை
செப்பணியிடுவதற்குதான்,,,

நேசிக்கும் எல்லோரையும்
காதலிக்கமுடியாது
ஆனால் காதலிப்பவர்
ளெல்லாம் யாரோ ஒருவரால்
நேசிக்கப்பட்டவர்கள்தான்,,,

இதற்கு மேலும் என்னிலை
மறந்துக்கிடக்கும் என்னிடம்



தன்னிலை
விளக்கம்
கேட்காதே
அன்பே,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

நல்லவர்களை நம்பலாம்
ஆனால் நல்லவர்கள் போல
நடிப்பவர்களை நம்பாதே"!
பாசம் என்றால் என்ன
என கேட்பவர்கள் பாசம்
காட்ட மாட்டார்கள் ,மாறாக
மோசமே செய்வார்கள்"!
ஆயிரம் விரோதிகளோடு
வாழலாம் ஆனால் ஒரு
துரோகியோடு வாழமுடியாது
துரோகிகள் வெளியில்
இல்லை நமது உறவிலேதான்
இருக்கிறார்கள் மனிதநேயம்
பாா்க்காதவர்கள்
மனித உருவில்
மிருகம் , ஈவு இரக்கம்
காட்டாதவர்களை ஈசன் கூட
காப்பாற்றமாட்டான்

**Bhuvana Nagarajan**

## நூல் விமர்சனம்

**ஆதலினால் காதலித்தேன் !**
**நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபி !**
**நூல் விமர்சனம் கவிஞர் இரா .இரவி !**
**சிவச்சந்திரா பதிப்பகம், சிவச்சந்திரா இல்லம் , 5.சுப்பிரமணியர் கோயில் தெரு , முத்தியால் பேட்டை ,புதுச்சேரி .605003. விலை ரூபாய் 120.**






எரிந்த கட்சி எரியாத கட்சி என்பது போல காதலுக்கும் இரண்டு கட்சிகள் உள்ளன .ஆதரிக்கும் கட்சி எதிர்க்கும் கட்சி .நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபி ஆதரிக்கும் கட்சி.இனிய தோழி யாத்விகா நூல் வெளியீட்டு விழாவிற்கு மதுரை வந்தபோது இந்த நூலை வழங்கினார் .

நூலை காணிக்கை ஆக்கிய விதத்தில் காதலுக்கு கொடி பிடித்து விடுகிறார் . " சாதி மதங்களை மறுத்து சமத்துவம் நாடி இருமனம் கலந்து திருமணம் புரிந்த காதலர்கள் அனைவருக்கும் ." அரியநாச்சி அவர்களின் அணிந்துரையும் ,கவிதாயினி புலமி அம்பிகா அவர்களின் அணிந்துரையும் மிக நன்று .நூல் எது மாதிரியும் இல்லாமல் புது மாதிரி .புது வடிவம் .பாராட்டுக்கள் .

கொஞ்சம் கவிதை ,கொஞ்சம் கதை ,கொஞ்சம் விதை என்று உள்ளன .வித்தியாசமாக உள்ள குறுநாவல் .தெளிந்த நீரோடை போன்று மிக நல்ல நடை .யாருக்கும் எளிதில் புரியும் வண்ணம் உள்ளது .எழுத்து இணையத்தில் தொடர்ந்து எழுதி வரும் படைப்பாளி.

காதல் பற்றி விளக்கம் பல கவிஞர்கள் பல எழுத்தாளர்கள் சொல்லி உள்ளனர் ,சொல்கிறார்கள் .இன்னும் சொல்வார்கள் .ஆனால் காதல் பற்றி விளக்கம் சரியான விளக்கம் இன்னும் யாருமே சொல்லவில்லை என்பதே என் கருத்து .காதலை அன்பு என்று மிக வித்தியாசமாக எழுதி உள்ளார் .

நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபி அவர்கள் பொள்ளாச்சியில் பிறந்தவர் .பொள்ளாச்சியில் பிறந்த அனைவருக்கும் பிறந்த மண் பாசம் அதிகம் உண்டு அதனால்தான் பெயரோடு பொள்ளாச்சியை இணைத்துக் கொள்கின்றனர் .

அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம், தமிழ்இணையத்தின் ஆசிரியர் பொள்ளாச்சி நசன் வரிசையில் கவிஞர் பொள்ளாச்சி அபி அவர்களும் இடம் பிடித்து விட்டார் .இவரால் பொள்ளாச்சிக்கு பெருமை .பெயர் அபி என்ற இருப்பதால் பெண் என்று எண்ணி விட வேண்டாம் எழுத்தாளர் சுஜாதா போல இவர் ஆண்தான் .

கவிஞர் வைரமுத்து அவர்கள் காதல் பற்றி எழுதிய வைர வரிகளுடன் நூல் தொடங்கி உள்ளார் . மகாகவி பாரதியார், கவியரசு கண்ணதாசன் , கவிக்கோ அப்துல் ரகுமான், கவிவேந்தர் ஈரோடு தமிழன்பன் ஆகியோர் கவிதைகளுடன் ,எழுத்து இணையத்தில் எழுதும் கவிஞர்கள் பாரதி சுராஜ்,,அகாரா,முத்து நாடன், பிரபா பன்னீர் செல்வம்,எஸ். ராஜேந்திரன்,நவீன் குமார், சங்கரன் அய்யா,காளியப்பன், எசேக்கியல், இன்போ அம்பிகா, ரமேஷ்,தூ.சிவபாலன்,கவிதாயினி கோமதி,( மதி ஓவியம் ) நாணல், தம்பு ,சி. பொற்கொடி,பொ. கவியமுதன், ஹரிஹரி நாராயணன், புலமி அம்பிகா, பாஷா ,ஜமீல் , அனிதபாலா,நிலா சூரியன் ,ஜாவித், மியான்டெட், ரௌத்திரன் ,அகன் ,அனுசரண், தமிழ்தாசன் ,ஆகியோர் காதல் பற்றி எழுதிய கவிதைகள் தொகுத்து நூலில் பதிவு செய்துள்ளார் .கவிதைகள் படிக்க சுவையாகவும் சுகமாகவும் உள்ளன .அனைவருக்கும் பாராட்டுக்கள் .

கவிக்கோ அப்துல் ரகும்மான் கவிதை நூலின் இறுதியில் உள்ளது.சிந்திக்க வைத்தது . கீதை இந்துக்களையும் குரான் முஸ்லீம்களையும் பைபிள் கிறித்துவர்களையும் படைத்தது போதும் இவை இனியேனும் மனிதர்களைப் படைக்கட்டும் !

காதலை எதிர்ப்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அற்புத வரிகள்.

நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபியின் கவிதை மிக நன்று . மங்கை உன்னைக் காதலித்த பின்புதான் மானுடத்தைக் காதலித்தேன் !
நீதான் என்னை மாற்றினாயடி !
ஒரு மனிதனாய் தேற்றினாயடி !

நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபி காதலின் ஆற்றலை நன்கு பறை சாற்றி உள்ளார் .

நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபி அவர்களின் மலரும் நினைவுகளாக மலர்கிறது நூல் .பள்ளிப் பருவம்,கல்லூரிப் பருவம் சந்தித்த தோழிகள் பற்றி பெயர்களுடன், நினைவாற்றலுடன் நன்கு பதிவு செய்துள்ளார் .

காதல் என்றால் திரைப்படங்களில் காட்டுவது போல அல்லாமல் யாரும் மீது அன்பு செலுத்துவதே காதல் என்கிறார்.

பெண் எழுத்தாளர்கள் அவர்கள் எழுதிய எழுத்தை விரும்பியதால் அவர்களையும் காதலித்தேன் என்கிறார். தோழிகள் அனைவரையும் காதலித்தேன் என்கிறார்.

இவருடைய அகராதியில் காதல் என்றால் அன்பு என்கிறார். வித்தியாசமான விளக்கம் நன்று. அன்பு தான் இன்றைய தேவை .அன்பால் உலகில் அமைதி நிலவும். நூல் ஆசிரியர் கவிஞர் பொள்ளாச்சி அபி அவர்களுக்கு பாராட்டுக்கள். வாழ்த்துக்கள் .

### உற்சாகம்

அருகில் வந்து குழந்தைகள்
விளையாடியதும்
மரம் ஒயிலாக
சோம்பல் முறித்தது.

இலைகள் ஆடின
கடலலைகள்போல.

பூக்கள் அவர்கள் மீது
உதிரத் துடித்தன.

கனிகளின் இனிப்பு
இன்னும் அதிகரித்தது.

ஈதொன்றும் அறியாமல்



தங்கள்
விளையாட்டில்
மூழ்கியிருந்தனர்
அந்தக்
குழந்தைகள்.

**கே. பி. ஜனார்த்தனன்**



### சுகமான. சுமைகள்

தந்தை சுமக்கும் குழந்தை
தாய் கொடுக்கும் பாசம்
குடும்பம் என்னும்
தோனியிலே
காதல் தந்த. உறவுகளே
சுமையும் நிஜமானது
வலியும் சுகமானது
குடும்பத்தை நேசிப்பவனுக்கு
சொந்தங்கள் சுமையல்ல
உதிரத்தில் உதித்த. பந்தம்
உயிராய் சுமக்கும் பாசம்
வலி அறியாத. தோள்கள்
சுமப்பது சுகமான சுமைகள்

**கவிஞர் முகம்மது அஜிபுல்லா**
ஆவணம்

### உயிரின் பந்தம்! உன்னதச் சுமைகள்!

"ஆனந்த அருவி" இலக்கியக்
குழுமத்தின் சார்பாக
மதிப்புக்குரிய கவிஞர்
முகம்மது அஜிபுல்லா
ஆவணம் அவர்களே!
"சுகமான சுமைகள்" என்ற
தலைப்பில், குடும்பத்தை ஒரு
தோணியாகவும், காதலை
அதன் துடுப்பாகவும்
கொண்டு மிகச் சிறப்பான
கவிதையைத் தந்துள்ளீர்கள்!
"உதிரத்தில் உதித்த பந்தம்...
உயிராய் சுமக்கும் பாசம்!"
என்ற உங்கள் வரிகள்,
ஒரு மனிதன் தன்
குடும்பத்திற்காகச்
சுமக்கும் பாரங்களை ஏன்
வலியாக உணர்வதில்லை
என்பதற்கான விடையைச்
சொல்கின்றன.
தந்தை சுமக்கும்
குழந்தையையும், தாய்
கொடுக்கும் பாசத்தையும்
இணைத்துச் சொன்ன
விதம் அழகு. "குடும்பத்தை
நேசிப்பவனுக்குச்
சொந்தங்கள் சுமையல்ல"
என்ற உங்கள் வரிகள்
ஒவ்வொரு இல்லறவாசியும்
நெஞ்சில் நிறுத்த வேண்டிய
தாரக மந்திரம்!
வலியைச் சுகமாக மாற்றும்
அன்பின் வலிமையைப் பாடிய
உங்கள் கவிநடை அற்புதம்!

(சிறு குறிப்பு:
கவிதையின் மூன்றாம்
வரியில் "தோனியிலே"
என்ற உருவகம்
வாழ்க்கைப்பயணத்தைச்
சிறப்பாகக் காட்டுகிறது.
ஆறாம் வரியில் "வலியும்
சுகமானது" என்ற முரண்
சுவை கவிதைக்கு ஆழம்
சேர்க்கிறது. இறுதி வரிகளில்
"வலி அறியாத தோள்கள்"
என்று குறிப்பிட்டது,
அன்பினால் உண்டாகும்
மனவலிமையைக்
குறிக்கிறது! )
இலக்கிய வானில்
உங்கள் புகழ் ஒரு துருவ
நட்சத்திரமாய் ஓங்கட்டும்!

என்றும் குன்றாத
உற்சாகத்துடனும், நல்
ஆரோக்கியத்துடனும்
உங்கள் கவிப் பயணம்
தொடர எமது நெஞ்சார்ந்த
வாழ்த்துகள்! வாழ்க
கவித்திறம்! வெல்க தமிழ்!

**Mohamed Ajibullah**



### நீர் நம் உயிர்

நீர் கொஞ்சம் கொடு
கெஞ்சும் காலம் வரும்
மரத்தை நட்டு விடு
மரத்தை வெட்ட கூடாது
சட்டம் வரும்...!


மணல் திருட்டை விட்டு விடு
நீர் ஓடையை வாழ விடு
குளம், குட்டையை பராமரித்து
பாசனத்தை பெருக்கி விடு....!

விவசாயம் பன்னலேனா
அடுத்த நாள் உனக்கேது
நீர் உள்ள உலகத்தை
எப்படியாவது
படைத்து விடு...



நீரை
சேமிப்போம்
நீடுழி வாழ
வைப்போம்....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



தீண்டி விடும் பார்வைத் தீயில்
தினம்,தினம் வெந்து சாகிறது
காதல் மனது!!

கைது செய் கண்களால்
மட்டுமல்ல–உன்
கல் இதயத்தாலும்!

நூலளவு இடைவெளி கூட
தூரம் என்பேன் நுழைந்து
விடவா? உனக்குள்!

கொஞ்சம் பார்த்ததுக்கே
வதைந்து போனேனே
நீ காதலித்து இருந்தால்?!

அறுந்து போன பொத்தானை
சட்டையில் மீண்டும் தைப்பது
போல என் உள்ளுக்குள்
நீ போகாத படி அந்த பாழாய்
போன மனசையும்
சேர்த்து தைடி!

சிணுங்கும் உன் கொலுசிடம்
எப்படி சொல்வேன்?



சுவருக்கும்
காதுண்டு
மெதுவாக
இரகசியம்
பேசு என்று!

**லி.நௌஷாத் கான்**

### உறவுப்பாலம்

உறவுகளின் உணர்வுகளால்
கட்டப்படும் போது
இறுக்கமாக இன்பமாக
இணைந்து காணப்படும்

அத்தை மாமன் உறவும்
வேண்டும் பாட்டன் பாட்டி
பாசமும் கேட்கும்

ஒற்றைப் பிள்ளையாய்ப்
பிறந்து உறவில்லாமல்
போனது ஒன்பதும் பத்துமாய்
பிறந்து ஒய்யாரமாய்
வளர்ந்தோம்

ஊரே சொந்தமாய் இருந்தது
அப்போது ஒற்றையாளாய்
நின்று தவிக்குது இப்போது

பாசத்துடன் சமைத்த
கஞ்சியும் இனித்தது
பாஸ்ட்ஃபுட் காலம் வந்ததில்
உணவுகளில்



ருசியில்லை!
புதிதில்லை!
ஆரோக்கியமும்
இல்லை

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

### அகலும் அன்பு

விரிந்த வெண்கல கலம்
ஒரு நாள் தேசப் படத்தில்,
நதியின் போக்கு போல்,
மேலிருந்து அடி வரையா?
அடியிலிருந்து மேல்
வரையா? விழுந்தது ஒரு
கீறல்.

எவர் கை தவறியது?
நான் இல்லை! நீதான்!
அவனில்லை; அவள் தான்!
தினம் தினம் பேசிப்பேசி
கலம் முழுதும்,
வெளியிலிருந்து உள் வரை;

நாவிலிருந்த நஞ்சு
நெஞ்சம் வரை பரவி,
நினைவில் இருந்த அன்பு,
எரிந்து சாம்பலாகும் துயரம்?

பொற்கலம் என்று போற்றி
வைத்த நன்கலமென
இருந்த குடும்பம்;

விரிந்து பிரிந்த
விரிசலுடன் சில்லுகள்
ஒட்டியிருக்கும் ஒடென
மண்பானையென;

எதற்கும் உதவாமல்;
தூக்கி வீசவும் மனது
வராமல்; கையாளவும்
துணிவின்றி;



மெல்ல மெல்ல
அகலும்
அன்பின்
நம்பிக்கையின்
நன்மை.

**சசிகலா விஸ்வநாதன்**

### திண்ணை

குணம் குறைந்த
மனிதர்களால் காணாமல்
போன மனிதநேயம்

வாசலில் வரவேற்க
வடிவமைக்கப்பட்ட
இருப்பிடம்

கல்லும் மண்ணும்
கலந்தாலும் இரக்கம் அன்பு
நிறைத்திருக்கும்

தூரத்தை விலக்கி
உறவுகளைச் சேர்க்கும்

ஊர்ச் செய்திகளை
உலகச் செய்திகளாக்கும்

தொப்புள் கொடி உறவில்லா
பந்தங்கள் சொந்தமாகும்
பாஷைகள் இல்லா பாசங்கள்
நேசக்கூடுகள் ஆகும்

தொலைவு கடக்க
இடைக்காலத் தடையிட்டு
அலுப்புப் போக்கும்
அரியாசனம்

நாகரீக மோகத்தில்
நலிந்து போன மனிதம்

அடைக்கப்பட்ட கதவுகளில்
சிறைப்பட்டன இதயங்கள்


அகன்ற திண்ணைகள்
அடுக்ககமாக அருகிப்
போயின மனிதநேயம்

திண்ணைகள்.....



கால
மாற்றத்தில்
காணாமல்
போன
கருணை
வடிவம்.

**தமிழ்நிலா**



### சிறுவனைப்போல

ஆகாய விமானச் சப்தம்
கேட்கும்போதெல்லாம்
அண்ணாந்துப் பார்க்கும்
சிறுவனைப்போல,,,
என் அலைபேசியின்
அழைப்புமணி
ஒலிக்கும் போதெல்லாம்
நீயாக இருக்குமோயென
நிலைத்தடுமாறி எடுக்கிறேன்
நம் காதலுக்கு~ நீ
கால அட்டவணை
போட்டதை மறந்து,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை








### எழிலோவியம்....

போயஸ் தோட்டத்தின்...
புரட்சி மலரே...

வேதாநிலையத்தின்
வாடாமலரே...

உனக்கேது வாடல்?...நீ...
தமிழினம் உள்ளம் உருகும்...
பாடல்...

சிறுநரிகளை சிதறடித்த...
சிங்கப்பெண்ணே....

பெருங்கருணை கொண்டு...
பேரன் பைப் பொழிந்த....
மாசில்லா...விண்ணே...

மரபுகளை உடைத்த
புதுமைப்பெண்..நீ...

மண்குடிசைகளையும்
மாளிகைகளாக்கிய.
அற்புத விளக்கு...நீ...

அடிமைத் தனம் மீட்டெடுத்து..
சுயசார்பு.. அடையச் செய்த...
குலவிளக்கு...நீ...

சராசரி அரசியல் பணி
புரிவோரிலிருந்து...
விதிவிலக்கு..நீ...

சாதனைகள்...
சரித்திரங்களை..
உள்ளடக்கிய...

குலமகள் ...நீ
ஆணாதிக்க அரசியலை...
அடக்கியாண்ட...
மலைமகள்...நீ...

மக்களின் .. தேர்வு...நீ...
வெற்றிகளின்...உறவு...நீ...

பெண்ணினம் காத்தாய்....
தொட்டில் குழந்தை
திட்டத்தால்... பெண்ணியம்
காத்த.. காவல் வேலி..நீ...

சீண்டல்.. அத்துமீறல்
களுக்கு....சீறியெழும்
மாகாளி...நீ...

மாசியில் பிறந்த...மகமே
உள்ளத்தில் உன்னை உறைய
வைத்திருக்கும்...
பல யுகமே...

நெடுநாள் வாடிக்கிடக்கும்...
எங்களுக்கு...
வெற்றி கொடு...
கழகத்தின்
தோளுக்கு...
வாகை
மாலையைச்
சூடு...



ஜெ.ஜெயலலிதா அவர்களின்
78 ஆவது பிறந்த நாள்
விழா...24.02.2026....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---

1. எல்லா நேரங்களிலும்
உண்மையைப் பேசிவிட
முடிவதில்லை பிறர் மனம்
நோகாமல்இருக்க
சில நேரம் பொய்யும்
தேவைப்படுகிறது

2. தெளிவு இருந்தால்
எல்லாம் வழியாக தெரியும்
தெளிவு இல்லை என்றால்
எல்லாம் வலியாக தெரியும்

3. பணம் இருக்கும் பக்கத்து
வீட்டுக்காரர்கள்
உறவுக்காரர்களாக மாறி
விடுகிறார்கள் பணம் இல்லாத
நெருங்கிய உறவுகள்
தூரத்து சொந்தம் ஆகி
விடுகிறார்கள்

4.நிம்மதி இல்லாத
புத்திசாலியை விட கவலை
இல்லாத பைத்தியம் மேல்

5. ஒரு மருந்து உங்கள்
நோயை குணப்படுத்தினால்
அதை ஏன் மாதம் தோறும்
வாங்க
வேண்டும்
சிந்தித்துப்
பாருங்கள்
விவரம் புரியும்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

### பொறுமையின் பெருமை

வெற்றிக்கு அடிப்படை
பொறுமை இது ஒரு சிறந்த
ஆயுதம்!

பொறுமை கசப்பானது
ஆனால் அதன் கனி மிகவும்
இனிமையானது !

வெற்றி என்பது காத்திருப்பில்
அதிகம் கிடைக்கும் !

விதையாய் மண்ணில்
புதைந்தால்தான் விருச்சமாய்
வானைத் தொட முடியும் !

மெதுவாய் நகரும் நதியாள்
தான் ஆழ் கடல் மடியைச் சேர
முடியும் !

அவசரம் அழிக்கும்
வாய்ப்புகளை !

நிதானம் செதுக்கும்
வெற்றிகளை !

காலம் கனிந்து வரும் வரை
காத்திருப்பதே பெரும் தவம் !

அலை ஓய்ந்தால் தான்
கடல் முத்து தரும் !

அமைதி காத்தால்தான்
மனம் வழி சொல்லும் !

கடிகார முள்ளோடு
யுத்தம் செய்யாதே காலம்
கனியும் வரை நிதானம்
இழக்காதே !

துளி துளியாய்
விழுந்தால்தான் பாறையும்
தேயும் !

நிதானமாய் நகர்ந்தால் தான்
நிச்சயம் இலக்கு சேரும் !

அவசரம் என்பது தற்காலிக
வேகம் பொறுமை என்பது
நிலையான வெற்றி !

கல் சுமந்தால்தான் சிலையாக
முடியும் !

வலி பொறுத்தால் தான்
வெற்றி கிட்டும்!

புயல் வீசினாலும் வேர் பிடி !
காலம் மாறும் அமைதிப்படி!

முதிர்ந்த கதிர் தலை
சாய்க்கும் !
முழு நிலவுத் மெல்லத்
தோன்றும்!

பக்குவம் என்பது
மெதுவாய் வரும்!
பொறுமை உன்னை
உயர்த்தி வைக்கும் !
பொறுமை கடலினும்
பெரிதும்!



**பெ.திருமுகம்**
மணமேல்குடி

---

### வாழ்க்கை !

பிறந்த சில நிமிடங்களில்
ஓடத் துடிக்கும் கன்றுக்குட்டி!

தொட்டில் ஆட்டியவுடன்
உறங்கிப் போகும் குழந்தை!

தெருவோர மரநிழலில்
நிம்மதியுடன் படுத்திருக்கும்
யாசகன் !

இவர்களையெல்லாம்
பார்க்கும் போது மனம்
சஞ்சலப்பட்டு தான்
போகிறது!

நமக்கு ஏன் இந்த ஓட்டமும்
,இந்த உறக்கமும், இந்த
நிம்மதியும்
இல்லாமல்
போனதென்று!



**எம்.பி. தினேஷ்.**
கோவை

---



### அனிச்சம்

எப்பொழுது(ம்)மே
எனக்கு வரம் தான் உன்
பார்வை!
ஆனால் நீயோ என் பார்வை
உன் மீது பட்ட வினாடியில்
அனிச்சம் ஆகி விடுகிறாய்!
நீ கவலைப் படாதே அன்பே!
உன்னை அவ்வப்பொழுது
தொட்டுக் கொள்ளும்
ஊறுகாயாக நினைக்காமல்
எப்பொழுதும் எனக்குப்
பிடிக்கும் ஆப்பிள் ஆப்பிள்
க(வே)க் கையாள்வேன்!
முதலில் ஒன்றடித்து
அடுத்தது நான்கடித்து
இறுதியாகத்தான் உனக்கும்
எனக்கும் பிடித்த
சிக்சர் அடிப்பேன்!
இப்பொழுது உனக்கு(ம்)
புரிந்திருக்குமே விளையாட
வரும் போதெல்லாம் நீ
அழைத்தவுடன் நான்
உடனே வரும்
அந்த(ரங்க) ரகசியம்!
விதை போட்டதும்
விரைவாக விருட்சமாவது
கா த ல் மட்டுமே!
அந்தக் கா த ல் நம்மிடம்
சிக்கிய பின்னர் நீ
தொட்டா
சிணுங்கியாகவோ
அனிச்சமாகவோ
இருப்பினும்
அத்தனை(யை)
யும்
உடைத்தெறிந்து
கா த ல் கடமையாற்றுவேன்!



**முத்து ஆனந்த் வேலூர்**

---

### இவர்களை தெரியுமா?

கோணிச்சாக்கில்
தெருத்தெருவாய் குப்பை
அள்ளும் குப்பன்!
குனிந்து போகும்
குடிசைக்குள்ளே சுருண்டு
கிடக்கும் சுப்பன்!
தாடிமீசையோடு தடம்தெரியா
பாதை ஒட்டுப்பீடி
தேடிநடக்கும் முனியன்!
ஒதுங்கவீடு இல்லை
உடமையேதுமில்லை
அறுந்துபோன உறவுகளை
நினைத்துவாடும் மணியன்!
காருயில்லை காசுயில்லை
காலைவேளை கஞ்சியில்லை
உச்சிவெய்யில் சாயும்வரை
உழைத்து வாழும் உலகம்!
உலகில் உண்டு! தெருவில்
உண்டு.. தேடிப்பார்த்தால்
அருகில் உண்டு! உண்டு
உண்டு உறங்குகிறோம்!
ஒருநாள் இவர்களிடம்
பேசியது உண்டா?
இறைவன் ஒருவன்
படைத்த பிறவி.. இந்தநிலை
இருக்கயிலே.. உறவுகளாய்
ஒருவனின்றி.. உலகில்
தனித்துக் கிடக்கயிலே..
அருகே சென்று.. ஆறுதலாய்
ஒருவார்த்தை.. அதனைவிட
ஒருகவலம் உணவுதர
ஒருவரிங்கு உண்டா?
இவர்கள் மனிதர் தானே?

**வே.கல்யாணகுமார்.**
பெங்களூரு.

---

1. கூடை நிறைய
நெல்லிக்கனிகளோடு
உட்கார்ந்துஇருந்தாள்
அவ்வை பாட்டி அதை
வாங்கி உண்ண தான்
அதியமான்கள் யாரும்
இல்லை

2. எஜமானுக்கு பயப்படும்
குதிரை எதிரிக்கு
பயப்படுவது இல்லை

3. புத்தகங்களை
இழந்து விட்டு அறிவை
தேடுகிறோம் உறவுகளை
இழந்து விட்டு அன்பைத்
தேடுகிறோம் நம்மை நாமே
இழந்து விட்டு
நிம்மதியை தேடுகிறோம்
இருப்பதை தொலைத்து
இல்லாததை தேடுவதே
மனித வாழ்க்கை

4. ஈர்க்கும் பொருளை
வெறுக்க தெரிந்தால்
அவன் ஞானி

5. எவ்வளவு உயரம்
வளர்ந்தாலும் அங்கே களை
எடுக்க ஒருவன்
நிச்சயம் இருப்பான்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

### கண்களுக்கு மகிழ்ச்சி கனவு

தொல்லைகள் இல்லா
கனவு எல்லைகளுக்குள்
இருப்பதில்லை.

எவனும் எதிரி இல்லை.
எமனும் எதிரில் இல்லை.

ஏற்றத்தாழ்வு இல்லை. ஏன்
என்று கேள்வி இல்லை.

நிகழ்ந்ததைச் சொல்வதற்கு
பயமில்லை.

சாத்தியமில்லை என்றாலும்
சந்தோசம் குறையவில்லை.

வம்பு இல்லை வாதம் இல்லை
வண்ணம் களைவதில்லை.

வந்தால் வருத்தம் இல்லை
போனால் தேடவில்லை.

கனவில் கை சேரலாம்
காணாமல் போகலாம்.

பிடித்தவர்கள் வரலாம்,
பிடிக்காதவர்கள் போகலாம்.

பிழைகள் இன்றி கணநேரம்
கண்ணில் தோன்றும் கனவே
நீ
கணவனாலும்
கவலையில்லை.



**வீ.கருப்பையா**
பாவை
கட்டிக்குளம்

---



தனிமையின் முத்தமொன்று
தவித்தலைகிறது
அறையெங்கும்.

முத்தத்தின் முகவரியை
வாசிப்பதற்குள்
ஆவியாகிவிட்டது.


நீர்க்குமிழிகள்
காற்றின் முத்தங்கள்
என்கிறாள்
உடலெங்கும் நுரை ததும்பி
நின்று கொண்டு.

அள்ளிய முத்தங்களுடன்
பத்திரமாய்
கரை
சேர்கிறேன்
நதி திசை
மாறி
ஓடுகிறது
எனக்கு முன்.



**ரிஷபன்**

---



### பாட்டுக்கொருவன்...

உருவாகும் சிந்தனையில்
உணர்வுகளை சேர்த்து..
உயிரான வார்த்தைகளை
உள்வாங்கி எழுதி...

திருநாடு விடுதலைக்கே
தெருவெங்கும் முழங்கி...
தெள்ளுதமிழ் பாட்டாலே
தேன்கவிதை வழங்கி...

இருளாகிப் போனதொரு
இந்நாட்டு மாந்தர்..
இதயத்தில் விடுதலைக்கு
எழில்தீபம் ஏற்றி...

கருகொண்டு கவிதையிலே
களம்கண்டு நிமிர்ந்து..
கரைந்துருகி பாடியவன்
பாரதியை மறவேன்!

மண்ணடிமை மாறுமுன்னே
பெண்ணடிமை தீர...
மதியிழந்து போனதொரு
மாந்தர் தனையுணர...


விண்ணெழுந்த செங்கதிராய்
விடியல்தரும் பாட்டால்..
விடுதலைக்குப் பாடுபட்ட
வீரக்கவி அவனே...

கண்ணான தேசியத்தை
கருத்தான தமிழகத்தை
கணம்தோரும் பாட்டாலே
துயிலெழுப்ப இங்கே..

என்னதவம் செய்தோமோ.!
பாரதியும் பிறந்தான்!
எழுத்தெடுத்துப்பாத்தொடுத்து
பாரதியைப் பணிவோம்!

**வே.கல்யாணகுமார்.**
பெங்களூரு.

---



### அவள் ஒரு புதுக்கவிதை.!

எழுதுகிறாள் ஒரு
புதுக்கவிதை! அவள்
இருவிழி அசைவே
தேன் கவிதை.!

இளமைக்கு இலக்கணம்
கிடையாது..! அவள்
எழுதுவது தான் இங்கு
புதுக்கவிதை.!

பருவத்தை மேலாடை
மறைத்து நிற்க.. புருவத்தில்
மைகொண்டு எழுதுகிறாள்..

மாங்கனி அங்கே
மறைந்திருக்க..
மாமரக் கிளையினை
பார்த்திருந்தாள்..

தேன்கனி இதழினில்
கலந்திருக்க.. அவள்
வான்வெளி நிலவென
பாட்டிசைத்தாள்!

கட்டிலில் சாய்ந்தது
கோபுரங்கள்.. அவள் கை பட
எழுந்தது காவியங்கள்..

பசியில்லை! இரவினில்
தூக்கமில்லை ! அவள்
பருவத்தின் பாடலை
எழுதுகின்றாள்..!

கலவில்லை உறவில்லை
காதலனை.. அவள்
பிரிந்ததை நினைத்தே
எழுதுகிறாள்!

இரவுக்கு பகலுக்கும்
இனியென்ன வேலை?
கவிதையே.. கவிதையை
எழுதுகிறாள்.!

**வே.கல்யாண்குமார்.**

---

# ரம்ஜான் ஸ்பெஷல் ஜெய்ப்பூர் மசாலா பூரி..!

## சும்மா ஜாலியா கொண்டாடுங்கள்..!

**சமையல் குறிப்பு**





நண்பர்களே வணக்கம்..!

ரம்ஜான் வந்துவிட்டது வீட்டில் மதிய நேரத்தில் அதிகளவு பிரியாணி செய்து சாப்பிடுவார்கள். ஆனால் இரவு நேரத்தில் என்ன சாப்பிடுவார்கள் என்றால் எப்போதும் போல் இட்டி தோசை என இதுபோன்ற உணவுகளை எடுத்துக் கொள்வார்கள்.

ஆனால் உண்மையிலே என்ன கதை என்றால் எப்போதும் போல் சமைத்து சாப்பிடுவதற்கு இதுபோன்ற ஜெய்ப்பூர் பட்டாணி பூரி செய்து சாப்பிடலாம். சரி வாங்க அது எப்படி செய்வது என்று பார்க்கலாம்..!

இது என்ன பூரி புதுசா இருக்கு, செய்வது கஷ்டம் என்று யோசிப்பீர்கள். ஆனால் செய்வது மிகவும் சுலபம் ஆகும். அதனால் இப்பதிவின் வாயிலாக ஈசியாக செய்வது எப்படி என்று பார்க்கலாம் வாங்க.

**தேவையான பொருட்கள்:**

கோதுமை மாவு 2 கப்
ஓமம் 1/2 டீஸ்பூன்
சீரகம் 1/2 டீஸ்பூன்
எண்ணெய் தேவையான அளவு
பச்சை பட்டாணி 50 கிராம்
இஞ்சி 1 துண்டு
பச்சை மிளகாய் 2
சீரகம் 1 ஸ்பூன்
பெருங்காயம் 1 டீஸ்பூன்
மஞ்சள் தூள் 1/2 ஸ்பூன்
கரம் மசாலா 1/4 டீஸ்பூன்
சோம்பு தூள் 1/2 டீஸ்பூன்
தனியா தூள் 1/2 ஸ்பூன்
மிளகாய் இடித்தது 1/2 ஸ்பூன்
தேவையான அளவு உப்பு

---




# புத்தக விமர்சனம்

நூலின் பெயர் : தாராவும் பறக்கும் செல்போனும் (சிறுவர் நாவல்)
ஆசிரியர் : மு. ஆனந்தன்
வெளியீடு : பாரதி புத்தகாலயம்
விலை : 60–00
தொடர்புக்கு :9443049987

தாராவும் பறக்கும் செல்போனும், எழுத்தாளரும் வழங்கறிஞருமான மு.ஆனந்தன் எழுதிய முதல் சிறார் நாவல் என நம்பவே முடியவில்லை, ஏற்கனவே பல சமூகச் சிந்தனை நாவல்களை படைத்த ஆனந்தன் அவர்கள் குழந்தைகளுக்காக எழுதிய நாவலை வாசிக்கும்போது நம்மைப் போன்ற இளைஞர்கள் முதியவர்கள் அனைவருக்குமான நாவல் என்பதை உணர வைக்கிறார்,

இந்நாவல் மூலம் செல்போனால் சிறுவர்களுக்கு நிகழும் தீமைகளையும் அதே நேரத்தில் நல்ல விசயத்தையும் சொல்வது சிறப்பு, ஒரு விஞ்ஞான கண்டுப்பிடிப்பு என்பது நன்மை தீமை இரண்டையும் உள்ளடக்கியதே, அதில் நாம் அன்னப்பறவைப்போல நல்ல விசயத்தை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறார், நாவலை வாசிக்கும்போது நம் கண்கள்தான் புத்தகத்தில் உள்ளது நமது மனசெல்லாம் கோவையைச் சுற்றியுள்ள இயற்கை வளங்களை கற்பனை செய்துக்கொண்டு ரசிக்கத் தொடங்கிவிடுகிறது,

இந்நாவல் ஒரு குழந்தைகளுக்குக்கான திரைப்படம் தயாரிக்கும் திரைக்கதையை அற்புதமாக பொருந்தக்கூடிய வகையில் பல திருப்பங்களும் நிறைந்து இருக்கிறது, யாராவது நல்ல இயக்குனர்கள் சமூக அக்கறையோடு திரைப்படம் தயாரிக்க முன் வரலாம், இந்நாவல் அதற்காக அத்துணை தகுதிகளையும் கொண்டுள்ளது, ஏற்கனவே பல நாவல்கள் மூலம் பெரும் ரசிகர்களைப் பெற்ற ஆனந்தன், இந்நாவல்மூலம் சிறுவர்களையும் தமக்குள் கொண்டு வந்து சாதனை படைத்துள்ளார்,

இன்றைய சூழலில் மனித வாழ்விற்கு அத்தியாவசியம்தான் செல்போன், மாணவர்கள்கூட இணையத்தள வகுப்புகளுக்கு அதிகம் பயன்படுத்துகிறார்கள், அதற்காக அதுவே முழு நேரமும் பயன்படுத்தி வாழ்க்கையை சீரழிக்கக் கூடாது என்பதனை சமூக பொறுப்பை உணர்ந்து எழுதப்பட்ட நாவல் சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் படித்துப்பயன்பெற வேண்டும், மு.ஆனந்தன் அவர்களும் இதுப்போன்ற நூல்களை இன்னும் வழங்குவார் என எதிர்பார்க்கின்றோம்.


**நாகை ஆசைத்தம்பி**
கோவை



SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909
+91 96770 88843
info@sevenstarslogistics.com
www.sevenstarslogistics.com




FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843




Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com




ஆட்கள் தேவை
CNC டர்னிங் ஆப்பரேட்டர்
பெயிண்டர்
ஹெல்பர்
நல்ல சம்பளம் வழங்கப்படும்
Southern Heat Exchangers, Coimbatore
99444 40560




WANTED
MARKETING MANAGER
ACCOUNTANT
CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
PLASMA & BENDING OPERATOR
LATHE MILLING MACHINERY OPERATOR
AMBATTUR TAPSTIA, KATTUR
Contact: 95660 61750




THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005




CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.




அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..




LOW COST MATRIMONY WEBSITE
CALL: 7789951009




MLMPERFECT.COM
Start Any MLM Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by 1000+ satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247




We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
Package Rs. 4.8 LPA
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்





WANTED EXPERIENCED SOCIAL MEDIA CONTENT CREATORS
94386 10756


முனிஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்க அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget <> We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990


ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998



# பல்சுவை களஞ்சியம்



# தோல் அரிப்பு, சொறி போன்றவற்றுக்கு மருந்தாகும் கற்பூரவள்ளி இலைகள்



கற்பூரவள்ளி இலையானது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகுந்த பலனளிக்கக் கூடியது.

கற்பூரவள்ளி இலையின் சாறை எடுத்து தேன் கலந்து அருந்தி வந்தால் சளி மற்றும் இருமல் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

தோல் அரிப்பு, சொறி போன்றவற்றிற்கு கற்பூரவள்ளி இலைகளை சிறிது பறித்து, நன்கு கசக்கி அந்த இலைகளின் துளிகளை பாதிக்கப்பட்ட தோல் பகுதிகளில் விட்டு வந்தால் விரைவில் குணமாகும்.

கற்பூரவள்ளி செடிகளின் இலைகளை நன்றாக கசக்கி பிழிந்து, அந்த சாறை குடித்தால் மூக்கடைப்பு மற்றும் சைனஸ் தொந்தரவுகள் நீங்கும். அந்த இலை சொட்டுகளை தொண்டையில் படுமாறு அருந்த தொண்டைக்கட்டு, வறட்டு இருமல், சளி தொந்தரவுகள் ஆகியவை நீங்கும்.

கற்பூரவள்ளி இலையையும், துளசி இலையையும் சம அளவு எடுத்து சுத்தம் செய்து லேசாக வதக்கி சாறு எடுத்து தினமும் காலை வேளையில் கொடுத்து வந்தால் மார்புச்சளி குணமடையும்.


கற்பூரவள்ளி செடியின் இலை சாற்றின் சில துளிகளை உள்ளுக்கு அருந்தினால் அஜீரண கோளாறுகள் நீங்கும். நெஞ்செரிச்சல் குணமாகும். கற்பூரவள்ளி செடிகளின் இலைகள் சிறுநீரை அதிகம் பெருக்கும் தன்மை கொண்டது.

இது சிறுநீரகங்களில் அதிகளவில் சேரும் உப்புகளை கரைத்து சிறுநீரகங்களின் நலனை காக்கிறது.

தினமும் கற்பூரவள்ளி இலையினை சாப்பிட்டு வந்தால் நம்முடைய உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கவும் உதவும். கற்பூரவள்ளி இலை வாந்தி, குமட்டல் போன்ற பிரச்சனைகளுக்கும் மருந்தாக பயன்படுகிறது.

# பனங்கற்கண்டு மருத்துவ பயன்கள்





2 டேபிள் ஸ்பூன் வெங்காய ஜூஸ் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் பிரச்சினை சரியாகும்.

நம் முன்னோர்கள் இந்த பனங்கற்கண்டை சளி மற்றும் இருமலுக்கு பயன்படுத்தினர். மேலும் இது தொண்டைக் கரகரப்பு, சளியை வெளியேற்றுதல் மற்றும் இருமல் குறைதல் போன்றவற்றை செய்கிறது. இதற்கு இதை நீங்கள் வாயில் போட்டு அந்த உமிழ் நீரை முழுங்கினால் போதும்.

உங்கள் வாய் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் சீரகம் மற்றும் பனங்கற்கண்டை வாயில் போட்டு மென்று தின்றால் போதும் உங்கள் வாய் துர்நாற்றம் காணாமல் போகும்.

உங்களுக்கு எப்பொழுதும் சோர்வாக இருப்பது மாதிரி தோன்றுகிறதா? அதற்கு 1/2 டேபிள் ஸ்பூன் பசு மாட்டு நெய்யுடன் சிறிது பனங்கற்கண்டு மற்றும் சிறிது நிலக்கடலை சேர்த்து சாப்பிட்டால் போதும் மிகவும் சுறுசுறுப்பாக மாறிவிடுவீர்கள்.

தீராத சளி பிரச்சினை இருந்தால் அதற்கு 2 பாதாம் பருப்பு, 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு, 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத் தூள் பொடி சேர்த்து மிக்ஸியில் போட்டு பொடி பண்ணி பாலுடன் கலந்து குடித்தால் போதும் உங்கள் சளி பிரச்சினை காணாமல் போகும்.

தொண்டைக் கட்டிக் கொண்டு பேச முடியாமல் கஷ்டப்படுகிறீர்களா? 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத்தூள், 1/2 டேபிள் ஸ்பூன் நெய் மற்றும் 1/2 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டை வலி குணமாகும்.
சிறிது பனங்கற்கண்டு, பாதாம் பருப்பு மற்றும் சீரகம் சேர்த்து இரவில் படுப்பதற்கு முன் சாப்பிட்டு வந்தால் உங்கள் நினைவாற்றல் அதிகரிக்கும்.
மேலும் கண்பார்வை அதிகரிக்கும்.

உங்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்த பனங்கற்கண்டை பாதாம் மற்றும் மிளகுத் தூளுடன் சேர்த்து வாரத்திற்கு 2 முறை சாப்பிட்டால் போதும் உங்களை எந்த நோயும் அண்டாது.

# மீம்ஸ்












## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |



# ஜோக்ஸ்

குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?
=================
டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்

============
மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே? அவ்ங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,
=================
அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க
=================
டாக்டர் !டென்சன் ஆகாம இருக்கனும்னா என்ன பண்ணனும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்
============
பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?





அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம்.
பார்டர் எப்டி இருந்தா என்ன?
================
சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO
=============
மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்

============
டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?
================
சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க?
பலாக்காய்னு சொன்னா புரியாதா?

==============
எதுக்கு சார் அடிக்கடி " 1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல
==============
முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும்.
மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்
==================
குருவே! ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன்.
குருதட்சணையா ஸ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!
==================
இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!



# சமையல் அறை ஸ்பெஷல்



## சமைப்போம்.... ருசிப்போம்...
## வெஜிடபிள் மசாலா இட்லி செய்வது எப்படி?



தேவையான பொருட்கள்:
ரவை -2 கப்
தயிர் - 3 ஸ்பூன்
துருவிய கேரட்- ½ கப்
மெல்லியதாக அரிந்த குடமிளகாய்-1
கொத்தமல்லித் தழை- சிறிதளவு
உப்பு - தேவைக்கேற்ப

மசாலாவுக்கு:
வெங்காயம் - 2 (பொடியாக நறுக்கியது)
பச்சைப் பட்டாணி-1 கப்
மிளகாய்த் தூள்- ½ டீஸ்பூன்
மஞ்சள் தூள்- 1/4 டீஸ்பூன்
எண்ணெய்- தேவையான அளவு
உப்பு- தேவைக்கேற்ப

செய்முறை:
முதலில் ரவை, தயிர், தண்ணீர், உப்பு சேர்த்து பத்து நிமிடம் மூடி வைக்கவும்.
பிறகு கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, கடலைப் பருப்பு, கறிவேப்பிலை தாளித்து அதனுடன் வெங்காயம், பச்சைப்பட்டாணி சேர்த்து நன்றாக வதக்கவும்.
அதனுடன் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், சிறிது உப்பு சேர்த்து கிளறி வைத்துக் கொள்ளவும்.
ஊறிய ரவையில் குடமிளகாய், துருவிய கேரட், கொத்தமல்லித் தழை சேர்த்து நன்றாக கலக்கவும்.
இப்போது இட்லித் தட்டில் எண்ணெய் தடவி, ரவை கலந்த கலவையை கொஞ்சம் ஊற்றி அதன் மேல் பட்டாணி மசாலா கலவை வைத்து மீண்டும் அதற்கு மேல் ரவை கலவையை ஊற்றவும்.
எப்போதும் போல் ஆவியில் வேகவைத்து எடுத்து பரிமாறவும்.
வெஜிடபிள் ரவா இட்லிக்கு நடுவில் பட்டாணி மசாலா மிகவும் சுவையாக இருக்கும். நீண்ட நேரம் மிருதுவாக இருக்கும். சத்துகள் நிறைந்த வெஜிடபிள் மசாலா இட்லியை குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.
தேவைப்பட்டால் பட்டாணி மசாலா கலவையில் துருவிய பன்னீர், காலிபிளவர் போன்றவற்றை சேர்த்தும் செய்யலாம்.

## பயனுள்ள சமையல் டிப்ஸ் உங்களுக்காக...

* பால் பாயாசம் சுவையாக இருக்க பாதாம் பருப்பை தோல் நீக்கி அரைத்து சேர்க்க வேண்டும்.

* பச்சை மிளகாய், சிவப்பு மிளகாய் போன்றவற்றை வெந்நீரில் போட்டு சிறிது நேரம் ஊறவைத்து, சமைத்தால் காரத்தன்மை குறையும்.

* அப்பளத்தின் மீது லேசாக நெய் தடவி, சிறிது மிளகுத் தூள் தூவி சுட்டெடுத்தால் சுவை நன்றாக இருக்கும்.

* ஓட்ஸை கஞ்சியாக குடிப்பதை விட இட்லி மாவு, தோசை மாவில் சேர்த்து கலந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

* வடை மாவு நீர்த்து விட்டால், அதன் மீது சிறிது பச்சரிசி மாவு, கைப்பிடி ரவை சேர்த்தால் அதிகப்படியான நீரை அது உறிஞ்சி விடும்.

* பூண்டுவை கொதிக்கும் தண்ணீரில் போட்டு பின்பு குளிர்ந்த நீரில் லேசாக ஊறவைத்தால் சுலபமாக உரிக்கலாம்.

* சூடான எண்ணெய்யில் சிறிது மைதா மாவு தூவினால் அந்த எண்ணெய்யில் எதை பொரித்தாலும் சட்டென்று ஒட்டாது.

* தக்காளி கெடாமல் இருக்க காற்றோட்டமான இடத்தில் வைக்க வேண்டும்.

* தேங்காயை மேல் நோக்கியவாறு வைத்தால் நீண்ட நாட்கள் அழுகாமல் இருக்கும்.

* அரிசி, ரவா, கோதுமை டப்பாவில் பூச்சி வராமல் இருக்க ஒரு சிறு துண்டு வசம்பை துணியில் கட்டி டப்பாவில் போட வேண்டும்.

* இட்லி மாவு அரைக்கும் போது சிறிது வெண்டைக்காய் சேர்த்து அரைத்தால் இட்லி மென்மையாக வரும்.

* தயிரில் ஒரு துண்டு தேங்காயை போட்டு வைத்தால் தயிர் எளிதில் புளிக்காது.

* பாகற்காயை உப்பு, மஞ்சள், வெல்லம், எலுமிச்சை சாறு கலந்த தண்ணீரில் 30 நிமிடங்கள் ஊற வைத்தால் கசக்காது.

## மாம்பழ ரப்ரி



தேவையானவை :
1. பால் - 2 1/2 கப்
2. தோல் நீக்கிய கனிந்த மாம்பழ துண்டுகள் - ஒரு கப்
3. சர்க்கரை - 1/4 கப்
4. பிஸ்தா - 5
5. பாதாம் - 4
6. ஏலக்காய் பொடி - 1/4 டீஸ்பூன்
7. குங்குமப்பூ - சிறிது

செய்முறை:

1. முதலில் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி நன்கு கொதிக்க வைத்து விட்டு பிறகு இறக்கி அதில் பாதாமை போட்டு இருபது நிமிடம் ஊற வைத்து, பின் அதன் தோலை நீக்கிவிட்டு, துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும்.

2. பின்னர் பிஸ்தாவையும் துண்டுகளாக்கிக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றி அடுப்பில் வைத்து வெதுவெதுப்பாக சூடேற்றி இறக்கி, அதில் குங்குமப்பூவை சேர்த்து சிறிது நேரம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.

3. பிறகு மாம்பழ துண்டுகளை மிக்ஸியில் போட்டு, அத்துடன் சிறிது பால் சேர்த்து நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

4. பின் குங்குமப்பூ பாலை அடுப்பில் வைத்து பாலை நன்கு கொதிக்க விட வேண்டும். அடுத்து அதில் சர்க்கரை சேர்த்து கிளறி, சர்க்கரை கரைந்ததும், அதனை இறக்கி, குளிர வைக்க வேண்டும்.

5. பாலானது குளிர்ந்ததும், அதில் மாம்பழ கூழ் சேர்த்து, ஏலக்காய் பொடி, பாதாம், பிஸ்தா, சேர்த்து கிளறி பரிமாறினால், சுவையான மாம்பழ ரப்ரி ரெடி!!!



## பூண்டு தொக்கு



தேவையான பொருட்கள்:
பூண்டு - 20 லிருந்து 25
மிளகாய் பொடி-2 tbsps
கொத்தமல்லி பொடி-1tbsp
கடுகு -1 tsp
வெந்தையம்-1 tsp
பெருங்காய பொடி- 3 tsp
கறிவேப்பிலை- தேவைக்கேற்ப
புளி-சிறிய எழும்பிச்சை அளவு
உப்பு- தேவைக்கேற்ப

நல்லஎண்ணெய்-2 தேக்கரண்டியளவு
செய்முறை:
*முதலில் பூண்டை தோலுரித்து எடுத்து கொள்ளவும்.
*புலியை தண்ணீரில் ஊறவைத்து ,கரைத்து எடுத்துக்கொள்ளவும்.
*1/4 கடுகயையும் ,வெந்தையத்தையும் எண்ணெய் இல்லாமல் வறுத்து பொடி செய்தது கொள்ளவும்.
*பின்னர் எண்ணெயை காயவைத்து அதில் கடுகயையும் ,வெந்தையத்தையும் சேர்த்து மற்றும் பெருங்காய பொடி,பூண்டையும் சேர்த்து வதக்கவும்.
*நன்றாக வதங்கிய பிறகு அதில் மிளகாய்த்தூள்,கொத்தமல்லி பொடி ஆகியவற்றைசேர்த்து பிரட்டி நன்றாக வதக்கி பச்சைவாசனை போனவுடன் இறக்கவும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## காரப் பொரி

தேவையானவை :
1. பொரி - 1 கப்
2. பொட்டுக்கடலை - 1 டேபிள்ஸ்பூன்
3. கேரட் துருவல் - 2 டீஸ்பூன்
4. பீட்ரூட் துருவல் - 2 டீஸ்பூன் (தேவைப்பட்டால்)
5. காய்ந்த மிளகாய் - 2
6. கொத்தமல்லித்தழை - 1 டேபிள்ஸ்பூன்
7. கரம் மசாலாத்தூள் - 1/2 டீஸ்பூன்
8. வறுத்த வேர்க்கடலை - 2 டீஸ்பூன்
9. பூண்டு - 5 பல்
10. பெரிய வெங்காயம் - 5 (பொடித்தது)
11. தட்டுவடை - 4 (தேவைப்பட்டால்)
12. தேங்காய் எண்ணெய் - 2 டீஸ்பூன்
13. உப்பு - தேவைக்கேற்ப

செய்முறை :

1. பூண்டுடன் காய்ந்த மிளகாய், கொஞ்சம் தண்ணீர், தேங்காய் எண்ணெய் 1 டீஸ்பூன் ஆகியவை சேர்த்து நன்றாக அரைக்கவும்.
2. ஓர் அகலமான பாத்திரத்தில் பொரி, பொட்டுக்கடலை, வறுத்த வேர்க்கடலை, கேரட் துருவல், பீட்ரூட் துருவல், சிறிது கரம் மசாலாத்தூள், அரைத்த விழுது, பொடியாக அரிந்த பெரிய வெங்காயம், உப்பு அனைத்தையும் போட்டு தேங்காய் எண்ணெய் சிறிது விட்டு கலக்கி கொத்தமல்லித்தழை தூவி அலங்கரிக்கவும். அதில் விருப்பப்பட்டால் தட்டுவடையை ஒன்றிரண்டாக உடைத்தும் சேர்க்கலாம்.



## உணவை எந்த பாத்திரத்தில் சமைப்பது நல்லது?

மண்பாண்டம் 100%
வெண்கலம் 97%
பித்தளை 95%
சில்வர் - 90%

இதுவே அலுமினியம் ப்ரஷர் குக்கரில் சமைத்தால் 7% - 13% தான் இருக்கும். இதில் சமைத்த பதார்த்தங்களை சாப்பிடுவதன் மூலம் சர்க்கரை வியாதி, முழங்கால் வலி, விரைவில் முதுமை, இதர வியாதிகளுக்கு ஆளாக்கப்படுவார்கள்.


"எந்த ஆகாரத்தை சமைத்தாலும் காற்று, வெளிச்சம் இருக்க வேண்டும். சூரிய ஒளி, காற்று படாத ஆகாரம் விஷத்துக்கு சமம்".

ப்ரஷர் குக்கர் இதில் ஆகாரம் சமைக்கும் பொழுது எந்த விதமான காற்றும், சூரிய ஒளியும் படுவதற்கான வாய்ப்பில்லை. இது முழுவதுமாக விஷமானது.



இதன் உபயோகம் பிரிட்டிஷ்காரர்களால் சிறைச்சாலையில் உள்ள பாரதீய கலவரக்காரர்களை சக்தியற்றவர்களாக ஆக்குவதற்கு நம் தேசத்திற்கு கொண்டு வரபட்டது என்றால் எவ்வளவு ஆபத்தான விஷ பாத்திரத்தில் நாம் உணவருந்துகிறோம் ப்ரஷர் என்றால் நிர்பந்தம். அப்படி என்றால் நாம் ப்ரஷர் குக்கரில் சமைக்கும் பதார்த்தம் நிர்பந்தத்திற்கு உள்ளாகி விரைவில் மிருதுவாகும். ஆனால் வேகாது. பதார்த்தம் வேகுவது வேறு, மிருதுவாவது வேறு. Central Drug Research Institute (CRDI) அவர்களின் ஆராய்ச்சி மூலமும் இந்த விஷயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## திருச்செந்தூர் மாசித் திருவிழா



திருச்செந்தூர் மாசித் திருவிழாவில் வள்ளி, தேவசேனா சமேதராக குமரவிடங்கபெருமான், சிங்ககேடயச் சப்பரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்தார்.

## புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்




கருங்கல், செல்லங்கோணம் பகுதியில் நடந்த கன்னியாகுமரி மாவட்ட அமெச்சூர் கபடி சங்கத்தின் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் பங்கேற்றார்.

## 'வனமும் வாழ்வும்' பயிற்சி திட்ட நிறைவு விழா



திருச்சி மாவட்ட வன அலுவலகத்தில் நேற்று நடந்த பள்ளி மாணவ மாணவியர்களுக்கான 'வனமும் வாழ்வும்' பயிற்சி திட்ட நிறைவு விழாவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## மகளிர் உரிமைத் தொகை கேட்டு மனு அளிக்க குவிந்த பெண்கள்.



கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மகளிர் உரிமைத் தொகை கேட்டு மனு அளிக்க குவிந்த பெண்கள்.

## 10 பிங்க் ஆட்டோக்கள்



தூத்துக்குடி வ உ சிதம்பரனார் துறைமுக மேம்பாட்டு நிதியிலிருந்து மீனவ சமுதாயப் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் வகையில் 10 பிங்க் ஆட்டோக்களை மத்திய அமைச்சர் சர்பானந்தசோனாவால், பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் வழங்கினர்.

## கேசிசி கிரிக்கெட் கிளப் நடத்திய கிரிக்கெட் போட்டி



சங்கரன்கோவிலில் ஜெயலலிதா 78 ஆவது பிறந்தநாள் விழாவில் கேசிசி கிரிக்கெட் கிளப் நடத்திய கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி பரிசுகளை வழங்கினார்.

## இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்



அரியலூரில், 100 மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.1,01,80,000 மதிப்பீட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். கலெக்டர் ரத்தினசாமி, எம்எல்ஏக்கள் சின்னப்பா, கண்ணன், நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன் உடன் உள்ளனர்.

## எடப்பாடி பழனிசாமிக்கு செங்கோல்



பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் பேசிய அதிமுக பொதுச்செயலாளர்எடப்பாடி பழனிசாமிக்கு செங்கோல் வழங்கப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்ட இறுதி வாக்காளர் பட்டியல்



தஞ்சாவூர் மாவட்ட இறுதி வாக்காளர் பட்டியலை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் நேற்று வெளியிட்டார்.

## பாஜக ஆர்ப்பாட்டம்



போதைப் பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தத்தவறியதாக திமுக அரசை கண்டித்து கோவையில் பாஜக ஆர்ப்பாட்டம் நடத்தியது.

## சமூக வலைத்தளப் பயிற்சிப் பாசறை நிகழ்வு



சென்னை அண்ணா அறிவாலயத்தில், தி.மு.க மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் நடைபெற்ற சமூக வலைத்தளப் பயிற்சிப் பாசறை நிகழ்வில் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி.பேசினார்.

## அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் மாசி தேரோட்டம்



கீழ்பென்னாத்தூர் ஆஞ்சநேயர் குளக்கரைமேட்டில் புற்று உருவில் அருள் பாலித்து வரும் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் மாசி தேரோட்டம் நடந்தது.



அரியலூர், உடையார் பாளையம் மற்றும் ஆண்டிமடம் வட்டங்களைச் சேர்ந்த 727 பயனாளிகளுக்கு ரூ.3,85,86,769 மதிப்பிலான இணையவழி பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

## அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



விருதுநகரில் நடந்த அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், எஸ்.பி.வேலுமணி, கே.டி. ராஜேந்திரபாலாஜி, ஆர்.பி.உதயகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## கன்னியாகுமரி மாவட்ட இறுதி வாக்காளர் பட்டியல்



கன்னியாகுமரி மாவட்ட இறுதி வாக்காளர் பட்டியலை நேற்று கலெக்டர் அழகுமீனா வெளியிட்டார்.

## வெல்லும் தமிழ் பெண்கள் திமுக மகளிர் அணியின் தேர்தல் பரப்புரை



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் வெல்லும் தமிழ் பெண்கள் திமுக மகளிர் அணியின் தேர்தல் பரப்புரை பிரச்சாரத்திற்கான ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

## ஸ்ரீகிருஷ்ணர் கோயிலில் கும்பாபிஷேகம்



செங்கத்தை அடுத்த சென்னசமுத்திரம் ஸ்ரீகிருஷ்ணர் கோயிலில் கும்பாபிஷேகம் நடந்தது.

## சால்வை அணிவித்து மரியாதை



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வடசென்னை மாவட்டம் முன்னாள் தலைவர் திரு குப்புசாமி வழக்கறிஞர் மரியாதை நிமிர்த்தமாக திரு பாலகிருஷ்ணன் வடசென்னை மாவட்ட கிழக்கு துணைத் தலைவர் சால்வை அணிவித்தார்

## 108 பால்குடம் சுமந்து சென்ற பக்தர்கள்



அச்சிறுப்பாக்கம் அடுத்த பெரும்பேர்கண்டிகை சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசி மாத கிருத்திகை விழாவில் 108 பால்குடம் சுமந்து சென்ற பக்தர்கள்..

## திருவள்ளுவர் சிலை திறப்பு



காவேரிப்பாக்கம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் சிலையை அமைச்சர் காந்தி திறந்துவைத்தார்.

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவச் சிலை திறப்பு



அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பாளையம்பட்டியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவச் சிலையை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்.

## தேமுதிக பொது செயலாளர் நேர்காணல்



தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிட விருப்ப மனுஅளித்தவர்களிடம் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா நேர்காணல் நடத்தினார்.

## 39வது ஆண்டு விளையாட்டு விழா



கோவை ராமகிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரியில் 39வது ஆண்டு விளையாட்டு விழா நடந்தது. மாணவியர் அணியில் முதுநிலை எம்பிஏ,எம்எஸ்டபிள்யூ துறை முதலிடம் பிடித்து கோப்பையை வென்றது.

## மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்



செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், பல்லாவரம் தெரேசா பள்ளியில் நடந்த மாபெரும் வேலைவாய்ப்பு முகாமை துவக்கி வைத்து, தேர்வு செய்தவர்களுக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.உடன் இ.கருணாநிதி எம்எல்ஏ.

## தெருமுனை பிரச்சார கூட்டம்



6 நாகர்கோவில் மேல மறவன்குடியிருப்பு சக்திகேந்திரத்தில் மத்திய பாஜக அரசின் பட்ஜெட் விளக்க தெருமுனை பிரச்சார கூட்டத்தில் மாநில செயலாளர் மீனாதேவ் பேசினார்.

## தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தின் திறப்பு விழா



தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியகத்தின் திறப்பு விழா மற்றும் 8 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மற்றும் 5 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் பெருந்துறை சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்கள் தொடங்குதல் மற்றும் ரூ.1,500 கோடி மதிப்புள்ள பல்வேறு துறைமுகத் திட்டங்களை மத்திய அமைச்சர் சர்பானந்த் சோனாவால் துவக்கி வைத்தார். மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பங்கேற்றார்.

## ஆயத்த ஆடை தொழிற்சாலை கட்டுவதற்கான கட்டுமான பணி



மன்னார்குடி சட்டமன்ற தொகுதி, திருப்பாலக்குடி ஊராட்சியில், 3.61 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.50 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக 2000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய ஆயத்த ஆடை தொழிற்சாலை கட்டுவதற்கான கட்டுமான பணிகளை அமைச்சர் டிஆர்பி ராஜா அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

## தேரோட்ட திருக்கல்யாணம்



திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவிலில் மாசி மக பிரமோற்சவ திருவிழாவில், தேரோட்ட திருக்கல்யாணம் நடந்தது.

## தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம்




குளச்சல் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டத்தில் இனிகோஇருதயராஜ் எம்எல்ஏவுடன் குமரி கிழக்குமாவட்ட செயலாளர் மேயர் மகேஷ் பங்கேற்றார்.



# சுற்றுலா: உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் தமிழக அளவில் திருச்சி முதலிடம்!

**2025-ம் ஆண்டில் 3,13,17,745 பேர் வருகை**



2025-ம் ஆண்டு தமிழகத்தில் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் திருச்சி மாவட்டம் முதலிடத்தை பிடித்துள்ளது. வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் 6-ம் இடத்தை பிடித்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை சேகரித்த புள்ளி விவர தரவுகளின் அடிப்படையில், 2025-ம் ஆண்டு திருச்சி மாவட்டம் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் முதலிடம் பிடித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஆன்மிக தலங்கள், சுற்றுலாத் தலங்கள், தொன்மை வாய்ந்த தொல்லியல் சின்னங்கள் ஆகியவற்றை பார்வையிட பெருமளவிலான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

இதில், ஸ்ரீரங்கம், சமயபுரம், திருவானைக்காவல், மலைக்கோட்டை, திருப்பட்டூர், திருவெள்ளறை ஆகிய இடங்களில் உள்ள பிரசித்திபெற்ற கோயில்களுக்கு அதிக எண்ணிக்கையில் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை புரிந்துள்ளனர்.

மேலும், முக்கொம்பு மேலணை, வண்ணத்துப்பூச்சி பூங்கா, பறவைகள் பூங்கா ஆகியவற்றுக்கும் கணிசமான எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.




2025-ம் ஆண்டு தமிழக சுற்றுலாத் துறை புள்ளிவிவரப்படி திருச்சி மாவட்டத்துக்கு 3,13,17,745 பேர் வருகை தந்துள்ளனர். திருச்சிக்கு அடுத்தபடியாக தூத்துக்குடி மாவட்டம் 2,67,83,635 உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையுடன் 2-ம் இடத்தை பிடித்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் 2,62,44,694 சுற்றுலா பயணிகள் வருகையுடன் 3-ம் இடத்தை பிடித்துள்ளது. இதைத்தொடர்ந்து, மதுரை, திருவள்ளூர், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், விருதுநகர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள் முறையே 4 முதல் 10 இடங்களை பிடித்துள்ளன.

2025-ம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் சென்னை முதலிடத்தை பிடித்துள்ளது. சென்னை, மதுரை, செங்கல்பட்டு, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் முறையே 1 முதல் 10 இடங்களை பிடித்துள்ளன.

சென்னைக்கு 2,60,411 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். மதுரைக்கு 2,40,056 பேரும், செங்கல்பட்டுக்கு 2,37,045 பேரும் வருகை புரிந்துள்ளனர். திருச்சி மாவட்டத்துக்கு 1,71,345 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை புரிந்ததன் அடிப்படையில் மாநில அளவில் 6-வது இடத்தை பிடித்துள்ளது.

இதுகுறித்து திருச்சி மாவட்ட சுற்றுலா அலுவலர் பால முருகன், கூறியது:

சுற்றுலாத் துறையினர் திருச்சி மாவட்டத்தில் உள்ள ஆன்மிகம், சுற்றுலா, தொல்லியல் சிறப்புமிக்க இடங்களில் சேகரித்த தரவுகளின் அடிப்படையில் 2025-ம் ஆண்டு உள்நாட்டு சுற்றுலா பயணிகள் வருகையில் மாநில அளவில் திருச்சி மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது. கடந்த ஆண்டைவிட பயணிகள் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது. சாலை, ரயில், விமானப் போக்குவரத்து வசதி, வாடகை மற்றும் பொது போக்குவரத்து வாகன வசதி, தண்ணீர் வசதி, அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் உள்ளிட்ட காரணங்களால் திருச்சிக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வேலைவாய்ப்பு கார்னர்

# ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் அப்ரண்டீஸ் பயிற்சியில் சேர வேண்டுமா..?

இந்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் அரசு நிறுவனமான ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள பட்டதாரி தொழில்பழகுநர் (பொறியியல்) பயிற்சிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு பொறியியல் துறையில் சிவில், மெக்கானிக்கல், எலெக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ருமென்டேஷன் பிரிவில் பட்டம் பெற்றவர்களிடம் இருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: தொழில்பழகுநர் பயிற்சி(பொறியியல்)

காலியிடங்கள்: 612 (தமிழ்நாட்டுற்கு 35 இடங்கள்)

பயிற்சி காலம்: 12 மாதங்கள் ஆண்டு

தகுதி: பொறியியல் துறையில் சிவில், மெக்கானிக்கல், எலெக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ருமென்டேஷன் பிரிவுகளில் பிஇ அல்லது பி.டெக் முடித்திருக்க வேண்டும்.

உதவித்தொகை: பயிற்சியின் போது மாதம் ரூ.25,000 உதவித்தொகையாக வழங்கப்படும்.

வயது வரம்பு: 2.3.2026 தேதியின்படி 18 முதல் 25 வயதிற்குள் இருக்க வேண்டும்.

அரசு விதிமுறைகளின்படி மாற்றுத்திறனர் பிரிவனர் உள்பட 3 முதல் 15 ஆண்டுகள் வயதுவரம்பில் தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: தகுதியானவர்கள் பட்டியல் தேர்வு செய்யப்பட்டு அவர்களது சான்றிதழ்கள் சரிபார்ப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பிக்கும் முறை: https://www.hindustanpetroleum.com இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிப்பை தெளிவாக படித்து பார்த்துவிட்டு அளிதில் கொடுக்கப்பட்டிருக்கும் http://jobs.hpcl.co.in/Recruit_New/recruitlogin.jsp -லிங்கில் சென்று விண்ணப்பிக்கவும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 2.3.2026

## விவசாயிகள் பயிற்சி முகாம்

**தஞ்சாவூர், பிப்.24:**

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக, ஒன்றிய அளவிலான ஒரு நாள் விவசாயிகள் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில் கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான நவீன தொழில் நுட்ப கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. விவசாயிகள் எழுப்பிய கேள்விகளுக்கு, கால்நடைத்துறை மருத்துவர்கள் விளக்கமளித்தனர். மேலும், மண்புழு உரம் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் மரு. இ. விஜயராகவன் மற்றும் மரு. சா. வீரமணி தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், கால்நடை உதவி மருத்துவர்கள் கவிதா, ஜென்சிலின், மருதமுத்து ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்..

## நில உடமை பதிவு செய்ய பிப்.26 வரை சிறப்பு முகாம்

**தஞ்சாவூர், பிப். 24:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நில உடமை பதிவு செய்யாத 60 ஆயிரம் விவசாயிகள் பதிவு செய்ய வசதியாக வரும் பிப்.26 ஆம் தேதி வரை சிறப்பு முகாம் நடைபெறவுள்ளதால், விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வேளாண்மைத் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்து, தஞ்சாவூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கோ. வித்யா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் பிரதம மந்திரியின் நில உடமைக்கான தனித்துவ அடையாள எண் பெற வசதியாக, பிப்.23 (திங்கள்கிழமை) முதல் மூன்று நாட்களுக்கு சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் வரும் காலங்களில் தொடர்ந்து ஒன்றிய, மாநில அரசுகளின் சலுகைகளை பெற்றிட, நில உடமை ஆவணங்களை பதிவு செய்வது, விவசாய அடையாள எண்ணை பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதுவரை தங்களது நில உடமை விவரங்களை வேளாண் துறையின் வலைத்தளத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனைத்துறை கள அலுவலர்களை தொடர்பு கொண்டு, தங்களது நில உடமை ஆவணங்களை வேளாண் துறை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்து விவசாயிகளுக்கான அடையாள எண் பெற்றிட அறிவுறுத்தப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,65,708 விவசாயிகள் உள்ளனர்.

இதில் 1,05,305 விவசாயிகள் பிரதம மந்திரியின் தனித்துவ அடையாளங்களையும் பெற்றுள்ளனர். இன்னும் 60,403 விவசாயிகள். விவசாய அடையாள எண் பெறாத விவசாயிகள், விவசாயிகளாக கருதப்பட மாட்டார்கள். வரும் காலங்களில் மானியத் திட்டங்கள் பயன்களை பெற இயலாது.பிரதம மந்திரி கவுரவ நிதி திட்டம், பயிர் காப்பீடு திட்டம், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களில் பயன்பெற இந்த அடையாள எண் அவசியம். எனவே, தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் தங்களுடைய நிலத்தின் கணினிச் சிட்டா, ஆதார் அட்டை, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண், ஆகியவற்றுடன் அருகில் உள்ள பொது இ-சேவை மையம் அல்லது அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொடைக்கானலில் வெகுவாக குறைந்த சுற்றுலா பயணிகளின் வருகை!

**திண்டுக்கல், பிப்.24:**



கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாக குறையத் துவங்கியுள்ளதால் சுற்றுலாத் தலங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை கோடை சீசன் மாதங்களில் மட்டும் இருந்து வந்தது. பின்னர் வார விடுமுறை தினங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது. தற்போது ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகளின் வருகை காணப்படுகிறது.

கோடை சீசன், ஆஃப் சீசன், வார விடுமுறை தினங்களில் மலைச் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அளவுக்கு சுற்றுலாபயணிகளின் வாகனங்கள் கொடைக்கானலுக்கு வந்து செல்லும். அதிக மழைப் பொழிவு காலத்தில் சுற்றுலா பயணிகள் வருகை வெகுவாக குறைந்து காணப்படும்.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாக குறைந்து காணப்படுகிறது. இன்னும் ஒரு வாரத்தில் பிளஸ் 2, அதைத் தொடர்ந்து 10-ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் தொடங்கவுள்ளன.

மேலும், கோடை சீசனுக்கு இன்னும் ஒரு மாதமே உள்ளதால் கோடை சீசனை அனுபவிக்க சுற்றுலாப் பயணிகள் தங்கள் பயணத்தை தள்ளிப் போட்டிருக்கலாம் என்பதால் கடந்த சில தினங்களாக கொடைக்கானல் சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து காணப்படுகிறது.

சாலைகளில் சுற்றுலா வாகனங்களும் அதிகம் காணப்படாததால் ஏரிச்சாலை உள்ளிட்ட பகுதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. ஏப்ரல் மாதம் கோடை சீசன் துவங்கும்போது சுற்றுலாப் பயணிகள் வருகை வழக்கம்போல் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்கின்றனர் சுற்றுலாவை நம்பி வியாபாரம் செய்பவர்கள்.

# ஆவடி பகுதியில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிப்பு: ரூ.8.78 லட்சம் அபராதம் விதிப்பு

**சென்னை, பிப்.24:**



ஆவடி பகுதியில் அதிகாரிகள் நடத்திய ஆய்வில் 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டு, நுகர்வோருக்கு ரூ.8.78 லட்சம் அபராதம் விதிக்கப் பட்டது.

இதுகுறித்து மின் வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சென்னை மையம், வடக்கு, தெற்கு, மேற்கு, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் அமலாக்க அதிகாரிகள் கடந்த 11-ம் தேதி ஆவடி பகுதியில் கூட்டு ஆய்வு மேற் கொண்டனர்.

அப்போது 11 மின் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதையடுத்து, மின் நுகர்வோருக்கு ரூ.8,77,593 அபராதம் விதிக்கப்பட்டது.

புகார் தெரிவிக்கலாம்:

மேலும், சம்பந்தப்பட்ட நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்றவியல் நடவடிக் கையை தவிர்க்க முன்வந்து அதற்குரிய சமரசத் தொகையாக ரூ.36 ஆயிரம் செலுத்தியதால், அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

மின் திருட்டு தொடர்பான தகவல்களை சென்னை அமலாக்க செயற்பொறியாளரிடம் கைபேசி 94458 57591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப் பட்டுள்ளது.

## பேராவூரணி மருத்துவருக்கு சிறந்த நூலாசிரியருக்கான விருது வழங்கல்

**தஞ்சாவூர், பிப்.24:**

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி எலும்பு முறிவு சிகிச்சை மருத்துவர் துரை. நீலகண்டன் எழுதிய, 'தூங்காத இரவுகள்' என்ற நூலுக்காக, தமிழக அரசின் சிறந்த நூலாசிரியர் விருது 'மக்கள் மருத்துவர்' துரை. நீலகண்டனுக்கு வழங்கப்பட்டது. தமிழ்த் தாத்தா உ.வே.சா பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக அரசால் கொண்டாடப்படும் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளான பிப்.19 ஆம் தேதி சிறந்த தமிழ் நூலாசிரியர்களுக்கான பரிசுத்தொகை ரூ.50 ஆயிரம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் விருதினை வழங்கினார். இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் வே. ராஜாராமன், முனைவர் ந. அருள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இலங்கைக்கு கடத்தவிருந்த ரூ.9 கோடி போதை மாத்திரைகள் பறிமுதல்: 4 பேர் கைது



**புதுகோட்டை, பிப்.24:**

இலங்கைக்கு கடத்தவிருந்த ரூ.9 கோடி மதிப்பிலான போதை மாத்திரைகளை புதுக்கோட்டை காவல்துறையினர் சனிக்கிழமை பறிமுதல் செய்து, இதுதொடர்பாக 4 பேரை கைது செய்துள்ளனர்.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா அளித்த பேட்டியில், "புதுக்கோட்டை நகரக் காவல் கண்காணிப்பாளர் இரா. பிருந்தா தலைமையிலான போலீசார் நகரப் பகுதியில்-திருமயம் சாலையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்துக்கு இடமான வகையில் 4 பேர் அட்டைப் பெட்டிகளுடன் சாலையோரத்தில் நின்றிருந்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் போதை மாத்திரைகளை இலங்கைக்கு கடத்த இருந்ததும், வாகனம் ஒன்றுக்காக காத்திருந்ததும் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, இந்தச் செயலில் ஈடுபட்ட இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியைச் சேர்ந்த ஆம்ஸ்ட்ராங்(33), அமல்ராஜ்(37), பிரதாப் (35), சந்தியா(36) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 7 பெட்டிகளில் 4.82 லட்சம் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதன் சந்தை மதிப்பு ரூ.9 கோடி இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இந்த மாத்திரைகள் உற்பத்தி செய்யப்பட்ட இடம் குறித்த விவரங்கள் பதிவிடப்படவில்லை. மாத்திரைகளை ஆய்வுக்கு அனுப்புகிறோம். அதன் அறிக்கை வந்தபிறகுதான் என்ன வகையான மாத்திரைகள் என்ற விவரங்கள் தெரியவரும். குற்றவாளிகள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பிறகு, விசாரணைக் காவல் எடுத்து விசாரிக்கும்போது, இந்த போதை மாத்திரைக் கடத்தல், உற்பத்தி குறித்த முழுமையான விவரங்கள் தெரியவரும். இதற்காக துணைக் காவல் கண்காணிப்பாளர் இரா. பிருந்தா தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. தினமும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பொதுமக்கள் 'டிரக் ப்ரீ டிஎன்' என்ற செயலியைப் பயன்படுத்தி தகவல்களைச் சொல்லலாம்" என்றார்.

# விஐடி சென்னையில் 'வைப்ரன்ஸ் 2026' சர்வதேச கலை விழா: 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பு

**சென்னை, பிப்.24:**

விஐடி சென்னையில் 'வைப்ரன்ஸ் 2026' என்ற சர்வதேச கலைத் திருவிழாவின் நிறைவு விழா நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. விஐடி நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் கோ. விசுவநாதன் தலைமை வகித்தார். விஐடி துணைத் தலைவர் முனைவர் ஜி.வி.செல்வம் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற பிரபல நடிகையும், மருத்துவருமான ஸ்ரீலீலா பேசியதாவது: கல்லூரி வாழ்க்கை அனைவருக்கும் முக்கியமானது. மாணவர்கள் தங்கள் இலக்குகளில் தெளிவாக இருக்க வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் அல்லது குறைந்தபட்சம் கல்லூரியை விட்டு வெளியேறும்போதாவது என்னென்ன விஷயங்களை செய்ய விரும்புகிறோம் என்று பட்டியல் தயாரித்து, அதன்படி செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விஐடி நிறுவனர் மற்றும் வேந்தர் கோ.விசுவநாதன் பேசும்போது, "விஐடி நிறுவனம் கல்வியில் மட்டுமல்ல, மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதிலும் முன்னிலை வகிக்கிறது. மாணவர்கள் அனைவரும் நன்றாகப் படித்து, உள்நாட்டில் மட்டுமின்றி, உலக அளவில் தங்களுக்கான இடத்தை உறுதி செய்ய வேண்டும்.

மாணவர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பை வழங்கி, உயர்ந்த நிலையை அடைய விஐடி உதவி வருவது மகிழ்ச்சியளிக்கிறது" என்றார்.

எஸ்எஸ்என் கல்லூரி சாம்பியன்: தொடர்ந்து, 'வைப்ரன்ஸ் 2026' கலை விழாவில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை எஸ்எஸ்என் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு நடிகை ஸ்ரீலீலா, விஐடி வேந்தர் கோ. விசுவநாதன், துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் ஆகியோர் கோப்பை வழங்கினர்.

விழாவில், விஐடி சென்னை இணை துணைவேந்தர் டி.தியாகராஜன், இயக்குநர் சத்தியநாராயணன், கூடுதல் பதிவாளர் பி.கே.மனோகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, வைப்ரன்ஸ் விழாவை பளுதூக்கும் வீராங்கனை டாக்டர் ஆர்த்தி அருண் கடந்த 18-ம் தேதி தொடங்கி வைத்தார்.

இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன், நடிகர் பிரேம்ஜி உள்ளிட்டோரின் இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. இந்தியா மட்டுமின்றி, பிரேசில், ஜப்பான், சிங்கப்பூர், தான்சானியா, கம்போடியா நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களை சேர்ந்த 30,000-க்கும் மேற்பட்ட மாணவகள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பழைய டென்ட் கொட்டகையை நினைவுகூரும் வகையில் 'VIT Talkies' என்ற கொட்டகை (திரையரங்கு) அமைக்கப்பட்டிருந்தது. மணல் பரப்பு, நாற்காலிகள் மற்றும் மேஜைகள் என்று 3 வகையான பிரிவுகளில் பார்வையாளர்கள் மற்றும் மாணவர்கள் அமரும் வகையில் இது தத்ரூபமாக அமைக்கப்பட்டிருந்தது.

டென்ட் கொட்டகையில் முதல் திரைப்படமாக எம்ஜிஆர் நடித்த மாபெரும் வெற்றித் திரைப்படம் 'ஆயிரத்தில் ஒருவன்' திரையிடப்பட்டது. இந்தப் படத்தின் பெட்டியை மாணவர்கள் குதிரை வண்டியில் வைத்து, மேள தாளங்கள் முழங்க, ஆட்டம் பாட்டத்துடன் உற்சாகமாக கொண்டு வந்தனர்.

மேலும், மண் தரை மற்றும் நாற்காலிகளில் அமர்ந்து உற்சாகமாக திரைப்படத்தைக் கண்டு ரசித்தனர்.

இளைய தலைமுறை முற்றிலும் அறிந்திராத டென்ட் கொட்டகை அனுபவத்தை விஐடி சென்னை மீட்டெடுத்துள்ளதாக துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் கூறினார்.

## க்ரைம் கார்னர்

### ஒடிசா: பள்ளியில் 7-ம் வகுப்பு சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் - 4 ஆசிரியர்கள் உள்பட 5 பேர் கைது

**புவனேஸ்வர், பிப்.24:**

ஒடிசா மாநிலம் கேந்திரபாரா மாவட்டத்தில் உள்ள உலவார் பகுதியில் இயங்கி வரும் தனியார் பள்ளியில், 7-ம் வகுப்பு படித்து வரும் 12 வயது சிறுமி ஒருவர், கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது பெற்றோரிடம், பள்ளியில் சிலர் தனக்கு பாலியல் துன்புறுத்தல் அளித்து வருவதாக கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமியின் பெற்றோர், இது குறித்து சிறுமியிடம் விரிவாக கேட்டபோது, இந்த விவகாரத்தில் ஆசிரியர்கள் சிலருக்கும் தொடர்பு இருப்பதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக சிறுமியின் பெற்றோர் இது குறித்து காவல்துறையிடம் புகார் அளித்தனர். இந்த புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய போலீசார், சம்பந்தப்பட்ட பள்ளியை சேர்ந்த ஆசிரியர்கள் சந்தன் குமார்(37), பிஸ்வா ரஞ்சன்(31), ராஷ்மி பிஸ்வால்(47), மினாடி பாய்(34) மற்றும் பள்ளி ஊழியர் ராஷ்மி ரஞ்சன் ராணா(32) ஆகிய 5 பேரை அதிரடியாக கைது செய்தனர். அவர்கள் மீது போக்சோ உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளும், மனநல ஆலோசனையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

### ஜார்க்கண்ட்: 16 வயது சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை - அதிர்ச்சி சம்பவம்

**ராஞ்சி, பிப்.24:**

ஜார்க்கண்ட் மாநிலம் கும்லா மாவட்டம் ராய்டி கிராமத்தை சேர்ந்த 16 வயதான சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை இரவு தனது ஆண் நண்பருடன் கிராமத்திற்கு நடந்து வந்துகொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த 10 பேர் கொண்ட கும்பல் சிறுமியின் ஆண் நண்பரை கடுமையாக தாக்கியுள்ளனர். பின்னர், சிறுமியை ஆள்நடமாட்டமற்ற பகுதிக்கு தூக்கிச்சென்ற கும்பல் அங்கு வைத்து சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

பின்னர், அந்த கும்பலிடமிருந்து தப்பிய சிறுமி தனக்கு நடந்த கொடூரம் குறித்து பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதையடுத்து சிறுமியின் பெற்றோர் போலீசில் புகார் அளித்தனர். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு தப்பியோடிய கும்பலை தீவிரமாக தேடி வருகின்றனர்.

### டிராக்டரில் இருந்து பேட்டரி திருட முயன்றதாக கூறி இளைஞரை அடித்துக்கொன்ற கிராமத்தினர்

**ராஞ்சி, பிப்.24:**

ஜார்க்கண்ட் மாநிலம் பலமு மாவட்டம் முர்மா கிராமத்தை சேர்ந்த இளைஞர் பவன் ராம் (வயது 22). இவர் நேற்று இரவு பக்கத்து கிராமமான டெலியாகி என்ற கிராமத்திற்கு சென்றுள்ளார்.

இந்நிலையில், அந்த கிராமத்தில் ஒரு வீட்டின் அருகே நிறுத்தப்பட்டிருந்த டிராக்டரில் இருந்து பேட்டரியை திருட பவன் ராம் முயன்றதாக கூறப்படுகிறது.

அப்போது, அந்த கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள், பொதுமக்கள் பவன் ராமை பிடித்துள்ளனர். பின்னர் அவரை ஊர் மத்தியில் உள்ள மின்கம்பத்தில் கட்டி வைத்து கடுமையாக தாக்கியுள்ளனர். கிராமத்தினர் நடத்திய தாக்குதலில் பவன் ராம் படுகாயமடைந்தார்

இந்த சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், பவன் ராமை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

பவன் ராமை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். அதேவேளை, பவன் ராம் தனது காதலியை சந்திக்க வந்திருக்கலாம் என்றும் அவரை கிராமத்தினர் அடித்து கொலை செய்துவிட்டு டிராக்டர் பேட்டரியை திருட வந்ததாக கூறி சம்பவத்தை திசைதிருப்ப முயற்சிப்பதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### கால்பந்து போட்டி: லயோலா கல்லூரி 4வது ஆண்டாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை

**சென்னை, பிப்.24:**

சென்னை லயோலா கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற 25வது எல்.டி. மர்பி நினைவு தென் இந்திய அளவிலான கால்பந்து போட்டியில் லயோலா கல்லூரி அணிகள் 4வது அண்டாக சாம்பியன் பட்டம் வென்று அபார சாதனை படைத்தது.

மொத்தம் 28 அணிகள் பங்கேற்ற இப்போட்டி நாக்அவுட் முறையில் நடைபெற்றது. பல ஆண்டுகளுக்குப் பிறகு லயோலாவின் இரு அணிகள் லயோலா வைட்ஸ் (ஏ) மற்றும் லயோலா யெல்லோஸ் (பி) — இறுதிப்போட்டிக்கு முன்னேறி, 'ஆல்-லயோலா' மோதலை உருவாக்கின.

இறுதிப்போட்டி பரபரப்பாக நடைபெற்றது. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் எடுக்காததால் போட்டி சமநிலையுடன் முடிந்தது. பின்னர் நடைபெற்ற பெனால்டி ஷூட்-அவுட் முறையில் லயோலா வைட்ஸ் (ஏ) அணி 53 என்ற கணக்கில் லயோலா யெல்லோஸ் (பி) அணியை வீழ்த்தி தொடர்ந்து நான்காவது ஆண்டாக சாம்பியன் பட்டத்தை தக்க வைத்தது.

பரிசளிப்பு விழாவில் முன்னாள் சர்வதேச கால்பந்து வீரர் முகமது அம்ஜத் மற்றும் தொழில்முறை வீரர் எம்.எட்வின் சிட்னி வான்ஸ்பால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு கோப்பைகள் வழங்கினர்.

### மகளிர் டி20 போட்டியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது

**அடிலெய்டு, பிப். 24:**

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற மகளிர் டி20 போட்டியில் இந்திய அணி 21 என்ற கணக்கில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது.

ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் பங்கேற்றது. இதில் தொடக்க ஆட்டத்தில் இந்தியா 21 ரன் வித்தியாசத்திலும், 2-வது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 19 ரன் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது. இந்த நிலையில் இந்தியா- ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி டி20 போட்டி அடிலெய்டில் நேற்று நடந்தது. டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் ஹாமன்பிரீத் கவுர் பேட்டிங்கை தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது. தொடக்க வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா 55 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 82 ரன்கள் விளாசினார். அவருக்கு உறுதுணையாக விளையாடிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் 46 பந்துகளில், 4 பவுண்டரிகளுடன் 59 ரன்கள் எடுத்தார். இந்த ஜோடி 2-வதுவிக்கெட்டுக்கு 82 பந்துகளில் 121ரன்கள் குவித்து அசத்தியது. ஷபாலி வர்மா 7, ரிச்சா கோஷ் 18 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர். கேப்டன் ஹர்மன்பிரீத்கவுர் 4 பந்துகளில் 2 ரன்கள் சேர்த்தார். இந்திய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 177 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி பேட்ஸ்மேன்கள் தொடக்கம் முதலே தடுமாடினர். ஆஸ்திரேலிய அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 159 ரன்களே எடுக்க முடிந்தது. இதன் மூலம் 17 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

# கொடைக்கானல் மலைப்பகுதியில்பூத்துக் குலுங்கும் ஜக்கரண்டா மலர்கள்: சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர்



**கொடைக்கானல், பிப்.24:**

மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானலில் தற்பொழுது ஆங்காங்கு ஜக்கரண்டா மலர்கள் பூத்துக் குலுங்குகின்றது .

இம்மலர்கள் ஆனது பனிக்காலங்களில் அதிகமாக பூத்துக் குலுங்குவது வழக்கம் பணி நிறைவு செய்யும் காலங்களில் மிக அதிகமாக ஆங்காங்கு வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு நடப்பட்ட வெளிநாட்டவர்கள் அதிகமாக விரும்பிய ஜக்கரண்டா மலரானது தற்பொழுது கொடைக்கானல் பகுதியிலும் பெருமாள் மலை பண்ணைக்காடு ஊத்து அடுக்கம் கொடைக்கானலில் பல்வேறு தனியார் பங்களாக்களிலும் பிரைவேட் பூங்கா செட்டியார் பூங்கா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் பூத்துக் குலுங்குகின்றது இப்போது கலை கண்டு சுற்றுலாப் பயணிகள் புகைப்படம் எடுப்பது செல்ஃபி எடுப்பது மகிழ்கின்றனர் .

தற்போது இப்போவானது பல்வேறு இடங்களில் தூக்க துவங்கினாலும் பல இடங்களில் அதிகமான பூக்கள் பூத்துக் குலுங்குகின்றது பசுமை நிறைந்த பகுதிகளில் ஆங்காங்கு இம்மலரானது நீல நிறத்தில் மிக உயரமாக கம்பீரமாக மரத்தில் பூத்துக் குலுங்குவதால் சுற்றுலா பயணிகள் நின்று ரசித்து புகைப்படங்கள் எடுப்பதனை தொடர்ந்து குடும்பத்தோடு செல்பிகள் எடுத்து மகிழ்ந்து வருகின்றார்கள் ஜக்கரண்டா மரம் ஆனது ஐரோப்பிய நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்கு ஆங்கிலேயர்கள் தங்கள் வாழ்ந்த பங்களாக்கள் பகுதிகளில் நட்டு வைத்தது குறிப்பிடத்தக்கது பல இடங்களில் இம்மலர்களானது தனியார் பள்ளி நிர்வாகங்களிலும் கூட பூத்துக் குலுங்குவது குறிப்பிடத்தக்கது.

# மனிதத்தையும், மனிதர்களையும் அழித்து ஆட்சியை பிடிக்க நினைக்கின்றவர்களின் பிடியில் சிக்கக் கூடாது: முதல்வர்

**மதுரை, பிப்.24:**

மனிதத்தையும், மனிதர்களையும் அழித்து ஆட்சியை பிடிக்க நினைக்கின்ற பா.ஜ.க.வின் பிடியில் தமிழ்நாடு சிக்கக்கூடாது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று மதுரையில், மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசனின் எண்ணத்தில், கமல் பண்பாட்டு மையம் ஒருங்கிணைத்த 'மறவோம்' எனும் காந்தியடிகளைப் போற்றும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசியதாவது

ராணி மங்கம்மாவினால் கட்டப்பட்ட அரண்மனையில், இந்த அருங்காட்சியகத்தை அமைத்து, இந்தியாவின் முதல் பிரதமரான நேரு தான் இதை திறந்து வைத்திருக்கிறார். இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்து இந்த அருங்காட்சியகத்தை புதுப்பிக்கும் பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் நடந்து கொண்டிருக்கிறது. இந்திய நாட்டில், காந்திக்காக அமைக்கப்பட்ட முதல் அருங்காட்சியகம் இதுதான். அண்ணல் சுடப்பட்டபோது அணிந்திருந்த, ரத்தக்கறை படிந்த வேட்டி இங்கேதான் இருக்கிறது. அவர் பயன்படுத்திய பொருட்கள் எல்லாம் இங்கே இருக்கிறது. காந்தியடிகளை 'தமிழர்கள் மறவோம்' என்பதன் அடையாளம்தான் இந்த அருங்காட்சியகம்.

காந்தியடிகளை மக்களுடைய மனதில் இருந்து எப்படியாவது அகற்றிட வேண்டும்என்றுஇன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு துடித்துக்கொண்டிருக்கிறது. காந்திய கொள்கைகளை அழிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து, இப்போது, காந்தி என்கின்ற பெயரே இருக்கக் கூடாது என்ற இடத்திற்கு அவர்கள் நகர்ந்திருக்கிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டுதான், நூறு நாள் வேலைத் திட்டத்தில் இருந்து, காந்தியடிகள் பேரை நீக்கியது! அடுத்து, கரன்சி நோட்டில் இருந்தும் காந்தி படத்தை எடுத்தாலும் எடுத்துவிடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரை, ஒற்றைத்துவத்திற்கு எதிரானவர் காந்தி! இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அடையாளம் காந்தி! மதநல்லிணக்கத்துக்கான மகத்தான மந்திரம் காந்தி! இந்தியா அனைவருக்குமான நாடு என்ற கருத்தியல்தான் காந்தி! "நான் கொல்லப்பட்டாலும் கூட ராம், ரகீம் என்கிற பெயர்களை அடிக்கடி உச்சரிப்பதை விடமாட்டேன். இரண்டும் ஒரே கடவுளின் பெயர்கள்" என்று சொன்னவர் காந்தி! இதனால்தான், மதத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் அற்பர்களுக்கு காந்தியை பிடிப்பதில்லை. கிறிஸ்துமஸ் அன்றைக்கு கிறிஸ்துவர்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். மாற்றுத்திறனாளி என்றுகூட பார்க்காமல், சிறுமி மீது தாக்குதல் நடத்துகிறார்கள்.

மதம் பிடிக்காமல் மக்களை பக்குவப்படுத்துவதுதான் மதங்களின் வேலை! மதவெறி புகுந்தால், முதலில் இறப்பது மனிதம்தான்! இதை நன்றாக உணர்ந்த காரணத்தினால்தான் வெறுப்பை புறந்தள்ளி, தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது.

மனிதத்தையும்,மனிதர்களையும் அழித்து ஆட்சியை பிடிக்க நினைக்கின்ற பா.ஜ.க.வின் பிடியில் தமிழ்நாடு சிக்கக் கூடாது! இதற்காகதான் சொல்கிறேன், இந்த தேர்தல், தமிழ்நாட்டுக்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் தான். தமிழ்நாடு வெல்லும்! பா.ஜ.க. வெறுப்பு எஞ்சின்கள் தமிழ்நாட்டிற்கு தேவையே இல்லை என்றார்.

# தூய்மை பணியாளர் பத்மாவிற்கு இலவச வீட்டுமனை: தனியார் நிறுவனம் வழங்கியதுஹெலிகாப்டரில் பயணிக்க வைத்து கௌரவிப்பு

**காஞ்சிபுரம், பிப்.24:**




சென்னையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்தபோது கண்டெடுத்த சுமார் 45 லட்சம் ரூபாய் மதிப்பிலான 45 சவரன் தங்க நகைகளை கண்டெடுத்து நேர்மையுடன் பாண்டிபஜார் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

தற்போது தங்கம் விற்கக்கூடிய விலைக்கு அந்த ஏழை துப்புரவு பணிப்பெண் பத்மா அந்த நகைகளை எடுத்து சென்றிருக்கலாம். அந்தநேர்மையானசேவையை தமிழகம் முழுவதும் பல தரப்பினரும் பாராட்டினர். இந்த பெண்மணிக்கு நடிகர் ரஜினிகாந்த் தங்கச்சங்கிலியை பரிசாக வழங்கி அவரை பாராட்டினார்.

அதன் தொடர்ச்சியாக மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த தூய்மை பெண்மணி பத்மாவின் நேர்மையை பாராட்டி பாலமுருகன் என்டர்பிரைசஸ் நிறுவனர் வெங்கடேசன் தனது மதுராந்தகம் ஒன்றியத்துக்கு உட்பட்ட நெல்லி ஊராட்சி பகுதியில் எஸ்எஸ்என் வீட்டுமனை பிரிவில் பத்மாவிற்கு வீட்டுமனையை அன்பளிப்பாக வழங்கினார். மேலும் பத்மாவை ஹெலிகாப்டரில் அமர வைத்து வானத்தில் சிறகடிக்க வைத்து அவருக்கு ஒரு இன்ப அதிர்ச்சி வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மறைமலைநகரை சேர்ந்த சமூக ஆர்வலர் தணிகாசலம் மற்றும் கிராம பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் தன்னார்வலர்கள் அப்பகுதியை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று நேர்மையே உருவான துப்புரவு பெண்மணி பத்மாவை வாழ்த்தி தங்களது பாராட்டுதல்களை தெரிவித்தனர்.

## வணிகச் செய்திகள்

### 'மாற்றம்' காணும் திருச்சி மாநகரம் - மல்டி பிளக்ஸ் முதல் ஷாப்பிங் மால்கள் வரை!

**திருச்சி, பிப்.24:**

திருச்சி மாநகரம் மிக வேகமாக வளர்ந்துவருவதை பறைசாற்றும் வகையில், ஷாப்பிங் மால்கள், மல்டி பிளக்ஸ் திரையரங்குகள் உள்ளிட்ட பெரும் வணிக வளாகங்கள் பல அடுத்தடுத்து உருவாகி வருகின்றன.

திருச்சி- தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் காட்டூர்- திருவெறும்பூர் இடையே ஒரே நேரத்தில் 6 திரைப்படங்கள் திரையிடும் வசதி கொண்ட மல்டி பிளக்ஸ் திரையரங்கம் மற்றும் வணிக வளாகம் விரைவில் திறக்கப்பட உள்ளது.

இந்த திரையரங்கம் தமிழகத்தின் முதலாவது டால்ஃபி ஆடம்ஸ் சவுண்ட் சிஸ்டம் வசதி கொண்ட திரையரங்கமாக உருவாகி வருகிறது. மேலும், இங்கு ஃபுட் கோர்ட், வணிக நிறுவனங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் அமைய உள்ளன. திருச்சி- சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சஞ்சீவி நகர் அருகே 3.9 லட்சம் சதுரடி பரப்பளவில், திரையரங்கம், ஃபுட் கோர்ட், ஹைப்பர் மார்க்கெட், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் ரூ.140 கோடியில் பாரத் மால் எனும் திருச்சியின் முதலாவது ஷாப்பிங் மால் கட்டப்பட்டு வருகிறது. இதே சாலையில் நெ.1 டோல்கேட் அருகே 2.2 லட்சம் சதுரடியில் 9 தளங்கள் கொண்ட ஷாப்பிங் மால் அமைய உள்ளது. இங்கு 3 திரைகள் கொண்ட மல்டி பிளக்ஸ் திரையரங்குகள், உணவகம், ஃபுட் கோர்ட், ஹைப்பர் மார்க்கெட், பல்வேறு பிராண்ட் நிறுவனங்களின் கடைகள் அமைய உள்ளன.

# நடப்பு நிதியாண்டில் 500 குற்றப் பத்திரிகை தாக்கல்: அமலாக்கத் துறை இலக்கு

புதுடெல்லி, பிப்.24:




அமலாக்கத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: அமலாக்கத் துறை மண்டல அதிகாரிகளுக்கான மாநாடு புதுதில்லிக்கு வெளியே 3 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குஜராத்தின் கெவாடியா, ஜம்மு -காஷ்மீரின் ஸ்ரீநகரைத் தொடர்ந்து, அஸ்ஸாம் மாநிலம் குவாஹாட்டியில் அமலாக்கத் துறை இயக்குநர் ராகுல் நவீன் தலைமையில் டிசம்பர் மாதம் 19-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை மாநாடு நடைபெற்றது. அதில் நடப்பு நிதியாண்டில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்குகளில் 500 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்வதென மீண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அடுத்த நிதியாண்டில் இதை விட அதிக எண்ணிக்கையில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தொடர்பான வழக்குப்பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து ஒரு ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளிடம் வலியுறுத்தப்பட்டது. பிரச்னைக்குரிய வழக்குக்கு மட்டும் இந்தக் கால அளவு பொருந்தாது எனவும் குறிப்பிடப்பட்டது. சட்டவிரோத பணப்பரிவர்த்தனை சட்டத்தில் உள்ள குற்றப் பிரிவுகளின்கீழ் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது சுட்டிக்காட்டப்பட்டு, பொறுப்புடனும், எச்சரிக்கையுடனும், நேர்மையாகவும், கடமையுணர்வுடனும் அவர்கள் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. சம்மன் மற்றும் பிற நோட்டீஸ்களை நீதித் துறை மூலம் அனுப்ப வேண்டும் என்றும், அப்போது எதற்காக அவை அனுப்பப்படுகிறது என்பதை தெளிவாக அதிகாரிகள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டது.

மாநாட்டில் வெளிநாடுகளில் உள்ள சட்டவிரோத சொத்துகளைக் கண்டறிவது, சட்டவிரோத பணப்பரிவர்த்தனைக்குப் பயன்படுத்தப்படும் வழிகளைக் கண்டறிவது, திவால் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவது, டிஜிட்டல் கைது மற்றும் கணினி வழி குற்ற வழக்குகள் குறித்தும், அவை அதிகரித்து வருவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

நாட்டில் சட்டவிரோதமாக நடைபெறும் சூதாட்டம், சட்டவிரோத ஆன்லைன் விளையாட்டு தளங்கள், பங்குச் சந்தைகளில் மோசடி வழிகள் மூலம் சட்டவிரோத பணப்பரிவர்த்தனையில் ஈடுபடுவதை கண்காணிக்கும்படியும் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இன்டர்போல போல உள்நாட்டில் இருக்கும் பாரத்போல் அமைப்பைப் பயன்படுத்தி, பாபிள் நோட்டீஸ் உள்ளிட்ட நோட்டீஸ்களை அனுப்பும்படி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. அதேபோல், அந்நிய செலாவணி சட்டத்தின்கீழ் பதியப்பட்டு நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகள் மீதான விசாரணையையும் மார்ச் 31-ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. இவ்வாறு அந்த அறிவிப்பில் அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

## சரத்பவார் ஆஸ்பத்திரியில் அனுமதி

புனே, பிப்.24:

மூத்த அரசியல்வாதியும் தேசியவாத காங்கிரஸ் தலைவருமான சரத்பவார் நீர்சத்து குறைபாடு காரணமாக புனேயில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 85 வயதான அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும், 2 நாட்கள் அவர் மருத்துவமனையில் இருப்பார் என்றும், அதன்பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்றும் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சரத்பவார் ஏற்கனவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 14-ம் தேதி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு - காஷ்மீர்: பாதுகாப்புப் படையின் 'ஆபரேசன் த்ராஷியில்' ஜெய்ஷ்-ஏ-முகமது தளபதி பலி!

புதுடெல்லி, பிப்.24:

ஜம்மு - காஷ்மீரில் நடைபெற்ற ஆபரேசன் த்ராஷி-1 நடவடிக்கையில் மேலும் ஒரு பயங்கரவாதியின் உடல் ஞாயிற்றுக்கிழமை(பிப். 22) கண்டெடுக்கப்பட்டது. பயங்கரவாதச் செயல் தடுப்பு நடவடிக்கையான ஆபரேசன் த்ராஷி-1 ஜம்மு - காஷ்மீரில் 36-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்தது. அதில், முக்கியமாக பாகிஸ்தானைச் சார்ந்த ஜெய்ஷ்-ஏ-முகமது (ஜே.ஏ.எம்.) பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 பேர் கிஷ்த்வார் மாவட்டத்தில் பாதுகாப்புப்படையின் என்கவுன்ட்டர் நடவடிக்கைகளில் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கிஷ்த்வார் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் தஞ்சமடைந்திருந்த மண் குடிசை வீட்டில் நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில் அந்த வீடு தீப்பற்றி கருகியது. அதில், அங்கிருந்த 3 பயங்கரவாதிகள் உடல் கருகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டன. அவர்களது உடல்களை அடையாளம் காணும் பணியில் ஈடுபட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதில் பலியான ஒரு நபர், தேடப்பட்டு வந்த ஜே. ஏ. எம். தளபதி சைஃபுல்லாவாக இருக்கலாம் என்பது புலனாகியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரூ.61 ஆயிரம் மதிப்பிலான கேமராவுக்கு பதில் பார்சலில் வந்த சலவைத்தூள் பாக்கெட்: தொழில் அதிபர் அதிர்ச்சி




பெங்களூரு, பிப்.24:

கர்நாடக மாநிலம் தார்வார் மாவட்டம் உப்பள்ளியில் உள்ள தங்கும் விடுதியில் சார்ஜாவை சேர்ந்த தொழில் அதிபர் ஆல்பிரட் கடந்த ஒரு வாரமாக தங்கியிருந்து வருகிறார். அவர் தனது நெருங்கிய நண்பருக்கு பரிசளிக்க பிரபல ஆன்லைன் விற்பனை நிறுவனத்தில் ரூ.60 ஆயிரத்து 990 மதிப்பிலான கேமராவை ஆர்டர் செய்து இருந்தார்.

இந்த நிலையில் நேற்று அவருக்கு ஆன்லைன் விற்பனை நிறுவனத்தில் இருந்து பார்சல் வந்தது. அதனை அவர் பிரித்து பார்த்தார். அப்போது அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது கேமரா அட்டைப் பெட்டி இருந்தது. ஆனால் அதனை பிரித்து பார்த்தபோது கேமராவுக்கு பதிலாக அரை கிலோ எடைகொண்ட 2 சலவைத்தூள் பாக்கெட்டுகள் இருந்தன. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் ஆன்லைன் விற்பனை நிறுவனத்தில் புகார் அளித்தார். ஆனால் அந்த நிறுவனத்தில் இந்த புகாருக்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை என்றும், அலட்சியமாக இருப்பதாகவும் ஆல்பிரட் குற்றம்சாட்டியுள்ளார்.

## தெலங்கானாவில் மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி உட்பட 21 பேர் போலீஸில் சரண்

ஐதராபாத், பிப்.24:



மாவோயிஸ்டு இயக்கத்தின் கமாண்டர் தேவுஜி மற்றும் அவருடன் சேர்ந்து 20 பேர் போலீஸில் சரணடைந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

நாட்டில் மாவோயிஸ்டு, நக்சல்களின் வன்முறையை அடுத்த மாதம் மார்ச் 31-ம் தேதிக்குள் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திட்டவட்டமாக கூறியுள்ளார். அதன்படி, ஆந்திரா, தெலங்கானா, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில் மாவோயிஸ்டுகளுக்கு எதிரான என்கவுன்ட்டர்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. இதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானோர் அந்தந்த மாநிலங்களில் சரணடைந்து வருகின்றனர். இந்நிலையில், தெலங்கானா மாநிலத்தில் தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியாவை (மாவோயிஸ்டு) சேர்ந்த கமாண்டர் திப்பிரி திருப்பதி (எ) தேவுஜி (எ) தேவ்ஜி (62) போலீஸில் சரணடைந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது. அவருடன் மேலும் 20 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, "மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி எங்களிடம் தான் இருக்கிறார். அவர் சரணடைந்தது குறித்து ஒன்றிரண்டு நாட்களில் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்வோம்" என்று கூறியுள்ளனர். கடந்த 2025ம் ஆண்டு மாவோயிஸ்ட் மூத்த தலைவர் நம்பலா கேசவ ராவ் (எ) பசவ ராஜ் என்கவுன்ட்டரில் இறந்தார். அவருக்குப் பதில் தேவுஜி அந்தப் பொறுப்புக்கு மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும், இந்தத் தகவல்களை மாவோயிஸ்டு அமைப்பு மறுத்துள்ளது. சரணடைபவர்களுக்கு பல்வேறு மறுவாழ்வு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

## டெல்லி விமான நிலையத்தில் ரூ. 10 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்; இருவர் கைது




புதுடெல்லி, பிப்.24:

டெல்லி விமான நிலையத்தில் கஞ்சா கடத்தப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து கடந்த 19ம் தேதி டெல்லி வந்த விமானத்தில் பயணித்த பயணிகளின் உடைமைகளை அதிகாரிகள் தீவிர சோதனை செய்தனர். அப்போது, 2 பயணிகள் கொண்டு வந்த பைகளை பரிசோதனை செய்ததில் 10 கிலோ எடை கொண்ட போதைப்பொருள் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, போதைப்பொருளை பறிமுதல் செய்த அதிகாரிகள், போதைப்பொருளை கடத்தி வந்த இந்தியாவை சேர்ந்த 2 பயணிகளை கைது செய்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளில் மதிப்பு ரூ.10 கோடி என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## "சர்வதேச நிகழ்வுகளில் கண்ணியம் முக்கியம்" - இளைஞர் காங்கிரஸ் போராட்டத்துக்கு மார்கரெட் ஆல்வா கண்டனம்

பெங்களூரு, பிப்.24:




டெல்லியில் நடைபெற்ற ஏஐ உச்சி மாநாட்டில் இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஆடையை களைந்து போராட்டம் நடத்தியதற்கு காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மார்கரெட் ஆல்வா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மார்கரெட் ஆல்வா, "சர்வதேச நிகழ்வுகளின்போது கண்ணியம் காக்கப்பட வேண்டும், ஒழுக்கம் பராமரிக்கப்பட வேண்டும், பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

டையை களைந்து போராட்டம்: டெல்லி ஏஐ உச்சி மாநாட்டில் கடந்த 20-ம் தேதி இளைஞர் காங்கிரஸை சேர்ந்த சிலர் அரங்கம் 5-ல் திடீரென நுழைந்தனர். பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புகைப்படங்கள் அச்சிடப்பட்ட டி சர்ட்களை அவர்கள் அணிந்திருந்தனர்.

அந்த டி சர்ட்களில், இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் பைல் உள்ளிட்ட வாசகங்கள் இருந்தன.

திடீரென இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் டி சர்ட்டை களைந்து பிரதமர் மோடிக்கு எதிராகவும் இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராகவும் கோஷமிட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட காங்கிரஸ் நிர்வாகிகளில் கிருஷ்ணா ஹரி, குந்தன் யாதவ், அஜய் குமார், நரசிம்ம யாதவ் ஆகிய 4 பேரை டெல்லி போலீஸார் கைது செய்தனர். அவர்களை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

5-வது நபர் கைது: ஆடைகளை களைந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 4 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில், 5வது நபர் இன்று கைது செய்யப்பட்டார்.

ஜிதேந்திர யாதவ் என்ற அந்த நபரை மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் போலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட கிருஷ்ணா ஹரியின் காரில் இருந்து போராட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்ட டி சர்ட்டுகள் மற்றும் போஸ்டர்களை கைப்பற்றி உள்ளதாக தெரிவித்த போலீஸார், மேலும் ஒரு காங்கிரஸ் நிர்வாகி பிடிபட்டுள்ளார் எனக் கூறினர்.

## காங்கிரசாரின் போராட்டம் நாட்டுக்கு அவமானம்; அகிலேஷ் யாதவ் கண்டனம்

லக்னோ, பிப்.24:

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) உச்சிமாநாடு டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெற்று கொண்டிருக்கும்போது இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இளைஞர் காங்கிரசார் சட்டைகளை கழற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு பா.ஜனதா கடும் கண்டனம் தெரிவித்தது. காங்கிரசுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் மும்பை சென்ற ராகுல் காந்திக்கு பா.ஜனதாவினர் கருப்புக்கொடி காட்டினர்.

இந்த நிலையில் ஏ.ஐ. மாநாட்டில் காங்கிரசார் சட்டைகளை கழற்றி போராட்டத்தில் ஈடுபட்டதற்கு இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள சமாஜ்வாடி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:- "நமக்குள் உள் பிளவுகள் இருக்கலாம். பா.ஜனதா பொய் சொல்கிறது என்பது நாட்டுக்கே தெரியும். ஆனால் வெளிநாட்டு பிரதிநிதிகள் பங்கேற்ற ஏ.ஐ. மாநாட்டில் அவர்களது முன்னிலையில் சட்டையை கழற்றி காங்கிரசார் நடத்திய போராட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இது நாட்டுக்கே அவமானத்தை ஏற்படுத்தும். இது மாதிரியான போராட்டம் கண்டனத்துக்குரியது," என்று அவர் கூறினார்.

## ராஜஸ்தானில் ஒரே நாளில் திருமணம் செய்ய இருந்த சகோதரிகள் இருவர் தற்கொலை

ஜோத்பூர், பிப்.24:

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் ஒரே நாளில் திருமணம் செய்ய இருந்த சகோதரிகள் இருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்த சகோதரிகள் இருவரும் ஷோபா (25) மற்றும் விமலா (23) என தெரியவந்துள்ளது. இவர்கள் ஜோத்பூரில் உள்ள மனாய் கிராமத்தை சேர்ந்தவர்கள். அவர்களுக்கு சனிக்கிழமை (பிப்.21) திருமணம் நடைபெறுவதாக இருந்தது. கல்யாண கொண்டாட்டத்துக்கு தயாராக இருந்த அவர்களின் குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கியுள்ளனர். அவர்களது தற்கொலை மரணத்துக்கான காரணம் குறித்து காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். உயிரிழந்த இருவரும் தனியார் பள்ளியில் ஆசிரியர்களாக பணியாற்றி வந்தனர். முதற்கட்ட விசாரணையில் அவர்கள் இருவரும் விஷம் அருந்தி உயிரிழந்திருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் உடற்கூறு ஆய்வறிக்கை வந்த பிறகு மரணத்துக்கான காரணம் தெரியவரும் என போலீஸார் தெரிவித்துள்ளனர். இயற்கைக்கு மாறான மரணம் என வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருவதாக போலீஸார் கூறியுள்ளனர்.

## காப்பி அடித்ததை கண்டித்த பேராசிரியரை தாக்கிய கல்லூரி மாணவர்: கர்நாடகாவில் அதிர்ச்சி சம்பவம்

பெங்களூரு, பிப்.24:

கர்நாடக மாநிலம் கலபுர்கி மாவட்டத்தில் உள்ள குவெம்பு நகரில் டாக்டர் மலகாரெட்டி ஹோமியோபதி கல்லூரி உள்ளது. அங்கு நேற்று முன்தினம் மூன்றாம் பருவ ஹோமியோபதி தேர்வு நடைபெற்றது. தேர்வு மையத்தில் ஷஃபாஸ் கான் என்ற மாணவர் செல்போனை மறைத்து வைத்து காப்பி அடித்ததை கண்காணிப்பு பணியில் இருந்த பேராசிரியர் சிவராஜ் கண்டுபிடித்தார். உடனடியாக அவரது விடைத்தாளை வாங்கிய சிவராஜ், தேர்வு மையத்தில் இருந்து வெளியே செல்லுமாறு கூறினார். இதனால் கோபமடைந்த ஷஃபாஸ் கான், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவரை முகத்தில் கடுமையாக தாக்கினார். அங்கிருந்த மற்ற மாணவர்கள் உடனடியாக ஷஃபாஸ் கானை பிடித்து வெளியே கொண்டு சென்றனர். தேர்வு மையத்தில் உள்ள சிசிடிவி கேமராவில் பதிவான இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பேராசிரியரை தாக்கிய மாணவர் ஷஃபாஸ் கான் கேரள மாநிலத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. அடுத்தடுத்த தேர்வுகளை எழுதவும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவுடன் இடைக்கால வர்த்தக ஒப்பந்தம்: பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப்.24:

இந்தியா-அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான விதிமுறைகளை இறுதி செய்வதற்காக அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் திங்கள்கிழமை (பிப்.23) நடைபெறவிருந்த இருதரப்பு பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சக வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என அமெரிக்க உச்சநீதிமன்ற தீர்ப்பளித்தது மற்றும் அந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து உலக நாடுகள் மீது புதிய சீரான 10 சதவீத பரஸ்பர வரியை செவ்வாய்க்கிழமை (பிப்.24) அமலுக்கு வரும் வகையில் டிரம்ப் விதித்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வர்த்தக அமைச்சக வட்டாரங்கள் மேலும் கூறுகையில், 'வரி விதிப்பு மீதான அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் அதன் பிறகு அமெரிக்க அரசு நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் தாக்கம் குறித்து ஆராய்வதற்கு அவகாசம் தேவை என்பதால், இடைக்கால வர்த்தக ஒப்பந்த விதிமுறைகளை இறுதி செய்ய வாஷிங்டனில் திங்கள்கிழமை (பிப்.23) நடைபெறவிருந்த இருதரப்பு பேச்சுவார்த்தையை ஒத்திவைப்பது என இரு நாடுகள் சார்பிலும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் வசதியான வேறு தேதியில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறும்' என்றனர்.

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறை டிரம்ப் பதவியேற்றதும், இந்தியா உள்பட 60 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது விதித்த அதிரடி பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் பிப்ரவரி 20-ஆம் தேதி தீர்ப்பளித்தது. இது, டிரம்ப் நிர்வாகத்துக்கு பெரும் பின்னடைவானது.

இந்தத் தீர்ப்பை மீறி, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது புதிய சீரான 10 சதவீத பரஸ்பர வரியை டிரம்ப் வெள்ளிக்கிழமை விதித்தார். இதுதொடர்பாக, டிரம்ப் கையொப்பமிட்ட பிரகடனத்தை அமெரிக்க அதிபர் அலுவலகமான வெள்ளை மாளிகை வெளியிட்டது.

இந்த நிலையில், வரி விதிப்பு தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பு காரணமாக நாட்டின் பொருளாதார சரிவு தொடர்வதால் உலக நாடுகள் மீதான 10 சதவீத பரஸ்பர வரி, 15 சதவீதமாக உயர்த்தப்படும். அவ்வாறு, உலக நாடுகள் மீது உயர்த்தப்பட்ட புதிய வரிகள் தொடர்பான விவரத்தை அமெரிக்க நிர்வாகம் அடுத்த சில மாதங்களில் வெளியிடும் என்று டிரம்ப் சனிக்கிழமை அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் கடத்தல் கும்பல் தலைவன் கொலை: மெக்சிகோவில் வன்முறை



**மெக்சிகோ சிட்டி, பிப்.24:**

மெக்சிகோ நாட்டில் உள்ள ஜாலிஸ்கோ மாகாணத்தின் டபல்பா நகரில் போதைப்பொருள் கடத்தல் கும்பலை தடுக்கும் வகையில் ஞாயிற்றுக்கிழமை அன்று ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இருதரப்புக்கும் இடையே நடைபெற்ற தாக்குதலில் பிரபல போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவன் நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்டார். இதையடுத்து அங்கு அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் இறங்கினர்.

'எல் மென்சோ' என அறியப்படும் நெமேசியோ ஒசேகுரா, அந்நாட்டின் ஜாலிஸ்கோ மாகாணத்தில் சிஜேஎன்ஜி என்ற போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவனாக செயல்பட்டு வந்தார். 59 வயதான அவர், அமெரிக்கா மற்றும் மெக்சிகோ நாட்டில் தேடப்படும் குற்றவாளியாக இருந்தார். அவரை கைது செய்ய தகவல் கொடுப்பவர்களுக்கு 15 மில்லியன் டாலர்கள் வழங்கப்படும் என இரண்டு நாடுகளும் அறிவித்தன. ஏனெனில், தனது கூட்டத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து தலைவர் பொறுப்புக்கு வந்த நெமேசியோ ஒசேகுரா, தனது குழுவின் செயல்பாடு மூலம் எதிரிகள் மற்றும் பாதுகாப்பு படையை கடுமையாக தாக்கி வந்தார். அந்த தாக்குதல் மிகவும் கொடூரமானதாக இருக்கும் என தகவல். அவர் சார்ந்துள்ள கும்பலை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க நீதித்துறை அறிவித்துள்ளது. மெக்சிகோவில் இருந்து கொக்கைன், ஹெராயின், மெத்தபெட்டமைன், ஃபெண்டானில் உள்ளிட்ட போதைப்பொருளை அமெரிக்காவுக்கு இவரது கும்பல் கடத்துகிறது. முன்னதாக, மெக்சிகோ அரசு போதைப்பொருள் கடத்தலை தடுக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தொடர்ந்து கூறி வந்தார். குறிப்பாக ஃபெண்டானில் போதைப்பொருள் கடத்தலை தடுக்க வேண்டும் என தெரிவித்தார். மேலும், மெக்சிகோவுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் அவர் அச்சுறுத்தினார். போதைப்பொருள் கும்பலின் செயல்பாட்டை தடுக்கும் செயலில் மெக்சிகோ அதிபர் கிளாடியா தலைமையிலான அரசு மேற்கொள்ளவில்லை என அவர் கூறி வந்தார்.

இந்த சூழலில் ராணுவ நடவடிக்கையில் நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்டதாக மெக்சிகோ அறிவித்தது. ராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் டபல்பாவில் போதைப்பொருள் கடத்தல் கும்பலின் நடமாட்டம் உள்ள பகுதியில் சோதனை நடந்தது.

அப்போது இருதரப்புக்கும் இடையில் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. இதில் பலத்த காயமடைந்த நெமேசியோ ஒசேகுரா உயிரிழந்தார். உயிருக்கு போராடிய அவரை வான்வழியாக மெக்சிகோ சிட்டிக்கு கொண்டு செல்ல முயன்ற போது அவர் மரணமடைந்ததாக பாதுகாப்பு படை தெரிவித்துள்ளது. நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்ட செய்தியை அறிந்து அவரது ஆதரவாளர்கள் மெச்சிகோவில் வன்முறையில் இறங்கினர். பல்வேறு மாகாணங்களில் கார் உள்ளிட்ட வாகனங்களுக்கு தீ வைத்தனர். நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர ராணுவம் நடவடிக்கையில் இறங்கி உள்ளது. நெமேசியோ ஒசேகுரா கொல்லப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

## நேபாளம்: ஆற்றில் பேருந்து கவிழ்ந்ததில் 17 பேர் பலி

அண்டை நாடான நேபாளத்தில் மேற்கு போகாராவில் இருந்து தலைநகர் காத்மாண்டுவிற்குச் பேருந்து திங்கள்கிழமை அதிகாலை சென்றுகொண்டிருந்தது. அப்போது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து மத்திய மாவட்டமான தாடிங்கில் உள்ள திரிசூலி ஆற்றில் கவிழ்ந்தது. தகவல் அறிந்ததும் நிகழ்விடத்தில் மீட்புக்குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். எனினும், இந்த விபத்தில் 17 பேர் பலியாகினர். மேலும் 27 பேர் காயமடைந்தனர். அவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்தில் சிக்கிய பேருந்தில் 44 பேர் பயணித்ததாக மாவட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். பேருந்து விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. நேபாளத்தில் சமீபத்திய ஆண்டுகளில் சாலை விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

# "மூன்றாம் உலகப் போரை புதின் ஏற்கெனவே தொடங்கிவிட்டார்" - ஜெலன்ஸ்கி

**கீவ், பிப்.24:**

மூன்றாம் உலகப் போரை ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் ஏற்கெனவே தொடங்கிவிட்டதாக உக்ரைன் அதிபர் வுலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022-ம் ஆண்டு பிப்.24-ம் தேதி உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா தொடங்கியது. இன்றுடன் போர் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இதை முன்னிட்டு பிபிசி செய்தி நிறுவனத்துக்கு தான் அளித்த பேட்டியின் சுருக்கத்தை, வுலோடிமிர் ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பது: 'வான் பாதுகாப்பு என்பது இன்று மிகவும் சவாலான பிரச்சினையாக உள்ளது. துரதிருஷ்டவசமாக, வான் பாதுகாப்பு அமைப்புகளை நாங்களே தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை எங்கள் நட்பு நாடுகள் எங்களுக்கு வழங்கவில்லை. குறைந்தபட்சம் ஏற்கெனவே உள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளுக்கான ஏவுகணைகளை தயாரிக்க வேண்டும். இதுவரை நாங்கள் அதில் வெற்றி பெறவில்லை.



இந்தப் போரில் உக்ரைனை வலிமையாக்க வேண்டும் என்றால், எங்கள் வான் பரப்பை மூட வேண்டும், பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும், பொருளாதாரம் செயல்பட வேண்டும், பணப்புழக்கம் இருக்க வேண்டும், வரிகள் மூலம் கிடைக்கும் பணம் ராணுவத்துக்குச் செலவிடப்பட வேண்டும். இந்த வழியில்தான் நாங்கள் எங்கள் ராணுவத்தை பலப்படுத்துகிறோம். துரதிருஷ்டவசமாக இது இன்னும் நடக்கவில்லை. ஏவுகணைகளுக்கான உரிமங்களாவது எங்களுக்குத் தேவை.

மூன்றாம் உலகப் போரைப் பற்றி பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. புதின் அதை ஏற்கெனவே தொடங்கிவிட்டார் என்றே நான் நம்புகிறேன். கேள்வி என்னவென்றால், அவர் எவ்வளவு நிலப்பரப்பை கைப்பற்ற முடியும் என்பதும் அவரை தடுப்பது எப்படி என்பதும்தான். ரஷ்யா வெற்றி பெறுவதை தடுக்க வேண்டும். ஏனெனில், ரஷ்யா தனது சொந்த உலகத்தை மற்றவர்கள் மீது திணிக்கிறது. மக்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே தேர்வு செய்வதை மாற்றுகிறது. அதனால்தான், புதின் மூன்றாம் உலகப் போரை ஏற்கெனவே தொடங்கிவிட்டதாக நான் நம்புகிறேன். இது பரந்த, முழு அளவிலான மூன்றாம் உலகப் போராக மாறுவதை நாங்கள்தான் தடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

# தாயால் கைவிடப்பட்டு மீண்டும் கூட்டத்தில் இணைந்த குட்டிக் குரங்கு - வீடியோ வைரல்

**டோக்கியோ, பிப்.24:**

ஜப்பானில் உள்ள ஓர் உயிரியல் பூங்காவில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் மக்காவ் வகை குரங்கு குட்டிகளை ஈன்றது. இதில் ஒரு குட்டியை மட்டும் அந்த தாய் குரங்கு விரட்டியது.

உயிரியல் பூங்கா நிர்வாகிகள் அந்தக் குட்டிக் குரங்குக்கு தனியிடத்தை ஏற்பாடு செய்து அது விளையாடி மகிழ உர்ராங் உடான் வகை குரங்கு பொம்மையைக் கொடுத்தனர். இந்தக் குரங்குக் குட்டிக்கு 'பஞ்ச்' என்று பெயர் வைத்தனர். அந்த பொம்மையுடன் குட்டிக் குரங்கு விளையாடி வந்தது. இது தொடர்பான வீடியோ, புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலானது.



குட்டி குரங்குக்கு ஆதரவாக சோஷியல் மீடியாக்களில் பலரும் குரல் கொடுத்தனர். தற்போது 7 மாதமாகும் இந்த குரங்குக் குட்டியை, பார்க்க பொதுமக்கள் அதிக அளவில் பூங்காவுக்கு வருகின்றனர். இது குறித்து உயிரியல் பூங்கா காப்பாளர் கோசுக்கே ஷிகானோ கூறும்போது, "பஞ்ச் குரங்குக் குட்டிக்கு இப்போது ரசிகர்கள் அதிகமாகி விட்டனர். உர்ராங் உடான் குரங்கு பொம்மையுடன் பஞ்ச் விளையாடி வருகிறது. பிற்காலத்தில் இது தனது இனத்தோடு சேர்ந்து வாழ இந்த பொம்மை உதவும்" என்றார்.

குரங்குக்குட்டியை வாங்குவதற்கு பிரபல தொழிலதிபர் டிரிஸ்டன் டேட் முன்வந்துள்ளார்.

இதற்காக 25 ஆயிரம் டாலர் (இந்திய ரூபாயில் சுமார் ரூ.2.26 கோடி) தரவும் அவர் முன்வந்தார். இதை தனது எக்ஸ் தள பக்கத்திலும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்த ஊடகவியலாளரும், தொழிலதிபருமான எமோரி ஆண்ட்ரூ டேட்டின் தம்பி தான் இந்த டிரிஸ்டன் டேட்.

இந்நிலையில் குட்டிக்குரங்கு பஞ்ச் தனது குரங்குக் கூட்டத்துடன் மீண்டும் ஒன்றிணைந்துள்ளது.

## டிரம்ப் இல்லத்தில் துப்பாக்கியுடன் அத்துமீறி நுழைந்த இளைஞர் சுட்டுக் கொலை

**வாஷிங்டன், பிப்.24:**

அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் இல்லத்துக்குள் அத்துமீறி துப்பாக்கியுடன் நுழைந்த இளைஞர் சட்ட அமலாக்க அதிகாரிகள் சுட்டுக்கொன்றனர்.

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் உள்ள டிரம்ப்பின் மார்-அ-லாகோ இல்லத்துக்குள், கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு துப்பாக்கி, எரிவாயு கேனுடன் இளைஞர் ஒருவர் அத்துமீறி நுழைந்தார்.

அவரைக் கண்ட சட்ட அமலாக்க அதிகாரிகள், துப்பாக்கியையும் எரிவாயு கேனையும் கீழே போட்டுவிட்டு சரணடையுமாறு தெரிவித்தனர். எனினும் எரிவாயு கேனை கீழே போட்ட அவர், அதிகாரிகளை சுடும் விதமாக துப்பாக்கியை உயர்த்தியதாகக் கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து தங்களை தற்காத்துக்கொள்ளும் நோக்கில், அந்த இளைஞரை அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர். அந்த நபர் வடக்கு கரோலினாவைச் சேர்ந்த ஆஸ்டின் டக்கர் மார்டின் (21) என்று தெரியவந்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் எதற்காக அவர் டிரம்ப்பின் இல்லத்துக்குள் நுழைந்தார் என்ற தகவல் வெளியாகவில்லை. இந்த சம்பவம் நடைபெற்றபோது டிரம்ப், அவரின் மனைவி மெலானியா டிரம்ப் ஆகியோர் வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் இருந்தனர்.

## போர் விமானங்கள் கொள்முதல் செய்ய 90 கோடி டாலர் ஒப்பந்தம்: சோமாலியா பேச்சுவார்த்தை

**இஸ்லாமாபாத், பிப்.24:**

ஆப்பிரிக்க நாடான சோமாலியா பாகிஸ்தானிடமிருந்து போர் விமானங்கள் கொள்முதல் செய்ய பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சோமாலிய விமானப்படைத் தலைமைத் தளபதி முகமது ஷேக் அலி பிப்ரவரி தொடக்கத்தில் பாகிஸ்தானுக்குச் சென்றிருந்தார். அப்போது சோமாலியாவுக்கு பாகிஸ்தானின் ஜே. எஃப். - 17 தண்டர் ப்ளாக்-3 போர் விமானங்கள் கொள்முதல் செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சோமாலியாவுக்கு 24 போர் விமானங்கள் கொள்முதல் தொடர்பாகப் பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்தை எட்டியிருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. சீனா மற்றும் பாகிஸ்தானின் கூட்டு முயற்சியால் தயாரிக்கப்படும் இலகு ரக போர் விமானமான ஜே. எஃப். - 17 தண்டர், கடந்தாண்டு இந்தியாவுக்கு எதிரான ஆபரேசன் சிந்தூர் சண்டையில் திறம்படச் செயல்பட்டதாக பாகிஸ்தான் சுட்டிக்காட்டியிருந்தது. எனினும், அவற்றின் திறன் குறித்த விவரங்கள் முழுமையாக வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், இந்தப் போர் விமானங்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக, பாகிஸ்தானுடனான சோமாலியாவின் 90 கோடி டாலர் ஒப்பந்தம் விரைவில் கையொப்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சோமாலியாவில் தொடர் வறட்சி மற்றும் அதிகரித்து வரும் மோதல்களால் சுமார் 44 லட்சம் மக்கள் உணவின்றித் தவிக்கின்றனர். இதில் சுமார் 10 லட்சம் மக்கள் ஒரு வேளை உணவுக்கே வழியின்றி உயிர் பிழைக்கப் போராடி வருவதாக ஐ.நா.வின் உலக உணவுத் திட்டம் அமைப்பு எச்சரித்துள்ளது கவனிக்கத்தக்கது.

## அதிபர் ட்ரம்ப் கொள்கைகள் மீது 60% பேர் அதிருப்தி!

**வாஷிங்டன், பிப்.24:**

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கொள்கைகள் மீது 60 சதவீதம் பேர் அதிருப்தி கொண்டிருப்பதாக ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையிலான அரசின் கொள்கைகள் குறித்து ஏபிசி நியூஸ், வாஷிங்டன் போஸ்ட் ஆகியவை இப்சோஸ் நிறுவனத்தின் அறிவுத்திறன் குழுவினருடன் இணைந்து ஒரு ஆய்வை நடத்தியது.

அமெரிக்காவின் பண வீக்கம், மற்ற நாடுகளின் பொருட்கள் மீதான இறக்குமதி வரி, வெளிநாட்டு உறவுகள் மேலாண்மை ஆகிய பிரிவுகளில் இந்த கருத்துக்கணிப்பு அமெரிக்க மக்களிடம் நடத்தப்பட்டது.

இந்த ஆய்வுகளின் முடிவில் பெரும்பாலான மக்கள் அமெரிக்க அதிபரின் கொள்கைகள் மீது அதிருப்தி அடைந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக 60 சதவீதம் பேர் ட்ரம்ப்பின் கொள்கைகளை விரும்பவில்லை. இந்த ஆய்வானது, அதிபர் விதித்த வெளிநாட்டு பொருட்கள் மீதான வரியை, அமெரிக்க நீதிமன்றம் ரத்து செய்வதற்கு சற்று முன்பாக நடத்தப்பட்டது.

அதிபர் ட்ரம்ப், பண வீக்கத்தைக் கையாளும் விதத்தை 3 அமெரிக்கர்களில் 2 பேர் ஏற்கவில்லை. 10 பேரில் ஆறு பேர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான வரிகள் விவகாரத்தில் அவர் கையாளும் விதத்தையும் விரும்பவில்லை. குடியேற்றம் தொடர்பான ட்ரம்ப்பின் கொள்கைகளை 58 சதவீத மக்கள் எதிர்த்துள்ளனர். அதேபோல் 57% பேர் ஒட்டுமொத்தமாக பொருளாதாரக் கொள்கைகள் விவகாரத்தில் அதிபர் ட்ரம்ப் கையாளும் விதத்தையும் ஏற்கவில்லை என ஆய்வில் தெரியவந்துள்ளது.

# ஆப்கன் எல்லையில் பாகிஸ்தான் நடத்திய வான்வழித் தாக்குதல் - பலி 80 ஆக அதிகரிப்பு

**இஸ்லாமாபாத், பிப்.24:**

ஆப்கனிஸ்தானுக்கு உட்பட்ட எல்லைப் பகுதிகள் மீது பாகிஸ்தான் விமானப் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 80-க்கும் மேலாக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையேயான எல்லைப்புற மோதல்கள் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வருகின்றன. தலிபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹார் மற்றும் பாக்டிகா மாகாணங்களில் அடிக்கடி பாகிஸ்தான் விமானப்படை வான் வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், நேற்று திடீரென நங்கர்ஹார் பகுதியில் பாகிஸ்தான் விமானப் படை வான்வழித் தாக்குதலை நடத்தியது. இந்த பயங்கரத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 80-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 20-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். எனினும், இந்த தாக்குதல் தெஹ்ரீக் இ தலிபான் பாகிஸ்தான் (டிடிபி) என்ற தங்கள் நாட்டில் தடை செய்யப்பட்ட அமைப்பினரை குறிவைத்து நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்லாமாபாத், பஜவுர், பன்னு ஆகிய இடங்களில் நடந்த தொடர் தற்கொலைப் படைத் தாக்குதல்களில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், இந்த தாக்குதலில் 80-க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பாகிஸ்தான் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் பாகிஸ்தான் மக்கள் பாதுகாப்புப் படையினருடன் உறுதியாக நிற்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்த தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் தகவல் ஒலிபரப்பு நாடாளுமன்றச் செயலாளர் டான்யால் சவுத்ரி வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆப்கனிஸ்தான் பல பயங்கரவாத குழுக்களுக்கு புகலிடமாக உள்ளது. ஐநா அறிக்கையின்படி, 21 பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்த போராளிகள் ஆப்கனிஸ்தானில் இருந்து செயல்பட்டு வருகின்றனர். இது பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு கடுமையான அச்சுறுத்தலாக உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக, ஆப்கனிஸ்தானில் இருந்து செயல்படும் பயங்கரவாதிகளை மட்டுமே குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. அப்பாவி மக்களைப் பாதுகாக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பாகிஸ்தான் எப்போதும் அமைதியை விரும்புகிறது. ஆனால், ஆப்கனிஸ்தானின் மண், மறைமுகத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்படுவதால், நமது நாட்டை பாதுகாப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. தேசிய பாதுகாப்பில் நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானை விட்டு உடனடியாக வெளியேற இந்தியர்களுக்கு தூதரகம் அறிவுறுத்தல்

**தெஹ்ரான், பிப்.24:**

ஈரானில் பதற்றம் அதிகரித்திருப்பதால் அந்நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அங்குள்ள இந்தியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெஹரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த ஜனவரி 5-ம் தேதி இந்திய அரசு வெளியிட்ட ஆலோசனையின் தொடர்ச்சியாக இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது. ஈரானில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அங்குள்ள இந்தியர்கள் குறிப்பாக மாணவர்கள், யாத்ரீகர்கள்,



வணிகர்கள், சுற்றுலாப் பயணிகள் முதலானோர் வணிக விமானங்கள் உள்ளிட்ட கிடைக்கக் கூடிய போக்குவரத்து வழிகள் மூலம் ஈரானை விட்டு வெளியேற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஈரானில் உள்ள இந்தியர்களுக்கு கடந்த ஜனவரி 14-ம் தேதி தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன. அனைத்து இந்திய குடிமக்களும், இந்திய தகவல் தொடர்பு அதிகாரிகளும் உரிய எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

போராட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். ஈரானில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும். அவசர தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள உள்ளூர் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை அறிந்து கொள்ள வேண்டும்.


தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தை, +989128109115; +989128109109; +989128109102; +989932179359 ஆகிய தொலைபேசி எண்கள் மற்றும் CONS.TEHRAN@MEA.GOV.IN என்ற இமெயில் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

ஈரானில் இருக்கும் இந்தியர்களில் யாரேனும் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யாமல் இருந்தால், அவர்கள் MEAERS.COM/REQUEST/HOME என்ற இணைப்பின் மூலம் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த இணைப்பு இந்திய தூதரக இணையதளத்திலும் உள்ளது.

ஈரானில் இணைய தடைகள் காரணமாக இங்குள்ள இந்தியர்களால் பதிவு செய்ய முடியாவிட்டால், இந்தியாவில் உள்ள அவர்களது குடும்பத்தினர் அவர்களுக்காக பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தமிழ்நாட்டில் மொத்தம் 5.67 கோடி வாக்காளர்கள்!



## விஜய் கொடுத்த வாக்குறுதி; எனக்கும் ஸ்டாலின் சாருக்கும் நடக்கிற போர்



## தெலங்கானாவில் மாவோயிஸ்டு கமாண்டர் தேவுஜி உட்பட 21 பேர் போலீஸில் சரண்

## ரூ.61 ஆயிரம் மதிப்பிலான கேமராவுக்கு பதில் பார்சலில் வந்த சலவைத்தூள் பாக்கெட்

## அமெரிக்காவுடன் இடைக்கால வர்த்தக ஒப்பந்தம்: பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 24.02.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ–பேப்பர்